# குடியரசு வாசகம்

## எட்டாம் புத்தகம்

347
152



FEB 1952
MADRAS

…ாக்கியம் பிள்ளை

திருநெல்வே…

TB
031(8)
N51

# குடியரசு வாசகம்

## எட்டாம் புத்தகம்

பொதுப்பகுதி

(மூன்றும் பாரத்திற்குரியது)

[1951-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட புதிய பாடத்தின்படி
எழுதப் பெற்றது]

ஆசிரியர்:

வித்துவான், சங். எமிரென்சியா மேரி,

மரியன்னைக் கல்லூரி, தூத்துக்குடி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 FEB 1952
MADRAS

வெளியிடுவோர்:

A. V. D. பாக்கியம் பிள்ளை

தூத்துக்குடி :: திருநெல்வேலி

உரிமையுள்ளது] 1951 [விலை அணா 12

முதற் பதிப்பு—1951.

1B
93172
1951

தமிழ்நாடு அவணக் காப்பக நூலகம்
88383
சென்னை-600 008.

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# முன்னுரை

குடியரசு வாசகம் என்னும் பெயருடன் வெளிப் போதரும் நூல் வரிசையில் இது எட்டாம் புத்தகம். அரசியலார் 1951-ஆம் வருடம் வெளியிட்ட புதிய பாடத் திட்டத்தை முற்றிலும் தழுவி இது ஆக்கப் பெற்றுளது. மாணவ மாணவிகளின் மன நிலையையும், அவர்தம் தமிழறிவின் எல்லையையும் மனத்திற் கொண்டு இஃது இயற்றப் பெற்றுள்ளது.

இந்நூலின்கண் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு பாடமும் நல்ல நடையில் மாணவர்க்குப் பழக்கம் உண்டாக்கும் பொருட்டும், சிந்தனைத் திறனைத் தூண்டும் வகையிலும் இயன்றிருத்தல் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் பாடப் பொருளை நினைவூட்டும் வகையில் **வினாக்கள்** தரப்பட்டுள்ளன. அதன்பின் பயிற்சிப் பகுதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் பல வகையான **மொழிப் பயிற்சிகள்** அந்தந்தப் பாடங்களுக்குப் பொருந்தும் வகையில் தரப்பட்டுள்ளன. அதோடு மாணவர்களின் கட்டுரை ஆற்றலை வளர்க்கும் வகையில் **கட்டுரைப் பயிற்சிகளும்** கொடுக்கப்பட்டுள்ளன. கட்டுரை எழுதுவதற்கும், சொற்பொழிவாற்றுவதற்கும் முதற்கண் தயாரிக்க வேண்டும் குறிப்புக்கள் பற்றிய சிந்தனைப் பயிற்சிகளையும் அங்கங்கே காணலாம்.

செய்யுட்பாடம், கடவுள் வணக்கம், இயற்கைக் காட்சி, நீதிப் பகுதி, கதைப் பகுதி, பல்சுவைப் பாடல்கள் எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. செய்யுட்கள் பல சமயத்து மாணவ மாணவிகளையும் கருதி அமைக்கப்பட்டுள்ளன. பாடத் திட்டத்தில் குறிப்பிட்டபடி எளிய இனிய திருக்குறள் பாடல்கள் இதன்கண் இடம் பெற்றுள்ளன. செய்யுட்பாடத்திற்குக் குறிப்புரைகளும் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூல் அச்சாகுங்கால் ஏடுகளைப் பரிசோதித்து இன்றியமையாத திருத்தங்கள் செய்து உதவிய திருவாளர் வித்துவான் **மு. சண்முகம் பிள்ளை** அவர்கட்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக. பள்ளித் தலைவர்களும், ஆசிரியர்களும் இவ்வரிசைப் பாடப் புத்தகங்களைச் சிறுவர் சிறுமியர் படித்து பயனடைவதற்கு ஆவன செய்யுமாறு வேண்டுகின்றேன்.

**ஆசிரியர்**

# உள்ளுரை

## உரைநடைப் பாடம்


| எண் | பாடம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஜவஹர்லால் நேரு | ... | 1 |
| 2. | நமது கொடியின் வரலாறு | ... | 6 |
| 3. | நல்லார் இணக்கம் | ... | 10 |
| 4. | உருளைக்கிழங்கு | ... | 15 |
| 5. | வடமுனை கண்ட வீரர் பியரி | ... | 19 |
| 6. | இராஜ ராஜ சோழர் | ... | 24 |
| 7. | கரும் பொன் தொழில் | ... | 28 |
| 8. | வானொலி | ... | 33 |
| 9. | கூனன் கதை | ... | 37 |
| 10. | பாலை வாசிகள் | ... | 42 |
| 11. | காகிதம் செய்தல் | ... | 48 |
| 12. | உண்டி கொடுத்த உதியன் | ... | 52 |
| 13. | கிள்ளி வளவனும் நாகனாரும் | ... | 56 |
| 14. | கருணாகரத் தொண்டைமான் | ... | 60 |
| 15. | நடனக் கலை | ... | 64 |
| 16. | சுவாமி விவேகானந்தர் கடிதம் | ... | 70 |
| 17. | கோவூர் கிழார் | ... | 76 |
| 18. | பண்டைத் தமிழர் மாண்பு | ... | 80 |


## செய்யுட் பாடம்


**I. கடவுள் வணக்கம்**

1. கலைமகள் 2. சிவபெருமான் 3. இயேசுநாதர் 85
4. மனத்திற்கு முறையீடு ... 86

**II. இயற்கைக் காட்சி**

1. நாஞ்சி நாடு ... 86
2. சித்திரா நதி 3. வெண்ணிலா ... 87

**III. நீதிப் பகுதி**

1. அறநெறிச்சாரம் 2. நாலடியார் ... 88
3. ஆசாரக் கோவை 4. திருக்குறள் ... 89

**IV. கதைப் பகுதி**

1. இரட்சகர் ... 94
2. பொரிமாத் தோண்டி ... 98
3. நள வெண்பா ... 100

**V. பல்சுவைப் பாடல்கள்**

1. தமிழின் சிறப்பு 2. உழவின் உயர்வு
3. குறளின் பெருமை 4. அம்மானை
5. கோடிப் புண்ணியம் ... 102

செய்யுட்பாடக் குறிப்புரை ... 103

# குடியரசு வாசகம்

## (எட்டாம் புத்தகம்)

### பொதுப் பகுதி

### உரைநடைப் பாடம்

### 1. ஜவஹர்லால் நேரு

நமது தாய்நாடு இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின்கீழ் அடிமைப்பட்டுக் கிடந்தகாலத்தில், அதன் உரிமைக்காகப் பெருந்தலைவர்கள் பலர் போராடினர். அவர்களுள் இந்தியச் சுதந்திரச் சிற்பியாக விளங்கிய காந்தி அடிகளுக்கு அடுத்த படியாகப் புகழ் பெற்று விளங்குபவர் **ஜவஹர்லால் நேரு**; காந்தி அடிகளாலேயே, 'என் அரசியல் வாரிசு' என்று கூறப்படும் உயர்நிலை பெற்றவர்; செல்வக் குடும்பத்தில் பிறந்து கணக்கற்ற செல்வம் காலடியில் குவிந்து கிடந்தும், அதை எட்டி உதைத்து விட்டு இந்திய மக்களுக்காக உழைப்பவர். அவர் ஒப்பற்ற அறிவாளி; தலைசிறந்த எழுத்தாளர்; உணர்ச்சி செறிந்த தமது பேச்சால் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பியவர்; நாட்டின் திலகம். மேலும் அவர் பன்முறை சிறைசென்ற அஞ்சா நெஞ்சுறுதி படைத்த வீரர்; பாரத மக்களை அடிமை இருளி



ஜவஹர்லால் நேரு

லிருந்து ஒளி உலகிற்கு அழைத்துச் சென்ற மங்காத மணி விளக்கு. ஜவஹரது வாழ்க்கை வரலாறு மாணவர்களுக்கு ஓர் எழுச்சியைக் கொடுப்பதாகும்.

ஜவஹர்லால் நேரு காஷ்மீரத்தைச் சேர்ந்த ஒரு பழமை யான குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய மூதாதையர்களில் ஒருவரான **ராஜ்கால்** என்பவர் அப்போது டில்லியை ஆண்டு வந்த முஸ்லிம் அரசரின் வேண்டுகோளுக்கிணங்கி டில்லி வந்து குடியேறினர். இத்தகைய சிறந்த குடும்பத்தில் வந்த **பண்டித மோதிலால் நேருவே** நமது ஜவஹரின் தந்தையார். அவர் சிறந்த அறிவாளி; புகழ்பெற்ற வழக்கறிஞர்; பெருஞ்செல்வர். அவ ரது இல்லறத் துணைவியார் **சொரூப ராணி** அம்மையார். இவர்க ளது அருந்தவப் புதல்வராக ஜவஹர்லால் நேரு 1889-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 14-ஆம் நாள் பிறந்தார்.

ஜவஹரை அவர்தம் பெற்றோர் செல்வமாக வளர்த்து வந்தனர். அவர் தந்தையிடம் அளவற்ற மதிப்புடையவர். அன்னையிடம் அவருக்கு எல்லையற்ற அன்பு உண்டு. ஜவஹ ருக்குப் பத்து வயது நடக்கும்பொழுது **ஆனந்த பவனம்** என்ற ஒரு புதிய மாளிகையைக் கட்டி மோதிலால் அதில் குடியேறி னர்; மேனாட்டார் போலவே வாழ்க்கை நடத்தினர். ஆனந்த பவனத்தில் ஜவஹர் ஓர் அரசகுமாரன் போல் வாழ்ந்து வந் தார்.

ஜவஹருக்குப் பத்து வயதாகும் பொழுது ஒரு சகோதரி பிறந்தாள். இச்சகோதரிதான் **விஜயலட்சுமிப் பண்டிதை**. இவ் வம்மையார் ரஷ்யாவில் இந்திய அரசியல் தூதராக இருந்து நம் நாட்டு நலனுக்காகப் பல துறைகளிலும் உழைத்தார். இப் பொழுது அம்மையார் அமெரிக்காவில் தூதராக இருந்து வரு கின்றார். பரந்த நோக்கமும் விரிந்த சிந்தையுமுள்ள இவ் வம்மையார் தம் பதவியைச் செவ்வனே நிர்வகித்து ஐரோப்பிய ராஜதந்திரிகளுக்குள்ளே சிறந்த பெயரெடுத்துள்ளார்; அதன் மூலம் நம் நாட்டின் பெருமையை எங்கும் நிலை நாட்டி வரு கின்றார்.

ஜவஹர் பதினைந்து வயது வரை வீட்டிலேயே **பெர்டினண்டு புருக்ஸ்** என்னும் ஆங்கில ஆசிரியரிடம் கல்வி பயின்று வந்தார். அக்காலத்தில் இவர் பல நூல்களையும் கற்றுத் தமது அறிவைப்

பெருக்கிக் கொண்டார். அதன் பின்னர், அவர் 1905-ல் இங்கிலாந்துக்குச் சென்று **ஹாரோ** என்ற பிரசித்தி பெற்ற கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்கத் தொடங்கினர். ஜவஹர் 1912-வரை இங்கிலாந்தில் கல்வி கற்றுப் 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றார். அக்காலத்தில்தானே இந்தியாவில் எழுந்த சுதந்திரப் போரைப் பற்றியும், அரசியலாரின் அடக்கு முறைகளைப்பற்றியும் அறிந்தார். இந்தியரின் நலனுக்காக இங்கிலாந்தில் **கோகலே** செய்த வீரச் சொற்பொழிவு இவரது மனத்தைக் கவர்ந்தது. 'என் தாய் நாட்டு உரிமைக்காகப் போராடுவேன்' என்ற தீர்மானத்துடன் திரும்பினர்.

ஜவஹர் இந்தியாவை அடைந்ததும் அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்து கொண்டார். ஆனல், அவர் மனம் அத்தொழிலை விரும்பவில்லை. ஆகவே, அவர் காங்கிரசுக் கட்சியில் சேர்ந்து முதன்முதல்தென் ஆப்பிரிக்கா இந்தியர்களின் நலத்திற்காக ஏற்பட்ட கிளர்ச்சியில் கலந்துகொண்டார்; நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து தென் ஆப்பிரிக்கா இந்தியர் ஆதரவு நிதிக்காக ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேலாகத் திரட்டிக் கொடுத்தார். 1916-ல் அவர் அன்னிப் பெசண்டு அம்மையாரோடும், காந்தி அடிகளோடும் நெருங்கிப் பழகச் சந்தர்ப்பம் வாய்த்தது. அதுமுதல் உரிமையில் வேட்கை மிக்கவராய் அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபட்டுழைக்கலானர்.

ஜவஹர்லால் 1915-ல் **கமலாநேரு** என்னும் அம்மையாரைத் திருமணம் செய்துகொண்டார். அவ்வம்மையார் கணவனுக்கு ஏற்ற காரிகையார்; நல்லறிவும் ஒழுக்கமும் பொருந்தப் பெற்றவர்; இல்லற நெறியை இனிதே நடத்துதலில் இணையற்றவர்; கணவரைப்போல் உரிமைப்போரில் ஆர்வங்கொண்டவர்.

இந்திய உரிமைப் போரில் பங்கு பெற எண்ணி மோதிலாலும் அரசியல் வாழ்வில் ஈடுபட்டார். ஆனல், அவர் மிதவாதியாக இருந்தார். முற்போக்கு வாதியான ஜவஹருக்கு இது பிடிக்கவில்லை. இதனல் தந்தைக்கும் மகனுக்கும் அடிக்கடி வாதங்கள் நிகழும். இங்கிலையில் நாட்டில் பல கொடிய நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. ஜவஹரது முற்போக்கும் காந்தியடிகளின் நட்பும், பஞ்சாப் படுகொலை நிகழ்ச்சியும் சேர்ந்து, மித

வாதியாக விளங்கிய மோதிலாலை முற்போக்கு வாதியாக்கி விட்டன. பஞ்சணை மெத்தையில் படுத்தபடி பல நூற்றுக் கணக்கான மக்களை ஏவிக்கொண்டு இன்பவாழ்க்கை நடத்தி வந்த மோதிலால், அதைத் துறந்து எளிய வாழ்க்கையை மேற் கொண்டார். ஆனந்தபவனம் என்னும் தம் அழகிய மாளிகை யைச் **சுயராஜ்ய பவனம்** எனப் பெயரிட்டுக் காங்கிரசு மகா சபைக்கு நல்கினார்; மிகுந்த ஊதியம் வரக்கூடிய தமது வக்கீல் தொழிலைத் துறந்து காங்கிரசில் சேர்ந்தார்; தமது அரிய உழைப்பால் விரைவில் அதன் தலைவரானார்.

முற்போக்கு வாதியாக விளங்கிய ஜவஹர் 1921-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்த பொழுது தமது எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டினார். அத னால் அரசியலார் அவருக்கு மூன்றுமாதத் தண்டனையும், மோதிலாலுக்கு ஆறு மாதத் தண்டனையும் கொடுத்தார்கள். அவர்கள் சிறைக்குச் சென்றது அதுதான் முதல் தடவை. அதன் பின்னர், ஜவஹர் தாய் நாட்டிற்காகப் பல தடவை சிறை சென்றிருக்கிறார். அவரது வாலிபப் பருவத்தின் பெரும் பகுதி சிறைவாசத்திலேயே கழிந்தது எனலாம்.

அவர் அரசியல் கிளர்ச்சியில் ஈடுபட்டதும் முதன் முத லாகத் தாம் பிறந்த பெருநகராகிய அலகாபாத் நகராண்மைக் கழகத்தின் தலைவராக இருந்து தொண்டாற்றினார்: பின்னர்க் காங்கிரசு சபையின் செயலாளராகவும், நான்கு தடவைக் காங் கிரசுத் தலைவராகவும் இருந்து நாட்டுப் பணி புரிந்தார்.

குடும்பத்தில் இடுக்கண் பல அடுக்கி வந்தன. முதன் முதல் நேசத் தந்தை காலஞ்சென்றார். பின்னர் வாழ்க்கைத் துணைவி கமலா நேரு, அதன் பின்னர் அன்னை சொரூப ராணி யார்: இவ்விதம் ஒவ்வொருவராக அவரைவிட்டுப் பிரிந்து சென் றனர். ஆயினும், ஜவஹர் மனங் கலங்காது நம் நாடு அந்நிய ஆட்சியினின்று விடுதலையடையுமட்டும் உரிமைப் போரில் முன்னணியில் நின்றார். நாடு விடுதலையடைந்து குடியரசான தும் அவரே முதன்மந்திரியாக விளங்குகின்றார்.

ஜவஹர் பொது நலத்துக்காகத் தன்னலங் துறந்த தியாகி; உலகில் பல நாடுகளிலுமுள்ள அறிஞர்களின் நட்பையும், நன் மதிப்பையும் பெற்றவர். இந்தியாவில் மட்டுமின்றி உலகத்தி

லேயே ஒப்புயர்வற்ற தலைவராக விளங்கும் நேரு, 'ஒரு வீரனுக்குள்ள உயர்வும் ராஜ தந்திரிக்குள்ள புத்தியும் உடையவர்' என்று காந்தியடிகளால் புகழப்பட்ட நேரு கோடிக் கணக்கான இந்திய மக்களின் நம்பிக்கைக்கு உரியவராய் விளங்கி வருகிறார்.

## வினாக்கள்

1. ஜவஹர் எங்கு எப்பொழுது பிறந்தார் ?
2. ஜவஹரின் இளமைப் பருவத்தைப் பற்றி நீர் அறிவதென்ன ?
3. விஜயலட்சுமிப் பண்டிதையின் சிறந்த குணங்கள் யாவை?
4. ஜவஹர் மேனாட்டில் பெற்ற பட்டம் யாது? அங்கு அவர் அடைந்த அனுபவம் யாது?
5. ஜவஹர் இந்தியாவை அடைந்ததும் செய்ததென்ன ?
6. கமலா நேருவின் சிறந்த குணங்கள் யாவை ?
7. மோதிலால் முற்போக்கு வாதியாகக் காரணமென்ன ?
8. ஜவஹர் முதன் முதல் சிறைசெல்லக் காரணமென்ன ?
9. ஜவஹருக்கு அடுக்கிவந்த இடுக்கண்கள் யாவை ?
10. ஜவஹரின் சிறந்த குணங்கள் யாவை ?

## பயிற்சி

1. எதிர்ச் சொல் கூறுக :—இருள், இல்லறம், முன்னணி, நம்பிக்கை, உயர்வு, பழமை.

2. வாக்கியங்களில் அமைக்க :—ஈடுபட்டு, இடுக்கண், முன்னணி.

3. (1) மாளிகையை + கட்டி = மாளிகையைக் கட்டி.
மக்களை + தட்டி = மக்களைத் தட்டி.

(2) இங்கிலாந்துக்கு + சென்று = இங்கிலாந்துக்குச் சென்று.
அமெரிக்காவுக்கு + போனார் = அமெரிக்காவுக்குப் போனார்.

மேற்கண்ட சந்திகளிலிருந்து வல்லினம் மிகும் இடங்கள் இரண்டைத் தெரிந்துகொள்க.

4. 'ஜவஹரின் வாழ்க்கை' என்பதைப் பற்றிச் சொற்பொழிவாற்றக் குறிப்புக்கள் தயாரிக்க.

5. ஜவஹரின் தேசத் தொண்டு என்பது பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.



## 2. நமது கொடியின் வரலாறு

பண்டை நாட்களிலிருந்தே ஒவ்வொரு கூட்டத்திற்கும், சமுதாயத்திற்கும் தனித்தனியான கொடி இருந்து வந்திருக்கிறது; இன்றும் அப்படியே இருந்து வருகிறது. அரசாங்கம் ஒரு குடும்பத்துக்குச் சமமானது. அரிஸ்டாட்டில் என்னும் மேதாவி 'அரசாங்கம் ஒரு பெரிய குடும்பம்' என்கிறார். கொடி முதன்முதல் ஒரு குழுவில் தோன்றியதல்ல; ஒரு மனிதனிடம் தோன்றியதாகும். நம் பண்டை மூதாதைகள் காடுகளில் வாழ்ந்த காலத்துப் புள்ளினங்களின் வண்ணச் சிறகுகளைத் தம் தலை முடியில் செருகிக்கொண்டிருந்தனர். ஒருவனை அவன் தலையில் செருகி இருக்கும் சிறகின் நிறத்தையும் அமைப்பையும் கொண்டே அவன் இப்படிப்பட்டவன், இன்ன தொழில் செய்யத் தகுதியுள்ளவன் எனத் தீர்மானிப்பராம்.

நாளடைவில் இம்முறை ஒரு குடும்பத்தினருக்காயிற்று. ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் அனைவரும் ஒரு வகையான சிறகையே செருகி வைத்துக்கொண்டனர். சிறிது காலத்திற்குப் பின் குடும்பத்திற்கு ஒரு வகைச் சிறகு என்பது மாறி, ஒரு குழுவிற்கு ஒரு வகைச் சிறகென்றானது.

நாகரிகம் வளரவளர மக்களும் தங்கள் நிலையை உணர்ந்தனர். காட்டு விலங்குகளை வேட்டையாடிக் கொன்று உண்ட

பின் அவற்றின் தோல்களைப் போர்த்து வந்த மக்கள் செடிகளி லிருந்து நார் எடுத்துத் துணிகள் நெய்ய ஆரம்பித்தனர். இவ் விதம் நெய்த துணிகளில் தமக்கு விருப்பமான உருவத்தை நிறத்துடன் எழுதி ஏதாவதொரு கழியிலோ தூணிலோ அன்றி அவர்கள் வாழும் இடத்திற்கருகிலிருக்கும் மரத்தின் உச்சிக் கிளையிலோ கட்டிக் காற்றில் பறக்கவிட்டனர்; இதன் மூலம் தாங்கள் இன்ன குழுவினர் என்று அறிவித்துக்கொண்டனர். இதுதான் கொடியின் சுருக்கமான வரலாறு.

இன்று ஒவ்வொரு சமூகத்திற்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் தனித்தனிச் சின்னத்துடன் கூடிய கொடியிருக் கிறது. இக்கொடிகள் பெற்றிருக்கும் சின்னங்களில் பொருள் செறிந்து கிடக்கிறது. ஒரு நாட்டின் கொடி அந்நாட்டு மக்களின் நிலை, நினைப்பு, வாழ்க்கை, வீரம், திறமை முதலிய வைகளை எடுத்துக் காட்டும் சின்னமாக விளங்குகிறது. இப் படிப்பட்ட கொடிகளுள் ஒன்று நமது தேசீயக் கொடி. இக் கொடி யாரால் எப்பொழுது அமைக்கப் பெற்றது? எவ்வித மாறுதல்களை அடைந்தது? என்பனவற்றை இங்கே காண் போம்:

காமா என்னும் வங்காள அம்மையார் நாட்டு விடு தலைக்காகத் தீவிரமாக உழைத்து வந்ததைக் கண்ட ஆங்கி லேயர், அவ்வம்மையாரை இந்திய நாட்டை விட்டு வெளியேறு மாறு செய்தனர். காமா அம்மையாரே முதன் முதலாக 1906-ல் மூவர்ணக் கொடியை உண்டாக்கினவர். இதன் மேற் பகுதி காவி நிறம் உடையது. அதில் எட்டு விண்மீன்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இடைப் பகுதி வெண்ணிறமுடை யது. இதில் 'வந்தே மாதரம்' என்னும் சொல் இந்தியில் எழு தப்பட்டிருந்தது. வந்தேமாதரம் என்பதற்குத் 'தாய்நாட்டிற்கு வணக்கம்' என்பது பொருள். கீழ்ப்பகுதி பச்சை நிறமுடை யது. அப்பகுதியில் இடப்பக்கம் சூரியனும், வலப்பக்கம் பிறைச் சந்திரனும் வரையப்பட்டிருந்தன.

இந்தக் கொடியை இந்திய நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. ஆகவே, சிறந்த நாட்டுப் பற்று உடைய அன்னிப் பெசண்டு என்னும் அம்மையார் 1916-ஆம் ஆண்டு ஒரு கொடியை உருவாக்கினர். அக்கொடியில் ஐந்து செந்நிறப் பட்டைகளையும், நான்கு பசுமை நிறப் பட்டைகளையும், இடப்

புறத் தலைப்பில் ஆங்கிலேயரின் கொடியும் இருந்தன. நடுவில் சப்த ரிஷி மண்டலம் என்னும் ஏழு விண்மீன்களை உடையதாயுமிருந்தது.

காந்தியடிகள் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து உணர்ச்சி பொருந்திய சொற்பொழிவுகளால் மக்களைத் தம்பால் ஈர்த்து இயக்கத்தின் தலைவரானார். 1920-ஆம் ஆண்டில் பெஜவாடாவில் நடைபெற்ற காங்கிரசுக் கூட்டத்தில் காந்தி அடிகள் ஒரு கொடியைத் தோற்றுவித்தார். வெள்ளை, பச்சை, சிவப்பு இம்மூன்று நிறப் பட்டைகளும் ஒன்றன் கீழ் ஒன்ருக இருந்தன. அம்மூன்று பகுதியிலும் தோன்றும்படி பெரிய இராட்டினம் ஒன்று பொறிக்கப்பட்டிருந்தது. 1931-ஆம் ஆண்டு வரை இக்கொடியே தேசியக் கொடியாக இருந்தது.

1931-ல் கொடியில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. மேலே காவி நிறப் பட்டையும், மத்தியில் வெள்ளை நிறப் பட்டையும், அடியில் பச்சை நிறப் பட்டையும் அமைக்கப்பட்டன. வெள்ளை நிறப் பட்டையில் இராட்டினம் அமைக்கப்பட்டது. இராட்டினம் பொது மக்களின் நலத்தைக் குறிக்கும் அடையாளம்.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள் நம் நாடு சுதந்திரம் அடைந்தது. அப்பொழுது நமது கொடியில் சிறிது மாற்றம் ஏற்பட்டது. மூவர்ணக்கொடி காங்கிரசுக் கட்சியின் கொடியாக இருந்தது. அதனைத் தேசியக் கொடியாக மாற்றத் தலைவர்கள் தீர்மானித்துக் கொடியில் இருந்த இராட்டினத்தை நீக்கி, அந்த இடத்தில் அசோக சக்கரத்தைப் பொறித்தனர்.

நம் கொடியில் முந்நிறமும் அசோக சக்கரமும் இருப்பதன் காரணம் யாது? கொடியில் உள்ள காவிநிறம் தைரியத்தையும் தியாகத்தையும் குறிக்கிறது. வெண்மை நிறம் உண்மையையும் அமைதியையும் குறிக்கிறது. பசுமை நிறம் அன்பையும் ஆற்றலையும் குறிக்கிறது. நடுவில் அமைந்துள்ள அசோக சக்கரம் அசோகர் எவ்விதம் சத்தியமும், நீதியும், கடமையும் தவருமல் நாட்டை ஆண்டாரோ, அதே போல் நம்மில் ஒவ்வொருவரும் அக்குணங்களை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

நமது தேசியக் கொடியைப் பற்றி ஜவஹர்லால் நேரு கூறியதாவது :—

"இந்தக் கொடி சாம்ராஜ்யத்தையும், ஏகாதிபத்தியத்தையும், பிறர் மீது செலுத்தும் ஆதிக்கத்தையும் குறிக்காது. ஆனால், உரிமையின் அறிகுறியே இது, நமக்கு மட்டுமல்ல; அதைப் பார்க்கிறவர்கள் யாவருக்குமே உரிமையைக் குறிக்கும் கொடியாக இது இருக்கும். இது செல்லும் இடத்துக்கெல்லாம் அங்குள்ள மக்களுக்கு உரிமையையும், நட்பையும் செய்தியாகக்கொண்டு செல்லும். உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டுடனும் நட்புக்கொண்டிருக்கவும், விடுதலையை விரும்பும் எந்த நாட்டுக்கும் உதவி புரியவும் இந்தியா விரும்புகிறது என்பதை இந்தக் கொடி அங்கெல்லாம் எடுத்துச் சொல்லும்."

நமது தேசியக் கொடி நமது உரிமையின் அறிகுறியாக விளங்குகிறது. முந்நிறத்தின் எழிலும் அசோக சக்கரத்தின் அழகும் நம்மிடையே ஒற்றுமையையும், உயர்வையும் ஊக்கத்தையும் அளிக்கும் தூண்டுகோலாக உதவும். இத்தகைய எழில் மிக்க நம் தேசியக் கொடியைப் பெருமைப் படுத்துவதன் மூலம் நம் தாய் நாட்டிற்கும், தாய் நாட்டு உரிமைக்காக உழைத்த பெரியார்களுக்கும் பெருமையளித்தவர்களாவோம்.

தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்.

—பாரதியார்

## வினாக்கள்

1. கொடியேற்பட்ட வரலாறு யாது?
2. ஒரு நாட்டின் கொடி எவற்றைக் குறிக்கும்?
3. காமா அம்மையார் உருவாக்கின கொடியை விளக்கு.
4. அன்னிப்பெசண்டு அம்மையார் அமைத்த கொடியைப் பற்றி எழுதுக.
5. காந்தி அடிகள் தோற்றுவித்த கொடி யாது?
6. நம் கொடி 1947-ல் என்ன மாறுதலையடைந்தது?
7. நம் கொடியில் அமைந்துள்ள நிறங்களும் சக்கரமும் எவற்றைக் குறிக்கின்றன?
8. பண்டித ஜவஹர்லால் நம் கொடியைப் பற்றிக் கூறியது யாது?

### பயிற்சி

1. இருபொருள் கூறுக :—விலங்கு, கழி, கொடி, மீன், பொறி.

2. எதிர்ச் சொற்கள் தருக :—இடம், அமைதி, நீதி, அன்பு, உண்மை.

3. பிரித்தெழுதுக:—நாட்டுப்பற்று, முந்நிறம், வெண்ணிறம், இடப்புறம், அவ்வம்மையார், செந்நிறம்.

4. பொருள் வேறுபாடு காட்டுக :—மாரி, மாறி ; தோல், தோள் ; தனி, தணி ; வாள், வாழ்.

5. கொடி ஏற்பட்ட வரலாற்றைப் பற்றிச் சுருக்கி எழுதுக.

6. 'நமது நாட்டுக் கொடி' என்பது பற்றி ஓர் ஐந்து நிமிடப் பேச்சுக்குக் குறிப்புக்கள் வரைக.

## 3. நல்லார் இணக்கம்

### (பஞ்சதந்திரக் கதை)

கோதாவரி நதிக் கரையில், ஒரு பெரிய வன்னி மரத்தில், **இலகு பதனன்** என்னும் ஒரு காகம் வாழ்ந்து வந்தது. ஒரு நாள் காலையில் அங்கே மிகவும் பயங்கரமான ஒரு வேடன் வந்தான். காகம் அவனைப் பார்த்து அஞ்சி, "இக்கொடியவன் என்ன செய்வானோ தெரியவில்லை ; ஆகையால், இவன் செய்கையைக் கவனிக்க வேண்டும்," என்று இரை தேடும் முயற்சியைவிட்டு அவனது செயலைக் கவனித்துக் கொண்டிருந்தது.

வேடன் வலையை விரித்து, அதில் பல வகைப்பட்ட தானியங்களைத் தெளித்து, ஒரு செடி மறைவில் பதுங்கிக் கொண்டான். அப்பொழுது **சித்திரக் கிரீவன்** என்னும் புறா அரசு, தன் பரிவாரத்துடன் அந்த மரத்தில் வந்து தங்கிற்று. அது அங்கே இறைத்திருந்த தானியங்களைப் பார்த்து, 'மனிதர் நடமாட்டம் இல்லாத இக்காட்டில் தானியங்கள் எவ்வாறு வந்தன? யாராகிலும் கொண்டு வந்து போட்டிருத்தல் வேண்டும். இதன் உண்மை தெரிந்தாலன்றி, நாம் இதைத் தின்னலாகாது; எதையும் ஆலோசித்தே செய்தல் வேண்டும். அவ்விதம் செய்யின், ஒரு தீங்கும் நேரிடாது,' என்று கூறிற்று.

அதைக் கேட்டதும் பரிவாரப் புறாக்களில் ஒன்று மிக்க செருக்குடன் "இங்ஙனம் ஆலோசித்துக்கொண்டிருந்தால்

நமக்கு ஓர் இரையும் அகப்படாது. வெட்கப்படுகிறவன், பொறுமையுள்ளவன், களிப்படையாதவன், வஞ்சகன், தீரா ஐயமுள்ளவன், பிறர் பொருளால் வாழ்கிறவன் ஆகிய இந்த ஆறுபேரும் துன்பமே அடைவர்'' எனக் கூறிற்று.

மற்றப் புறுக்கள் அதனைக் கேட்டுத் தானியங்களைத் தின்னக் கீழே பறந்து சென்றன. அவைகள் நிலத்தில் இறங்கியதும் வலையில் சிக்கிக்கொண்டன. புறு அரசு அதைக் கண்டு, ''என் சொல்லைக் கேளாது எல்லாப் புறுக்களும் வலையில் அகப்பட்டுக்கொண்டன. நான் மட்டும் தனித்திருப்பதால் பலனில்லை,'' என்று எண்ணிக் கீழே பறந்து சென்று வலையில் சிக்குண்டது.

புறுக்கள் வலையிற் பட்டதைக் கண்ட வேடன், மகிழ்ச்சியுடன் வலையை நோக்கி வரத் தொடங்கினான். அதைக் கண்ட புறுக்கள் அஞ்சிச் சித்திரக் கிரீவனைப் பார்த்து, ''நாங்கள் அறிவில்லாதவன் சொல் கேட்டு உன்னை அவமதித்தோம். அதன் பலன் கிடைத்து விட்டது,'' என்றன. உடனே, சித்திரக்



கிரீவன், ''இப்பொழுது இதைச் சொல்லிப் பயன் என்ன? இந்த இடரிலிருந்து நீங்க ஒரு சூழ்ச்சி இருக்கின்றது. எல்லோரும் ஒரு மனமாக வலையோடு பறந்து செல்வோம். அப்படிச் செய்தால் தான் நாம் நமது உயிரைக் காப்பாற்றலாம்,'' என்றது. உடனே எல்லாப் புறுக்களும் ஒரு சேர வலையோடு சடுதியில் பறந்து போயின.

சேய்மையில் வந்துகொண்டிருந்த வேடன் அதைக் கண்டு வியப்புற்று, ''இவை ஒரே மனமாய் வலையோடு போகின்றன. ஆயினும், இவைகளுக்குள் சண்டை நேரிடும். அப்போது இவை

என் கையில் அகப்படும்,'' என்று நினைத்து, அவற்றின் பின்னே விரைந்து ஓடினான். சிறிது நேரத்தில் புறாக்கள் அவன் கண்ணுக்கு எட்டாமல் மறைந்து விட்டன. வேடன் களைப்பும் வருத்தமும் உற்றுத் திரும்பி வந்து விட்டான். இந்நிகழ்ச்சிகளை எல்லாம் கவனித்துக்கொண்டிருந்த இலகு பதனன் என்னும் காகம் அந்தப் புறாக்களின் பின்னே பறந்து சென்றது.

புறா அரசு தன் பரிவாரத்தை நோக்கி, "**கண்டகி** நதிக்கரையில் **சித்திர வனம்** இருக்கின்றது. அங்கு என் நண்பனான **இரணியகன்** என்னும் எலியரசன் இருக்கின்றான். அங்குச் சென்றால் அவன் தன் பல்லினால் நம்முடைய வலையை அறுப்பான். ஆகையால் அங்குச் செல்வோம்,'' என்றது. புறாக்கள் அவ்விதமே பறந்து சென்று, எலியரசின் வளையண்டை இறங்கின.

அப்பொழுது எலி அரசு தன் வளைக்குள் பல வழிகளைச் செய்துகொண்டிருந்தது ; புறாக்கள் இறங்கின ஒலியைக் கேட்டு அஞ்சிப் பதுங்கி இருந்தது. சித்திரக் கிரீவன், "நண்பா, இரணியகனே ! நீ எங்களோடே ஏன் பேசவில்லை? '' என்று கேட்டது. அது தன் நண்பனான சித்திரக் கிரீவனின் குரல் என்று அறிந்த எலியரசு களிப்போடு வளையை விட்டு வெளியே வந்தது; "நண்பா ! உன் வரவு நல்வரவாகுக ! இவ்வுலகில் மனமொத்த நண்பனோடு கலந்து பேசி மகிழ்வதைக் காட்டிலும் சிறந்த மகிழ்ச்சி ஏது ?'' என்று கூறியது; பின்னர்ச் சித்திரக்கிரீவனுக்கு நேர்ந்த துன்பத்தைக் கண்டு, "நண்பா, யாவரினும் வல்லவனாகிய நீ எவ்விதம் வலையில் அகப்பட்டாய் ?'' என்று வியப்புடன் வினவிற்று. புறா அரசு நடந்தது அனைத்தையும் கூறியது.

எலி அரசு முதலில் சித்திரக் கிரீவனின் கட்டை அறுக்கத் தொடங்கிற்று. அப்போது புறா அரசு, "நண்ப ! முதலில் என் கூட்டத்தாரைப் பிணைத்துள்ள கட்டுக்களை அறு ; பிறகு என் கட்டைத் துணி,'' என்றது. உடனே எலி அரசு, "ஒருவன் தன்னைக் காத்துக் கொண்டு தன் பரிவாரத்தைக் காப்பாற்றவேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய இவற்றிற்கு உயிர் இன்றியமையாத கருவி. ஆதலால், உயிரைக் காப்பாற்றினால், எல்லாவற்றையும் காப்பாற்றினது போல் ஆகும்,'' என்றது. சித்திரக் கிரீவன், "இது சரிதான். ஆயினும், துன்பத்திலிருந்து காக்கவன்றோ இவர்கள் என்னை அரசனாக நினைக்கிறார்கள்.

ஆகையால், முதலில் இவர்கள் கட்டை அறு,'' என்றது. எலி அரசு அதற்கு இணங்கி முதலில் பரிவாரத்தின் கட்டுக்களைச் சேதித்தது ; பின்னர், சித்திரக் கிரீவனது கட்டையும் அறுத்தது. விடுதலையடைந்த புறாக்கள் யாவும் மகிழ்ச்சி அடைந்து, எலியரசைப் புகழ்ந்து விடைபெற்றுச் சென்றன.

இலகு பதனன் என்னும் காக்கை இந்நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தது. அது புறாக்கள் சென்றபின் எலியரசனிடம் சென்று, "எலியரசே, நான் உனது நட்பை விரும்புகின்றேன். நீ அருள் புரிந்து எனக்கு நண்பனாக வேண்டும்,'' என்று கனிவுடன் கூறியது. எலியரசு, "உலகில் சமான மானவர்களுக்குள்ளேயே நட்பு வளரும். நானோ உனக்கு இரை ; நீயோ என்னைப் பிடித்துத் தின்கிறவன். ஆகையால், பகைவரிடம் நட்பு வளராது,'' என்று கூறிற்று.

அதைக் கேட்ட காகம், "உன்னைப் பிடித்துத் தின்பதால் என் பசி அடங்கி விடுமா? நீ பிழைத்திருப்பின், சித்திரக் கிரீவனைப் போல் நலமடைவேன்,'' என்றது. இரணியகன், "நீ எனக்குப் பிறவிப் பகைவன். பகைவனுடன் நட்பு கொள்ளுதல் தவறு. தண்ணீர் வெந்நீராயினும் நெருப்பை அவிக்கும். எது செய்யத் தக்கதோ அதனைச் செய்தல் வேண்டும். தண்ணீரில் வண்டியும் தரையில் கப்பலும் செல்லுமோ?'' என்று வினவிற்று.

காகம், "நான் உன்னுடன் நட்புக் கொள்ளாவிடில் உண்ணா நோன்பு இருந்து இங்கேயே உயிர் விடுவேன்,'' என்றது. எலியரசு காகத்தின் பேச்சைக் கேட்டு, "நான் உன் வார்த்தையால் மகிழ்ந்தேன். இனி, நாம் இருவரும் நண்பரானோம்.'' என்று கூறி, இலகுபதனனுக்குச் சிறிது உணவு கொடுத்தது. பின்னர், இரண்டும் நெடு நேரம் இன்னுரையாடிக்கொண்டிருந்து மகிழ்ச்சியுடன் பிரிந்து சென்றன.

## வினாக்கள்

1. புறா அரசு தானியங்களைக் கண்டவுடன் யாது கூறியது?
2. செருக்குக் கொண்ட புறா கூறியதென்ன ?
3. புறாக்கள் வலையில் சிக்கிக் கொண்டதும் புறா அரசு யாது கூறியது ?

4. புறுக்கள் எவ்விதம் தப்பிச் சென்றன?

5. வேடன் என்ன நினைத்து அவைகளின் பின்னே சென்றான்?

6. எலியரசின் பெயர் யாது? அது புறுவரசை வரவேற்றுக் கூறிய உபசார மொழி யாது?

7. புறுக்கள் எவ்வாறு விடுதலை அடைந்தன?

8. காக்கையின் நட்பு தனக்கு ஏற்றதன்று என்று எலியரசு எவ்விதம் எடுத்துக் கூறியது?

9. காக்கை எலியரசின் நட்பை எவ்விதம் பெற்றது?

10. சந்தர்ப்பங் கூறுக:—

(1) "ஒருவன் தன்னைக் காத்துக்கொண்டு தன் பரிவாரத்தைக் காப்பாற்ற வேண்டும்."

(2) "தண்ணீர் வெந்நீராயினும் நெருப்பை அவிக்கும்."

## பயிற்சி

1. இருபொருள் தருக:—ஐயம், வளை, வீடு, துணி.

2. எதிர்ச்சொல் கூறுக:—உண்மை, வரவு, துன்பம், நட்பு, அறம், பகைவன், சேய்மை.

3. பிரித்தெழுதுக:—நல்வரவாகுக, வளையண்டை, நலமடைவேன், வெந்நீர்.

4. வாக்கியங்களில் அமைக்க:—இடர், சடுதியில், பிறவிப் பகைவன், செருக்கு, பரிவாரம்.

5. இரை, இறை; வலை, வளை; வழி, வளி - பொருள் வேறுபாடென்ன?

6. புறுவரசுக்கும் எலியரசுக்கும் ஏற்பட்ட உரையாடலை எழுதுக.

7. காகத்திற்கும் எலியரசுக்கும் நிகழ்ந்த உரையாடலை எழுதுக.

# 4. உருளைக்கிழங்கு

உலகத்துள்ள மானிடர் உணவுப் பொருள்களாக வள்ளிக் கிழங்கு, சேனைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, கருணைக்கிழங்கு, உருளைக்கிழங்கு முதலிய கிழங்கு வகைகளை முக்கியமாய் உபயோகித்து வருகின்றனர். இவற்றுள் உருளைக்கிழங்கைச் சிறப்புடையதாகக் கருதுகின்றோம். இது உருண்டை வடிவாய் அமைந்திருப்பது பற்றி இதற்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

இப்பொழுது இக்கிழங்கு நம்முடைய நாட்டில் விசேடமாய்க் கோடைக்கானல், நீலகிரி முதலிய மலைப் பிரதேசங்களிலும் பெங்களூரிலும் அபரிமிதமாய்ப் பயிரிடப்பட்டுப் புகை வண்டியின் போக்கு வரத்துச் சாதன வசதிகளினால் எல்லாப் பாகங்களுக்கும் ஏற்றுமதிசெய்து அனுப்பப்படுகிறது.



புதிய உலகு என்னப்பட்ட அமெரிக்காக் கண்டத்தை ஐரோப்பியர் கண்டு பிடிப்பதற்கு முன்னமே அக்கண்டத்தின் உஷ்ணப் பிரதேசத்தில் இது பயிர் செய்யப்பட்டு வந்தது; கி.பி. ஆரும் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஸ்பெயின் தேசத்தாரால், ஐரோப்பாவிற்கு முதன்முதல் அங்கிருந்து கொண்டு வரப்பட்டுப் பயிர் செய்யப்பட்டது. அதன் பின்னர், பிரான்சுக்காரரும், இத்தாலியரும் இதன் அருமைபெருமையையுணர்ந்து,

தங்கள் தங்கள் தேயத்திற்குக் கொண்டு போய் விருத்தி செய்ய ஆரம்பித்தனர்; ஆனால், இதை முதலில் விசேடித்த உணவுப் பொருளாக்கக் கூடும் என்று நினையாமல் ஒரு விநோதப் பொருளாக மட்டும் கருதிப் பயிரிட்டனர். படிப்படியாக ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பரவ ஆரம்பித்த பின்னர் இதை உண்டு சுவையறிந்தவர், இனிமையான உருளைக்கிழங்கு எனப் பெயர் வழங்கி வந்தனர்.

அப்பால் இதன் பிரசித்தி இங்கிலாந்து தேயத்திற்கும் பரவி, அங்கும் இதைப் பயிரிடத் தொடங்கினர். எனினும், இங்கிலாந்து அரசனுடைய தோழரும், நூலாசிரியரும், பிரசித்தி பெற்ற கப்பலோட்டியும், போர் வீரருமாகிய **சர் வால்டர் ராலி** என்ற பெரியார் 1584-ஆம் வருடம் செய்த அமெரிக்காப் பிரயாணத்திற்குப் பின்னரே ஆங்கிலேயருக்கு உருளைக்கிழங்கின் தன்மை நன்குணர்த்தப்பட்டது. எவ்வாறெனின், "உணவுப் பொருள்களாகிய தானியாதிகள் கால வேற்றுமையால் விளைவு குன்றிப் போயினும், உருளைக்கிழங்கை நன்றாய்ப் பயிர் செய்தால் அக்குறைவை நிவர்த்தித்தல் கூடும்," என்று வெகுவாய் வற்புறுத்திக் கூறி விவசாயிகளை மேன்மேலும் ஊக்கி வந்தார்.

இங்கிலாந்தில் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்த எலிஸபெத்து மகாராணியார் உருளைக்கிழங்கைத் தமக்கு மகாவிருப்பமுள்ள உணவுப் பொருளாக்கிக் கொண்டார். அதன் பின்னர் இங்கிலாந்து விவசாயிகள் அதிக ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் அதை அபிவிருத்தி செய்யலானார்கள். எலிசபெத்து மகாராணிக்குப் பின் இங்கிலாந்தின் அரசனாக வந்த முதலாம் **ஜேம்ஸ்** காலத்தில் அரண்மனைச் சாப்பாட்டுச் செலவிற்காக இது அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டது. இதனால் இங்கிலாந்து விவசாயிகளுக்கு இதன் அபிவிருத்தி சம்பந்தமாய் ஏற்பட்ட ஊக்கத்திற்கு அளவேயில்லை.

பதினாறுவது **லூயிஸ்** என்ற பிரான்சு தேச மன்னனால் ஐரோப்பாக் கண்டம் முழுவதும் இதன் உபயோகம் பரப்பப் பட்டது. அவர் தமக்கென்று சொந்தமாக உருளைக் கிழங்குத் தோட்டங்களை உண்டுபண்ணி விருத்தி செய்தார். உருளைக்கிழங்கு மலரைத் தம்முடைய பொத்தான் துவாரத்தில்

அணிந்துகொண்டு வெளியில் செல்வதில் அவருக்கு வெகு பிரியம். "அரசன் எவ்வழியோ அவ்வழி குடிகள்" என்பதற் கேற்ப, பிரான்சு தேசத்துக் குடியானவர்கள் தங்களுடைய வேந்தனைப் பின்பற்றி இந்தக் கிழங்கை ஏராளமாய்ப் பயிரிட ஆரம்பித்து விட்டார்கள். இது ஒரு சிறந்த உணவுப் பொருள் என்பதை ஐரோப்பாக் கண்டத்தினர் அனைவரும் அறிந்து கொண்டாராதலின், அக்கண்டத்தின் எல்லாப் பாகத்திலும் இதனை அபரிமிதமாகப் பயிரிடத் தலைப்பட்டனர்.

உருளைக்கிழங்குச் செடி ஒன்றரை முதல் இரண்டடி உயரம் வரையில் வளரும். இதன் பூ, ஊதா அல்லது இந்திர நீல வர்ணமாயிருக்கும். அப்பூவினின்று விதையைப் பிறப் பிக்கும் காய் தோன்றும். காய் முற்றி விதை உண்டாகும். இதன் கிழங்கு பூமியில் கீழ் நோக்கிச் செல்லும் வேரினிடத்து உண்டாகும். இது வெண்ணிறக்கிழங்கு, செந்நிறக்கிழங்கு என இரு வகையுண்டு. செந்நிறக்கிழங்கையே ஐரோப்பியர் அதிக விலை கொடுத்து வாங்குவர். செந்நிறக்கிழங்கு மற்றையதைக் காட்டிலும் சுவை அதிகமென்பர். நம்முடைய நாட்டில் நீலகிரி மலைப் பிரதேசத்தில் செந்நிறக்கிழங்கு ஒரு சிறிது பயிரிடப்படு கின்றது. பெங்களூர், கோடைக்கானல் முதலிய இடங்களில் செந்நிறக்கிழங்கு உற்பத்தி அதிகமில்லை; வெகு அபூர்வமாய் விளையக் கூடும். எங்கும் வெண்ணிறக்கிழங்கின் உற்பத்தியே அதிகம்.

எந்த வேளாண்மையும் நிலத்தின் செழுமை, பருவகாலம், எருவின் அளவு, பக்குவம் இவற்றிற்கு ஏற்றபடி நன்றாய் விளையும்; அன்றேல், பலன் குறையும் என்பது, விவசாயிகள் அனுபவத்தில் கண்டு பிடித்திருக்கின்றார்கள். உருளைக்கிழங்கும் சிறிதும் பெரிதுமாக நில வளத்துக்கேற்றபடி இருக்கும். சில கிழங்குகள் ஒரு பவுண்டு நிறையளவும் பருத்திருக்கின்றன. சிறியவைகள் எலுமிச்சங்காய் அளவிலும் சிறிதாக இருத்தல் கூடும்; முள்ளிக்காய் அளவிலும் சிறுத்திருக்கின்றன. இவைகள் கயிற்றில் கட்டித் தொங்க விட்ட பான்மையில் வேரில் தொங்கிக் கொண்டு பூமியில் வளரும்.

உருளைக்கிழங்கை விதை போட்டுப் பயிரிடுவதைக் காட்டிலும் பெரிய கிழங்குகளை முளைக் கண் பார்த்துப்

பக்குவமாக நறுக்கிச் சிறிய துண்டுகளாக்கிக் கரும்பு நடுகின்ற தன்மை போல் நடலாம். வரம்புப் பாத்திகள் பிடித்து வரிசை வரிசையாக இரண்டடி தூரத்திற்கொன்ருய் நடுவார்கள். உருளைக்கிழங்கு வேளாண்மை, மற்ற நவதானிய வேளாண்மை போல் பூசாரத்தை அதிகமாகஉறிஞ்சுகிறதில்லை. ஆனபடியால், இதற்குப் பொருத்தமான சீதோஷ்ண நிலையுள்ள எந்தத் தேசத்திலும் இதைப் பயிரிடலாம். நல்ல தரங்களை யுண்டு பண்ண விருப்பமுடையவர் நல்ல விதைக் கிழங்குகளைச் சேகரிக்க வேண்டும். வித்தின் நயம் எந்த வேளாண்மைக்கும் சிறப்பைத் தரும் அலலவா? நல்ல விளைவுக்குக் காரணம் வித்தின் பலமே எனபது விவசாய உண்மைகளை நன்கறிந்த பெரியார் கொள்கை.

ஐரோப்பியர் இக்கிழங்கை அதிகமாய் உண்பதற்கு உபயோகிப்பதுடன் ஆடைகளுக்கும் இதைக் கொண்டு ஒரு வித வெண்ணிறப் பசை போடுகின்ருர்கள். மேல் நாட்டு வெள்ளைத் துணிகளில் இந்தப் பசை போடப்பட்டிருப்பதை நீங்கள் காணலாம்.

## வினுக்கள்

1. கிழங்கு வகையில் சிறப்புடையதாகக் கருதப்படுவது எது? ஏன்?

2. நமது நாட்டில் உருளைக் கிழங்கு எங்கெல்லாம் பயிரிடப் படுகிறது?

3. ஆதியில் உருளைக்கிழங்கு எங்குப் பயிர் செய்யப்பட்டது?

4. ஐரோப்பாக் கண்டத்தில் முதன்முதல் எந்தத் தேசத்தில் பயிரிடப்பட்டது?

5. அப்பால் விருத்தி செய்யத் தொடங்கின தேசத்தார் யார்?

6. ஆங்கிலேயர் உருளைக் கிழங்கின் தன்மையை அறிந்தது எப்போது?

7. சர். வால்டர் ராலி உருளைக்கிழங்கைப் பற்றிக் கூறி யுள்ளது என்ன?

8. இங்கிலாந்து விவசாயிகளின் உருளைக்கிழங்கு அபிவிருத் திக்கு ஊக்கமூட்டியவர் யார்?

9. உருளைக் கிழங்கு எவ்விதம் பயிர் செய்யப்படுகிறது?

### பயிற்சி

1. இருபொருள் தருக:—சேனை, கருணை, உருளை, பசை.

2. எதிர்ச்சொல் கூறுக:—ஏற்றுமதி, செலவு, மிதம், விருப்பு.

3. பிரித்தெழுதுக:—நூலாசிரியர், கப்பலோட்டி, மென்மேலும், செந்நிறம், வெண்ணிறம்.

4. சேர்த்துக் காட்டுக:—இ+கிழங்கு, அ+குறை, எ+வழி, ஒன்று+அரை, இரண்டு+அடி.

5. நீலகிரி, பெருமை, விளைவு, மலர், ஆடை, அரண்மனை, இனிமை—இவற்றுள் ஒவ்வொன்றும் இன்னின்ன பெயர் என்பதைக் குறிக்க.

6. சர். வால்டர் ராலி என்பவரைப் பற்றி எட்டு வரிகள் எழுதுக.

7. பதினாறும் லூயிஸ் அரசர் உருளைக் கிழங்கைப் பரப்பிய விதத்தைப் பற்றி ஒரு பத்தி வரைக.

8. உருளைக்கிழங்கு பயிரிடும் விதத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

## 5. வடமுனை கண்ட வீரர் பியரி

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் பல புதிய நாடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. அக்காலத்து ஐரோப்பியர்களுக்குப் புதிய நாடுகளைக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற ஆர்வம் தோன்றியது. அநேகர் புதிய நாடுகளைக் கண்டு பிடிக்க முயன்றனர். அவர்கள் தம் முயற்சியால் புதிய நில பகுதிகளைக் கண்டு பிடித்து ஆங்குக் குடியேறினர். அதன் பின்னர் இன்றளவும் அவர்கள் புதிய இடங்களைக் கண்டு பிடிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அம்முயற்சிகளுக்காக அவர்கள் செலவிடும் பொருள் அளவுக் கடங்காது. அவர்கள் காட்டி வரும் உழைப்பும் ஊக்கமும் வியக்கத் தக்கவை. அவர்கள் தங்கள் உயிரைத் துரும்பாக மதித்து இம்முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றால் உயிர் துறந்தோர் பலர். எத்தகைய இடுக்கண்களுக்கும் அவர்கள் சிறிதும் அஞ்சாது புதிய இடங்களைக் கண்டறியும் முயற்சியில் முனைந்து நிற்பது மிகவும் வியப்பைத் தரத் தக்கதே.

உலக உருண்டையின் வட கோடியிலும் தென் கோடியிலும் உள்ளவை துருவங்கள் எனப்படும். வட துருவத்தையும் தென் துருவத்தையும் கண்டறியப் பலர் முயன்றனர். வட துருவத்தைக் கண்டறியச் சென்ற முந்நூறு ஆண்டுகளாக முயற்சிகள் நடந்து வந்தன. இறுதியில் நார்வே நாட்டினரான **நான்சென்** என்பவர் 1873-ஆம் ஆண்டில் வட துருவத்தைக் கண்டறியப் புறப்பட்டுச் சென்று, கிரீன்லாந்து என்னும் பிரதேசத்தை அடைந்தார். அதைக் கடந்து மேலும் வடக்கிற் செல்ல அவரால் இயலவில்லை. பலவித இன்னல்களுக்கிடையே வடக்கு நோக்கிச் சென்று வடமுனையைக் கண்டவர் அமெரிக்கரான **பியரி** என்பவரேயாவர்.

அவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கடற்படையில் வேலை பார்த்து வந்தார். அவர் நான்சென் செய்த பிரயாணத்தைப் பற்றிய நூலைப் படித்தார். அந்நூலைப் படித்ததின் பயனாக அவர் கிரீன்லாந்து செல்ல விரும்பினார். ஆதலின், அவர் தம்முடன் சிலரை அழைத்துக் கொண்டு 1886-ஆம் ஆண்டு ஆர்க்டிக் கடலுக்குச் சென்றார். வழியில் அவர் கொடிய காய்ச்சலால் பீடிக்கப்படவே, மேற் செல்லாது தம் நாடு திரும்பினார். ஆயினும், எடுத்த காரியத்தை முடிக்க வேண்டுமென்று எண்ணமுள்ள பியரி அடுத்த ஆண்டே மீண்டும் தமது பிரயாணத்தைத் தொடங்கி கிரீன்லாந்தை அடைந்தார். அவர் அந்நிலப் பரப்பு முழுவதையும் பார்வையிட்டு, 'கிரீன்லாந்து ஒரு தீவாகும்' என்பதை முதன் முதலாக உலகிற்கு வெளிப்படுத்தினார். அதனால் அவரது புகழ் உலக முழுவதும் பரவியது. அமெரிக்க அரசாங்கத்தார் அவரது அரிய செயலைப் பாராட்டிப் பெருமைப் படுத்தினர்.

கிரீன்லாந்தைக் கண்டறிந்தபின் பியிரிக்கு உலகத்தின் வடமுனையைக் காண வேண்டுமென ஆவல் ஏற்பட்டது. அவர் தம் ஆவலைத் தம் நண்பர் பலரிடமும் தெரிவித்தார். அக்கால அமெரிக்கக் குடியரசுத் தலைவராயிருந்த **ரூஸ்வெல்ட்** என்பவர் பியரியின் ஆவலை அறிந்தார். அவர் பியரியையும், அவருடன் செல்ல விரும்பினவர்களையும் உற்சாகப்படுத்தி, அவர்களுக்கு வேண்டிய உதவிகள் புரிந்தார். அவர்கள் பிரயாணத்திற்கென 'ரூஸ்வெல்ட்' என்ற புதிய கப்பல் நிர்மாணிக்கப்பட்டது.

பியரியும் அவரது நண்பர்களும் 1908-ஆம் ஆண்டு ஜூலை மாதம் அக்கப்பலில் புறப்பட்டுச் சென்றனர். கப்பல் நியூயார்க் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டது. குடியரசுத் தலைவரான ரூஸ்வெல்ட் அவர்களுக்கு ஆசி கூறி அனுப்பினுர்.

ரூஸ்வெல்ட் கப்பல் ஆகஸ்ட் மாதம் முதல் நாளன்று கிரீன்லாந்திலுள்ள **யார்க் முனையை** அடைந்தது. பியரிக்குமுன் வடக்கு நோக்கிச் சென்றவர் அனைவரும் அந்த முனை வரை தான் சென்றிருந்தனர். அதற்குமேல் ஒருவரும் சென்றிலர். பியரி அம்முனையில் சின்னாட்கள் தங்கினுர்; அங்கிருந்து பல எஸ்கிமோ குடும்பங்களையும், சுமார் இருநூற்றைம்பது நாய்களையும் தமது கப்பலில் ஏற்றிக்கொண்டு வடக்கு நோக்கிச்சென்று, **பாப்பின்** வளைகுடாவை அடைந்தார். அங்கிருந்து கப்பல் ஆர்க்டிக் கடலை நோக்கிச் சென்றது. அப்பொழுது கடலில் ஏறக்குறைய முந்நூற்றைம்பது மைல் தூரம் வரை பனி உறைந்திருந்தது. அப்பனிக் கட்டிகளைச் சமாளித்துக் கொண்டு கப்பல் சென்றது. ஆனுல், சின்னாட்களில் கப்பலைச் சூழ்ந்து பனி உறைந்து விட்டபடியால் கப்பல் மேற் செல்ல முடியவில்லை. அதனுல் பியரியும் அவரது நண்பர்களும் கப்பலை விட்டிறங்கி ஓர் இடத்தில் கூடாரங்களை அமைத்துக் கொண்டு தங்கினர். அவர்கள் தங்கின இடத்திற்கும் வடமுனைக்கும் சுமார் 450 மைல் தூரமிருந்தது. இங்கிலையில் அக்டோபர் மாதம் 12-ஆம் நாள் கதிரவன் மறைந்தான். நாடெங்கும் இருள் சூழ்ந்தது. பியரியும் பிறரும் இருள் நீங்கும் வரை அங்குத் தங்கியிருந்தனர்.

1909-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 14-ஆம் நாள் இருள் நீங்கியது. மறுநாள் பியரி தம் நண்பர்களில் எழுவருடன் 95 எஸ்கிமோக்களையும், 150 நாய்களையும், 28 சக்கரமில்லா ஸ்லெட்ஜ் வண்டிகளையும், உணவுப் பொருள்களையும் உடன் கொண்டு தமது பிரயாணத்தைத் தொடங்கினுர். ஒவ்வொரு வண்டியிலும் நால்வர் அமர்ந்து கொண்டனர். பிரயாணம் செய்யுங்கால் வழியில் நோயால் பீடிக்கப்பட்டவர்களும், கை கால் சிதைவுற்றவர்களும் புறப்பட்ட இடத்திற்குத் திரும்பி அனுப்பப்பட்டனர். ஆகவே, பியரியுடன் அவரது வேலைக்காரனும், நான்கு எஸ்கிமோக்களுமே எஞ்சியிருந்தனர். தங்களது பிரயாண நிலையைப் பின்னே தங்கியுள்ளவர்களுக்கு

அறிவிக்க இடையிடையே சிலரை அனுப்பி வந்தனர். இதனுல் முன்னுல் சென்றவர்களுக்கும் பின்னுல் தங்கியவர்களுக்கும் தொடர்பு இருந்து வந்தது.

பியரி தம்முடன் எஞ்சியிருந்த எஸ்கிமோக்கள் நால் வருடனும், தமது வேலேக்காரனுடனும் மீண்டும் தமது பிரயாணத்தை ஆரம்பித்தார். அவர் வடமுனேக்கு 130 மைல் தூரம் செல்லவேண்டியதிருந்தது. அப்பொழுது அவரிடம் ஐந்து ஸ்லெட்ஜ் வண்டிகளும், நாற்பது நாய்களும், போதுமான உணவுப் பொருள்களும் இருந்தன. பியரி மனந்தளராது வடக்கு நோக்கிச் சென்ருர். இவ்விதம் பல நாட்கள் பல இன்னல்களுக்கிடையில் பிரயாணம் செய்து, இறுதியில் பியரி ஏப்பிரல் மாதம் ஐந்தாம் நாள் வடமுனேக்கு முப்பத்தைந்து மைல் தூரத்தில் ஓரிடத்தில் தங்கினுர். அவ்விடத்தில் வானம் நிறமற்று விளங்கியது. ஆனுல், வானவட்டம் கருகித் தோன் றியது. பியரி மகிழ்ச்சி அடைந்தவராய், தமது களேப்பையும் பொருட்படுத்தாது தமது பிரயாணத்தை மீண்டும் தொடங்கி ஏப்பிரல் மாதம் ஆரும் நாள் உலகத்தின் வடமுனேயை அடைந்தார். பியரி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லே. மகிழ்ச்சி யின் மிகுதியால் அவர் அங்கிருந்த பனிமலே ஒன்றின் மீது அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கொடியைப் பறக்க விட்டார்.

பியரி அங்கு நீண்ட காலம் தங்க முடியவில்லே. உணவுப் பொருள்களும் சுருங்கின. ஆதலால், அவர் தம் நாடு திரும்ப லானுர். பியரி பதினறு நாட்களில் பாப்பின் வளேகுடாவுக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்து அவர் தம் தாய் நாட்டுக்குத் திரும்பினுர். அமெரிக்க மக்களும் அரசியலாரும் அவரை நன்கு வரவேற்று உபசரித்தனர். பலவித இன்னல்களேயும் பொருட் படுத்தாது தம் கருமமே கண்ணுயிருந்து வடமுனேயைக் கண்டு பிடித்த பியரி யாவராலும் போற்றத் தக்கவரன்ருே!

## விஞக்கள்

1. ஐரோப்பியர்களிடம் காணப்படும் சிறந்த குணம் யாது?
2. நான்சென் என்பவர் யார்?
3. பியரி என்பவர் யார்?
4. அவர் முதன்முதலில் எவ்விதம் புகழ் பெற்ருர்?

5. பியரி வடமுனை யாத்திரையை யாருடைய உதவியால் தொடங்கினர்?

6. யார்க் முனையைப்பற்றி நீ அறிவதென்ன?

7. பியரி சென்ற கப்பல் நின்றுவிடக் காரணமென்ன?

8. பியரி செய்த வண்டிப் பிரயாணம் எத்தகையது?

9. ஏப்பிரல் ஐந்தாம் நாள் பியரி கண்ட காட்சி யாது?

10. வடகோடியை அவர் எப்பொழுது கண்டார்?

### பயிற்சி

1. எதிர்ச் சொல் தருக:—பலர், மதித்து, இன்னல்.

2. பிரித்து எழுதுக:—சின்னுள், வானவட்டம், இடையிடையே, அரசியலார்.

3. ஒரு பொருளை வழங்கப் பெரியோரால் காரணங் கருதாமல் இடப்பட்ட பெயர் 'இடுகுறிப் பெயர்' என்பதையும், காரணம் கருதி ஒரு பொருளுக்கு வைக்கப்பட்ட பெயர் 'காரணப் பெயர்' என்பதையும் நீங்கள் அறிவீர்கள் அல்லவா? இப்பாடத்திலிருந்து இடுகுறிப் பெயருக்கும் காரணப் பெயருக்கும் சில உதாரணங்கள் தருக.

4. உழை, காண், அறி, செல், படி—இவ்வினைப் பகுதிகளிலிருந்து முக்காலத்திற்கும் உரிய பெயரெச்ச, வினையெச்சங்களைக் குறிக்க.

5. பியரி தாம் செய்த பிரயாணத்தைப் பற்றிக் கூறுவது போல் ஒரு கட்டுரை வரைக.

6. யார்க் முனை, பாப்பின் வளைகுடா, வடமுனை—இவை ஒவ்வொன்றையும் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

# 6. இராஜ ராஜ சோழர்

தென்னிந்தியாவில் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என மூன்று பெரிய நாடுகள் இருந்தன. அவைகளைத் தமிழ் நாடுகள் என்றும் கூறுவார்கள். அம்மூன்று பெரிய நாடுகளையும் முன் காலத்தில் சிறந்த மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்கள் மும்முடி மன்னர்கள் என்ற சிறப்புப் பெயரைக் கொண்டவர்கள். அவர்கள் தமிழ் மொழியை வளர்த்துத் தழைக்கச் செய்த பெருந்தகையாளர்கள் ; குடிமக்களை மிகவும் கருணையுடன் ஆண்டு வந்தவர்கள்.

சேர, சோழ, பாண்டிய நாடுகளுள் மிக்க மேன்மையுடையது சோழ நாடாகும். அந்நாடு 'புனல் நாடு,' 'பொன்னி நாடு' முதலிய பல பெயர்களால் அழைக்கப்படுவதும் உண்டு. நீர் வளம் பொருந்தியது சோழ நாடு. அந்நாட்டில் காவிரி நதி ஓடிச் செழிப்புறச் செய்கிறது. இன்றும் திருச்சி, தஞ்சை ஜில்லாக்களின் வழியே காவிரி நதி பாய்ந்து வளம் தருகிறது. "**சோழ வளநாடு சோறுடைத்து**" என்றும்,

"தண்ணீருங் காவிரியே ; தார்வேந்தன் சோழனே
மண்ணுவதுஞ் சோழ மண்டலமே"

என்றும் பெரியோர்கள் புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

சோழர்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்த மன்னர் **இரண்டாம் பராந்தகன்** என்பவர். அவருக்குச் **சுந்தர சோழன்** என்ற மற்றொரு பெயரும் உண்டு. அவருடைய மனைவியார் வானவன் மாதேவியார் ஆவர். இவர்களுக்கு இரண்டு பிள்ளைகளும், ஒரு பெண்ணும் பிறந்தனர். இவர்களுடைய மூன்றாவது மைந்தரே இராஜ ராஜ தேவர்.

இராஜராஜர் கி. பி. 985-ஆம் ஆண்டு தலைநகரான தஞ்சைமா நகரில் சிம்மாசனம் ஏறினர். அவர் அரசரானதும், **இராஜ கேசரி** என்னும் பட்டம் அவரை வந்தடைந்தது. அவர் போர்த் தொழிலில் சிறந்த திறமை வாய்ந்தவர் ; தம் நாட்டின் பாதுகாப்பிற்காகவும், எதிரிகளின் சேனைகளை முறியடிப்பதற்காகவும் நாட்டின்கண் நால்வகைச் சேனைகளையும் அதிகப்படுத்தினர் ; வேளாண்மையை வளர்த்தார் ; விளை பொருள்களைப் பெருக்கினர். மேலும், அவர் செல்வங்களைச் சேகரித்தார்;

மக்களை அறிவிற் சிறந்தவர்களாகச் செய்தார் ; அரசாங்கத்தின் வருவாயையும் அதிகப்படுத்தினார். அவருடைய ஆட்சியில் நாட்டு மக்கள் பகைவரின் பயமின்றிக் கல்விப் பெருமிதம் கொண்டு, செல்வச் சிறப்புடன் வாழ்ந்தனர். இதனால் அவருடைய பேரும் புகழும் மென்மேலும் வளர்பிறைபோல் வளர்ந்து கொண்டே வந்தது. நாடும் மேன்மை பெற்று விளங்கியது.

இவைகளையெல்லாம் கண்டு, மன்னர் சிலர் பொறாமைப் பட்டனர். அவருடைய பேராற்றலையும் புகழையும் கண்டு மன்னர் பலர் அவருடைய நட்பையும், உறவையும் கொண்டனர். இராஜராஜரிடம் **அப்பிரமேயன்** என்னும் தளகர்த்தன் ஒருவன் இருந்தான். அவன் சிறந்த போர் வீரன் ; அஞ்சா நெஞ்சம் படைத்தவன் ; போரில் பகைவர்களைப் புறங்காட்டி ஓடச் செய்வதில் சமர்த்தன். அவனது துணைக்கொண்டே, பல போர்களில் இராஜராஜ சோழர் வெற்றியடைந்தார் என்றால் அது மிகையாகாது.

அவர் காலத்தில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவன் அமரபுஜங்க பாண்டியன் ஆவன். அவன் சோழருடைய முன்னேற்றத்தைக் கண்டு மனம் புழுங்கினான். சோழர் குடியை வேரோடு ஒழிக்க வேண்டுமென்ற எண்ணம் அவன் மனத்தில் குடி கொண்டிருந்தது. சேரனும் இந்தச் சமயத்தை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தான். இதையறிந்த இராஜராஜசோழர் பாண்டியனையும், சேனைச் செருக்குற்றிருந்த சேரனையும் ஒழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டார். அப்பிரமேயனுடைய போர்த் திறமையினாலும், சோழ மன்னரின் தோள் வலிமையாலும், சேர பாண்டிய மன்னர்கள் போரில் தோல்வியுற்றுக் கப்பம் கட்டும் அரசரானார்கள். இதனால் இராஜராஜருடைய பெருமை இந்தியா முழுவதும் பரவியது.

இராஜராஜ சோழருக்கு இராஜேந்திரன் என்ற வீரப் புதல்வன் இருந்தான். இராஜராஜ சோழர் சண்டைக்குப் போகும் சமயங்களிலெல்லாம், அவன் தலைநகரான தஞ்சையைக் கண்ணுங்கருத்துமாய்ப் பாதுகாத்து வந்தான். தந்தையைப் போலவே மகனும் எல்லாத் துறைகளிலும் மேம்பட்டவனாய் விளங்கினான்.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்."

என்ற குறளுக்கேற்ப இராஜேந்திரனும் ஒழுகி வந்தான். இவ்வாறு, இராஜராஜர் தம் புஜபலத்தினாலும், பேராற்றலினாலும், தளகர்த்தரின் சாமர்த்தியத்தினாலும், அமைச்சரின் அறிவுத் திறத்தினாலும், மைந்தனுடைய தீரச் செயல்களினாலும் எண்ணற்ற சிற்றரசர்களையும் பேரரசர்களையும் போர் செய்து வென்றார்.

இராஜராஜர் இங்ஙனம் பல நாடுகளை வென்று தமது நாட்டை விரிவாக்கிக் குன்றாப் புகழ் பெற்றதனால், **ஜயங்கொண்ட சோழன்** என்று எல்லோராலும் போற்றப்பட்டார். அவருக்கு விருதுப் பெயர்கள் பல உண்டு. அவைகளுள் மும்முடிச் சோழன், ஜயங்கொண்ட சோழன், அருண் மொழித் தேவன், க்ஷத்திரிய சிகாமணி, ஜனநாதன், சோழ மார்த்தாண்டன், பாண்டிய குலாசனி, கேரளாந்தகன், சிங்களாந்தகன், சிவபாத சேகரன் என்பன குறிப்பிடத் தக்கன. இப்பெயர்கள் இராஜராஜருடைய பெருங் கீர்த்தியைக் குறிக்கின்றன அல்லவா?

சோழ நாடு பல மண்டலங்களாகவும், மண்டலங்கள் வளநாடு, கோட்டம், கூற்றங்களாகவும் பகுக்கப்பட்டிருந்தன. மண்டலங்களை ஆள்வதற்கு அரசப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். இம்மாதிரியான சிறந்த முறைகளைக் கையாண்டு, சீரிய முறையில் இராஜராஜ சோழர் அரசு புரிந்து வந்தார்.

அவர் சிறந்த சிவ பக்தர்; ஆனாலும், தம் நாட்டிலிருந்த வைணவ பௌத்த சமண சமயங்கள் மீதும் வெறுப்புக் கொள்ளாது, மதிப்புடையவராயிருந்தார்; அந்த மதங்கள் வளரும்பொருட்டும் தக்க உதவிகளைச் செய்து வந்தார். மைசூரில் வைணவ ஆலயங்களைக் கட்டுவித்ததும், நாகப்பட்டினத்தில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பௌத்தக் கோவிலுக்கு 'ஆனை மங்கலம்' என்ற சிற்றூரைத் தானமாகக் கொடுத்ததும் இதற்குச் சான்றாகும். என்னே அவரது பெருந் தன்மை!

தஞ்சையில் வானளாவி நிற்கும் பிருகதீசுவரரின் பெரிய கோவிலைக் கட்டுவித்தவர் இராஜராஜரே. அக்கோவில் அவருடைய உயர் நோக்கங்களை இன்றும் எடுத்துக் கட்டுவதாய் விளங்குகின்றது. இக்கோவில் சிற்பச் சித்திர வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது; கருங்கற்களால் ஆக்கப்பட்டது. சுவாமி சந்நிதியில் வீற்றிருக்கும் பெரிய நந்தி ஒரே கருங்கல்லினால் செதுக்கி அமைக்கப்பட்டதாகும். கருங்கல் பாறைகள் மருந்துக்கும் அகப்படாத சோழ நாட்டில் கருங்கற்களாலேயே மிகப் பெரிய கோவிலை இராஜராஜர் அமைத்துள்ளாரென்றால், அவருடைய பேராற்றல் வியக்கத் தக்கதல்லவா ?

இராஜராஜ சோழர், சோழப் பேரரசருள் முன் வைத்துப் போற்றத் தக்கவர். அவர் காலத்தில் நீதி, நிர்வாகம், சிற்பக் கலை, இசைக் கலை, நாட்டியக் கலை முதலியன யாவும் வளர்ச்சியுறத் தொடங்கின. அவர் அரசு பெற்ற காலத்தில் சோழ நாடு சிறியதாகவே இருந்தது. ஆனால், அவர் தம்முடைய நன் முயற்சிகளால் நாட்டைப் பெரிதாக்கி, மக்களுடைய மனத்தைக் கொள்ளை கொண்டார். இவ்விதம் சீரும் சிறப்பும் கொண்டு தமிழகத்தை ஆண்ட தனிப் பெரும் வேந்தர் இராஜ ராஜ சோழரை நாம் மறக்க முடியுமா ?

## வினாக்கள்

1. தமிழ் நாட்டு மன்னர்கள் எத்தகைய சிறப்பு வாய்ந்தவர்கள் ?
2. சோழ நாட்டின் சிறப்பு யாது ?
3. இராஜராஜ சோழர் செய்த நன்மைகள் யாவை ?
4. அவரது தளகர்த்தன் யார் ? அவன் எத்தகையவன் ?
5. சோழனை எதிர்த்தவர்கள் யாவர் ?
6. இராஜராஜ சோழரின் மைந்தன் எப்படிப்பட்டவன் ?
7. இராஜராஜ சோழனுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?
8. சோழ நாடு எவ்வாறு ஆளப்பட்டு வந்தது ?
9. இராஜராஜ சோழர் சமரச சன்மார்க்க நோக்கமுடையவர் என்பதற்குச் சான்றுகள் தருக.
10. தஞ்சையில் அவர் கட்டிய கோவிலின் சிறப்பு யாது ?

### பயிற்சி

1. இரு பொருள் தருக :—கங்கணம், சமயம், தானம்.

2. எதிர்ச் சொற்கள் தருக :—வெறுப்பு, மதிப்பு, நீதி, முன்னேற்றம், மற.

3. பிரித்து எழுதுக :—எண்ணற்ற, கருங்கல், வானளாவி.

4. வாக்கியங்களில் அமைக்க :—மிகையாகாது, பெருந்தன்மை, சித்திர வேலைப்பாடு, வளர்பிறை போல்.

5. 'அப்பிரமேயன்' என்பானைப் பற்றி எட்டு வரிகள் எழுதுக.

6. இராஜராஜ சோழரது போர்த் திறமையைப் பற்றிச் சுருக்கி வரைக.

7. 'சோழர்களும் கலைகளும்' என்ற பொருள் பற்றிப் பேசுவதற்குரிய குறிப்புக்கள் எழுதுக.

## 7. கரும் பொன் தொழில்

தங்கம், வெள்ளி, ஈயம், செம்பு, இரும்பு ஆகிய இவ்வைந்தும் ஐம்பொன் எனப்படும். இவற்றுள் இரும்பு மலிவான உலோகம் என்றாலும், அதன் உபயோகங்கள் எண்ணிறந்தன. எனவே, அது விலையுயர்ந்த தங்கம், வெள்ளி என்ற உலோகங்களுடன் எண்ணத் தக்கதாகிக் 'கரும் பொன்' என்னும் பெயர் பெற்றுள்ளது. உலகில் மிகவும் உபயோகமுள்ள உலோகம் இரும்பு ஒன்றே. இரும்பு இன்றேல் தொழிற்சாலைகள் இல்லை; பொறிகள் இல்லை. புகைவண்டி, மோட்டார், கப்பல் முதலியன இல்லை ; வீடு கட்ட இரும்பு வேண்டும் ; பயிர்த் தொழிலுக்கு இரும்பு வேண்டும் ; போர்த் தொழிலுக்கு இரும்பு வேண்டும் ; உடைகள் தைக்க இரும்பு வேண்டும். ஆதலின், சிறிய ஊசி முதல் பெரிய பொறிகள் வரை அனைத்திற்கும் இரும்பு அவசியம் வேண்டும்.

இரும்பு என்ற உலோகத்தை அறியாத காலம் ஒன்று ஒவ்வொரு நாட்டிலும் இருந்தது உண்டு. நமது நாட்டிலும் கற்களைக் கொண்டே மனிதர் தமக்கு வேண்டிய எல்லாக் கருவிகளையும் செய்து கொண்ட காலம் ஒன்று இருந்தது. இரும்பு தோன்றிய காலந்தொட்டு நமது நாட்டில் பல்வேறு இடங்களிலும் இரும்புத் தொழில் நடைபெற்று வந்தது. இந்திய நாட்டு

இரும்பின் மேன்மைக்கும் தொழில் திறமைக்கும் போதிய சான்ருய் விளங்குவது டில்லியிலுள்ள குதுப்மினர் என்னும் இரும்புத் தம்பம். அத்தம்பம் நிருமிக்கப்பட்டு ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளாயினும், இன்றுவரை துருப்பிடித்துக் கெட்டுப் போகாமல் இருக்கிறது.

சுரங்கத்திலிருந்து எடுக்கப்படும் இரும்பு, கல் மண் முதலியவற்ருேடு கலந்திருப்பதால் அதை உருக்கித் தூய்மையாக்க வேண்டும். உருக்கும் முறையில் மூன்று வகை இரும்பு கிடைக்கிறது. சிறிதளவு சுத்தம் செய்த இரும்பு வார்ப்பு இரும்பு எனப்படும். மேலும், அதைச் சுத்தம் செய்தது அடிப்பு இரும்பாகும். அதனையும் சுத்தமாக உருக்கியதே உருக்கு அல்லது எஃகு என்று சொல்லப்படும். எஃகு என்ற தமிழ்ச் சொல் மிகப் பழங் காலத்தில் நம் தமிழ் நாட்டில் வழங்கியிருப்பதாலும், 'கொல்லன் தெருவில் ஊசி விற்கலாமா?' என்ற தமிழ்ப் பழமொழி கொல்லர் வாழும் தெருவில் அவர்கள் தங்களுக்கும் பிறர்க்கும் வேண்டுமளவு இரும்புப் பொருள் எல்லாமே செய்யத் தக்கவர் என்பதை விளக்குவதாலும் இரும்புத் தொழில் தமிழகத்தில் பரவியிருந்தது என்பது தெளிவாகின்றது.

அமெரிக்காவில் இரும்பு அபரிமிதமாகக் கிடைப்பதால் பெரிய எந்திரங்களின் உதவியால் மக்களது தேவைக்குரிய பொருள்கள் அனைத்தும் ஆக்கப்படுகின்றன. அவை நமது நாட்டிலும் இறக்குமதியாகின்றன. அவ்வாறே இங்கிலாந்தும் ஜப்பானும் தமக்கு வேண்டுமளவு இரும்பு பெறுவதோடு பிற நாட்டுக்கும் அனுப்பத்தக்க நிலையில் இருக்கின்றன. இவ்விதம் இவை இறக்குமதி செய்து குறைந்த விலைக்கு விற்கப்பட்டமையின், எந்திர சாதனங்கள் அற்ற நம் நாட்டில் இரும்புத் தொழில் கைவிடப் பட்டது. ஆகவே, இன்று நாம் நமக்குத் தேவைப்படும் இரும்புத் தொழிற் பொருள்களைப் பெற அயல் நாடுகளையே நம்பியிருக்கிருேம். இந்நிலைமை உணர்ந்த இந்திய மக்கள் இப்பொழுது விழிப்புற்று இரும்புத் தொழிலை மீண்டும் தொடங்கத் துணிந்துள்ளனர்.

நம் நாட்டில் பலவிடங்களில் இரும்புக் கனிகள் இருப்பதாக ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனர். தமிழகத்தில் வட ஆர்க்காடு, தென்னுர்க்காடு, சேலம் முதலிய பகுதிகளில்

இரும்புக் கனிகள் உள்ளன என ஆராய்ந்து கூறியிருக்கின்றனர். ஆனால், சில இடங்களில்தான் இரும்பு உருக்கி எடுக்கப்படுகிறது. சுரங்கங்களிலிருந்து எடுக்கப்படும் இரும்பைக் கட்டியாக உருக்குவதற்கு நிலக்கரியும், சுண்ணாம்பும் வேண்டும். நிலக்கரிச் சுரங்கமும், இரும்புக் கனியும், சுண்ணாம்புப் பாறையும் ஒன்றுக்கொன்று அண்மையில் அமைந்திருப்பின் அவ்



பத்திராவதி இரும்புத்தொழிற்சாலை

விடத்தில் பெரிய தொழிற்சாலைகள் நிறுவலாம். நம்நாட்டில் இத்தகைய வாய்ப்பு ஏற்படவில்லை. இரும்பு கிடைக்கும் அநேக இடங்களில் நிலக்கரியும் சுண்ணாம்பும் அகப்படுவதில்லை. இரும்பு கிடைக்குமிடங்களுக்கு அவற்றைக் கொண்டு போய்ச் சேர்க்க அதிகப் பணச் செலவும் வீண் காலதாமதமும் ஏற்படுகின்றன. வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா ராஜ்யங்களில் இரும்பை உருக்கி எடுப்பதற்கான இத்தகைய இயற்கை வசதிகள் ஓரளவு அமைந்துள்ளன.

மைசூர் நாட்டில் இரும்பும் சுண்ணாம்பும் கிடைப்பதால் **பத்திராவதி** என்னுமிடத்தில் ஓர் இரும்புத் தொழிற்சாலை

அமைக்கப்பட்டிருக்கிறது. பத்திராவதி நகர் துங்கபத்திரா நதியின் கிளை நதிகளில் ஒன்றான பத்திராவதி நதியின் அண்மையில் அமைந்திருக்கிறது. அந்நகரத்திற்குச் சற்றுத் தூரத்திலுள்ள **கெம்மங்கண்டி** என்னும் குன்றுகளில் இரும்பு அதிகமாகக் கிடைக்கிறது. அக்குன்றுகளின் மேலுள்ள இரும்பு வெட்டி எடுக்கப்பட்டு பத்திராவதித் தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகிறது. பத்திராவதிக்கு அருகில் நிலக்கரி அகப்படாததால் காட்டிலுள்ள மரங்களை வெட்டி எரித்து கிடைக்கும் மரக்கரியை நிலக்கரிக்குப் பதிலாக உபயோகித்து வருகின்றனர்.

வங்காள மாகாணத்தில் ஹூக்ளி நதியின் கிழக்குக் கரையிலுள்ள **பாரக்பூரிலும்**, பீகார் மாகாணத்தில் **டாடா நகர்** என வழங்கும் ஜாம்ஷெட்பூரிலும் இரும்புத் தொழிற்சாலைகள் வெகு விமரிசையாக நடைபெறுகின்றன. இத்தொழிற்சாலைகளில் இரயில்வே எஞ்சின், மோட்டார், வானவூர்தி, கப்பல் முதலியவைகளுக்குரிய நானாவிதமான இரும்பு, எஃகுச் சாமான்கள் செய்யப்படுகின்றன.

நம் நாடு சுதந்திரம் பெற்றுள்ளது. நம் நாட்டின் நல்வாழ்வுக்கு வேண்டிய எல்லாத் தொழில்களையும் செய்ய நாம் முற்பட வேண்டும். ஒவ்வொரு தொழிலுக்கும் அடிப்படையாய் இருப்பது இரும்புத் தொழிலேயாகும். இத்தொழில் எந்நாட்டில் நன்கு வளர வில்லையோ அந்நாடு உலக நாடுகளில் தலை நிமிர்ந்து நிற்க முடியாது. உலகத்தின் கண்ணுள்ள ஒவ்வொரு நாடும் எல்லா வழிகளிலும் பிற நாடுகளை வெல்லவேண்டும் என்று முன்னேறிக் கொண்டிருக்கும் இக்காலத்தில் நாம் முன்பிருந்த நிலையில் இருப்பது அழகாமோ? "இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே; யந்திரங்கள் வகுத்திடுவீரே" என்ற பாரதியின் பொன் மொழியைக் கடைப்பிடித்து நம் நாட்டிற்குத் தேவையான இரும்புப் பொருள்கள் அனைத்தையும் நாமே செய்ய முற்படுவோமாக.

**வினாக்கள்**

1. ஐம்பொன் என்றால் என்ன?
2. இந்திய நாட்டின் இரும்புத் தொழில் திறமைக்கு ஒரு சான்று தருக.

3. உருக்கும் முறையில் இரும்பு எத்தனை வகையில் கிடைக்கிறது?

4. தமிழகத்தில் இரும்புத் தொழில் பரவியிருந்தது என்பதற்கு ஆதாரங்கள் யாவை?

5. தமிழகத்தில் எவ்விடங்களில் இரும்புக் கனிகள் உள்ளன?

6. இரும்பை உருக்கி எடுப்பதற்கு வேண்டும் சாதனங்கள் யாவை? அவை எவ்விடங்களில் அமைந்துள்ளன?

7. பத்திராவதியில் இரும்புத் தொழில் எவ்வாறு நடைபெறுகிறது?

8. இந்தியாவில் இரும்புத் தொழில் வேறு எவ்விடங்களில் நடைபெறுகின்றது?

9. நம் நாட்டின் நல்வாழ்வுக்கு நாம் செய்ய வேண்டியது என்ன?

## பயிற்சி

1. எதிர்ப் பதங்கள் தருக:—இறக்குமதி, அண்மை, செலவு, இயற்கை.

2. பிரித்தெழுதுக:—எண்ணிறந்தன, ஒவ்வொரு, சிறிதளவு.

3. வாக்கியத்தில் அமைக்க:—நல்வாழ்வு, கடைப் பிடித்து.

4. பொருள் வேறுபாடு அறிக:—பாரை, பாறை; உலோகம், உலகம்; பெரும், பெறும்.

5. நம் நாட்டுக் கைத் தொழில்கள் என்பது பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.

6. இரும்புத் தொழிலில் 'நம் நாடும் பிற நாடுகளும்' என்பது பற்றி ஐந்து நிமிடப் பேச்சுக்குக் குறிப்புக்கள் வரைக.

7. 'இரும்புத் தொழிலின் மேன்மை' என்பது பற்றிப் பத்து வரிகள் கொண்ட ஒரு பத்தி வரைக.

# 8. வானொலி

மக்கள் அறிவு திருந்திய காலந்தொட்டு வாழ்வினை ஒழுங்கு படுத்தி வந்திருக்கிறார்கள். வாழ்க்கையில் நேரும் இன்னல்களை தமது அறிவின் வன்மையால் பல வழிகளில் மாற்றியிருக்கிறார்கள். வாழ்வுக்கு வேண்டும் பொருள்களை இயற்கைச் சக்திகளின் துணையைக் கொண்டு அவ்வப்போது புதிது புதிதாகச் செய்து வருகின்றனர். இவ்விதம் நித்தம் புத்தம் புதிய பொருள்களை ஆராய்ச்சியாளர் தோற்றுவிப்பதற்கு முதற்காரணமாயிருப்பது மின்சாரம் என்னும் இயற்கைச் சக்தியாகும். மின்சார சக்தியால் அமைக்கப்பட்ட அரும் பொருள்களுள் **வானொலி** எனப்படும் **ரேடியோ** ஒன்றாகும்.

பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத்தில் மின்சார அறிஞர்கள் பலர் தந்தி அனுப்புவதற்கு மின்சாரக் காந்தம் இன்றியமையாதது எனக் கண்டு பிடித்தனர். மின்சார சக்தியின் உதவியால் அவசரச் செய்திகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் குறிப்பிட்ட ஓசைகளின் மூலம் செப்புக் கம்பிகளின் வாயிலாக அனுப்பும் முறையை **மோர்ஸ்** என்னும் அமெரிக்க நாட்டு விஞ்ஞானி கண்டு பிடித்தார்.



மார்க்கோனி

நிலத்தில் தூண்கள் நட்டுக்கம்பிகள் போடுவது எளிது ; ஆனால், பெருங்கடலைத் தாண்டிச் செய்திகள் அனுப்புவதற்கு இம்முறை ஏற்றதல்ல. ஆகவே, **மார்க்கோனி** என்னும் விஞ்ஞானி இரண்டு ஆண்டுகள் இரவும் பகலும் ஆராய்ந்து 1896-ல் மின்சார அலைகளால் செய்தி அனுப்பும் கருவியைக் கண்டு பிடித்தார். இக்கருவியே வானொலி எனப்படும் ரேடியோ ஆகும்.

இக்கருவி பல்லாயிர மைல்களுக்கப்பால் பேசப்படுவதை இங்கு நமக்கு எவ்வாறு அறிவிக்கின்றது என்பதை ஆராய நமக்கு வியப்பாகத்தானிருக்கும். நாம் ஒரு குளத்தண்டையி

லிருந்து கொண்டு கல் ஒன்றை எடுத்து அந்நீரில் போட்டால், அக்கல் விழுந்த இடத்திலிருந்து வட்டமான சிறு அலைகள் உண்டாகின்றன அல்லவா? அவை வட்டமாக அகன்று கொண்டே போய்க் கரையை அடைந்ததும் தடைபட்டு மறைந்து விடுகின்றன. அதுபோலவே காற்றிலும் அலைகள் உண்டாகின்றன.

காற்று, ஒலி அலைகளை நாலா பக்கங்களிலும் பரவச் செய்கின்றது. இந்த ஒலி அலைகள் ஒரு வகையான கருவியின் மேல் தாக்குகின்றன. அக்கருவியானது அவைகளைத் தன்பால் இழுத்துக் கொண்டு பன்மடங்கு அதிகமாகவே வெளிப்படுகிறது. இவ்வாறு வெளிப்படுத்துவதை நாம் எப்படிக் கேட்பது என்று நீங்கள் கேட்கலாம். நாம் பேசுகின்ற குரல்கள் எல்லாம் ஒரே வகையாக இருப்பதில்லை. அதுபோலவே



ரேடியோ

அவ்வொலிகள் யாவும் ஒரே மாதிரியாக இரா. ஆகையால் அந்தந்த ஒலியின் தன்மைக்குத் தக்கபடி அதை ஏற்றுக் கொள்ளும் கருவியும் அமைக்கப்பட்டிருக்கும். இந்தக் கருவி தான் நாம் கேட்கும் ஒலியை வெளிப்படுத்துகிறது. ஆனால், இவ்வொலியை நாம் நேராய்க் காண முடியாது. இப்படிப்பட்ட ஒலிகள் ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலிருந்தும் வருவதுண்டு ; சமீபமாக இருந்தும் வருவதுண்டு. எப்படிப்

பட்ட ஒலியையும் இந்தக் கருவி கிரகித்து, நாம் கிராமபோனில் கேட்பது போலக் கேட்கும்படி செய்கின்றது.

ஆகவே, ஒலி பரப்பும் செயலில் "ஒலியைக் கிரகிக்கும் கருவி" என்றும், "ஒலியை நாம் கேட்கும் வண்ணம் வெளியாக்கும் கருவி" என்றும் இரண்டு கருவிகள் இருக்கும். இந்த இரண்டும் இருந்தாலொழிய நாம் ஒலியைக் கேட்க இயலாது.

அரசியலார் சென்னை, திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் அகில இந்திய வானொலி நிலையங்கள் ஏற்படுத்தியுள்ளனர். இவ்விடங்களிலிருந்து ஒலி பரப்பப்படுகிறது. இது எவ்வாறு அனுப்பப்படுகிறது என்றால், இவ்வொலியைப் பரப்பும் கருவி ஓர் அறையில் வைக்கப்பட்டிருக்கும். அவ்வறை நன்றாக மூடப்பட்டிருக்கும். பாடகர்கள் அந்தக் கருவியின் எதிரிலே அமர்ந்து பாடுவர்; பேசுபவர்கள் பேசுவார்கள்; வாத்தியங்கள் முழங்கும். அந்தக் கருவி இவைகளை எல்லாம் கிரகித்து வெளியே அனுப்பும். அந்த ஒலியைப் பன்மடங்கு பெருக்கி எல்லோரும் கேட்கும்படி செய்வதுதான் ஒலி பரப்பி என்பதாகும். அரசாங்கத்தார் பொதுமக்கள் கேட்டின்புறுமாறு இக்கருவிகளைப் பொது இடங்களிலும் அமைத்துள்ளார்கள்.

வானொலியால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகள் பலவாகும். நடுக்கடலில் செல்லும் மரக்கலங்களுக்கும், வானத்தில் செல்லும் விமானங்களுக்கும் செய்திகள் அனுப்பலாம். கப்பலோ, விமானமோ ஆபத்துக்குள்ளாகுந் தருணம் அதன் கண்ணுள்ளவர்கள் வானொலி வாயிலாகத் தம் நாடுகட்குத் தெரிவித்து உதவி பெற்றுக் கொள்ளலாம். உலகத்தில் அன்றன்று நடக்கும் செய்திகளை விரைவில் பரப்புகிறது; கால நிலைகளையும், பொருள்களின் விலை விவரங்களையும் அறிவிக்கின்றது. உலக மக்களின் இன்பத்தைப் பெருக்குவதற்கும் வானொலி ஏற்ற கருவியாய் இருக்கிறது. கதைகள், நாடகங்கள், இன்னிசைகள், சொற்பொழிவுகள், அறிவுரைகள் முதலியவற்றையும் எல்லா மக்களும் ஒரே சமயத்தில் கேட்டுப் பயனடையலாம். இக்காலத்தில் வானொலி உலகத்துக்குப் பற்பல நன்மைகளைப் புரிந்து வருகின்றது. பள்ளிக் கல்விக்குங் கூட வானொலி பேருதவியாக இருப்பதை உங்களில் சிலர்

அறிந்திருக்கக் கூடும். தொடக்கநிலைப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி முதலியவற்றிற்கு ஏற்றவகையில் கல்வி பற்றிய செய்திகளும் வாராவாரம் ஒலிபரப்பி வருகின்றனர். இன்னும் அதிகமாக வருங்காலத்தில் வானொலி நமது கல்விக்குப் பேருதவி செய்யக்கூடும் என்று நாம் உறுதியாய்க் கூறலாம்.

## வினாக்கள்

1. மக்கள் தம் வாழ்வுக்கு வேண்டும் பொருள்களை எவ்விதம் செய்து வருகின்றனர்?

2. ஆராய்ச்சியாளர் புதிய பொருள்களைத் தோற்றுவிப்பதற்கு முதற்காரணமாயிருப்பது எது?

3. மோர்ஸ் என்னும் அறிஞர் கண்டு பிடித்ததென்ன?

4. ரேடியோ யாரால் எப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டது?

5. காற்றிலும் அலைகள் உண்டு என்பதை விளக்குக.

6. வானொலியில் அமைக்கப்பட்டுள்ள கருவிகள் யாவை? அவற்றின் வேலைகள் யாவை?

7. ஒலி எவ்வாறு பரப்பப்படுகிறது?

8. வானொலியால் உண்டாகும் பயன்கள் யாவை?

## பயிற்சி

1. எதிர்ச்சொல் தருக:—புதிது, இன்பம், நன்மை.

2. பிரித்தெழுதுக:—குளத்தண்டை, செப்புக்கம்பி, அவ்வொலி, வானொலி, மரக்கலம்.

3. வானொலி அமைக்கப்பட்டுள்ள ஒரு பொது இடத்தில் மாலை நேரத்தில் நீ காணும் காட்சிகளை விவரித்து ஒரு கட்டுரை எழுதுக.

4. கிராமங்களில் ரேடியோ நிலையங்கள் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தைக் குறித்து ஒரு நண்பனோடு உரையாடும் முறையில் ஒரு கட்டுரை எழுதுக.

## 9. கூனன் கதை

முன்னொரு காலத்தில் தார்த்தார நாட்டின் எல்லையில் காஸ்கார் என்றொரு பட்டணமிருந்தது. அப்பட்டணத்தில் சுந்தர ராவ் என்னும் ஒரு தையற்காரன் சந்திராபாய் என்னும் மனைவியுடன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் மாலை வேளையில் அச்சுந்தரன், தன் கடையில் உட்கார்ந்து தைத்துக்கொண்டிருக்கும் பொழுது, குறுகிய அவயவங்களுடைய கூனன் ஒருவன் வந்து, வெகு விநோதமாக ஆடிக் கொண்டும், இனிமையாகப் பாடிக் கொண்டும் பல வேடிக்கைகளைச் செய்து காட்டினான். அவை தையற்காரனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கின. ஆதலால், அவன் தனது மனையாளும் அவனது வேடிக்கைகளைக் கண்டு களிப்படையவேண்டுமென எண்ணி அவனைத் தன்னோடு வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.



தையற்காரன் தன் மனையாளை நோக்கி, "பெண்ணே! இதோ பார். இக்கூனன் தன் ஆடல் பாடல்களால் நம்மை உற்சாகப்படுத்தப் போகிறான். இன்றிரவை வெகு ஆனந்தமாகக் கழிக்கலாம். இவனுக்கு நல்ல விருந்தளிப்பாய்," என்றான். அதுகேட்ட மனையாள் தன் கணவன் சொற்படி பல சிற்றுண்டிகளுடன் புலால் சமைத்து, அன்னம் பரிமாறினாள். கணவன்

மனைவி இருவரும் கூனன் அருகிலிருந்து கொண்டு, அவன் இடை இடையே பகடி பேசுவதைக் கேட்டும், அவன் காட்டும் மாயா ஜாலங்களைக் கண்டும் இன்புற்றிருந்தனர். அப்பொழுது கூனன் தனக்கு முன்னேயிட்ட உணவு வகைகளை ஆவலோடு கை கொண்ட மட்டும் வாரி வாரியுண்டான். அவ்விதம் உண்ணுங்கால் ஊனோடு கலந்திருந்த ஒரு வலிய மாமிசத் துண்டம் அவன் தொண்டையில் அடைத்துக் கொண்டது. அதனால், கூனன் மாரடைத்துப் பிணம் போலத் தரையில் சாய்ந்தான். இதைக் கண்ணுற்ற தையற்காரனும் அவன் மனைவியும் திடுக்கிட்டு, "ஐயோ தெய்வமே! இஃதென்ன விபரீதம்! நமது வீட்டில் இவன் செத்துக் கிடப்பதை யாரேனும் கண்டால், நாம் சதி செய்து இவனைக் கொன்று விட்டதாகவல்லவோ எண்ணுவார்கள். அதிகாரிகள் கண்டால் தண்டிப்பார்களே" என்று அஞ்சித் தங்களால் செய்யக் கூடிய பரிகாரங்களெல்லாம் செய்து பார்த்தனர்; ஒன்றும் பயன் படாதது கண்டு, பிணத்தை எவ்வாறுவது வீட்டை விட்டு அப்புறப் படுத்திவிட வேண்டும் எனத் துணிந்தனர்.

தையற்காரனும் மனைவியும் அப்பிணத்தைத் தூக்கிக் கொண்டு நாலைந்து வீடுகளுக்கப்புறம் இருந்த ஒரு மருத்துவன் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினார்கள். அதைக் கேட்ட ஒரு பணிப் பெண் வந்து கதவைத் திறந்து "என்ன வேண்டும்?" என்று கேட்க, சுந்தரன், "அம்மா! ஒரு நோயாளியை அழைத்து வந்திருக்கிறோம்; வைத்தியரிடம் போய்ச் சொல்" என்றான். அப்பணிப் பெண் மேல் மாடியிலிருந்த மருத்துவனிடம் செல்லும் போது, அவள் பின்னரே இருவரும் மெல்லெனச் சென்று கூனன் பிணத்தை மேல் மாடிப் படிச் சுவரில் சார்த்தி வைத்து விட்டு மீண்டும் விரைந்து தம் வீடு போய்ச் சேர்ந்தனர்.

வேலைக்காரி மருத்துவனிடம் போய், "இருவர் நோயாளி ஒருவனைக் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள்," என்று கூறினாள். மருத்துவன் வேலைக்காரியை "விளக்குக் கொண்டுவா" என்று கட்டளையிட்டு, நோயாளியைப் பார்ப்பதற்காகத் தானிருந்த அறையைவிட்டு விரைந்து வந்தான். அப்போது அவன கால் தடுக்கி மேற்படிக்கடுத்தாற்போல் வைக்கப்பட்டிருந்த சவம் மளமளவென்று புரண்டு கீழே போய் விழுந்தது.

மருத்துவன், "இஃது என்ன?" என்று விளக்கொளியில் பார்க்கக் கூனன் விழுந்து செத்துக் கிடக்கக் கண்டான். "ஐயோ! நான் என்ன காரியம் செய்தேன்? இவனைக் கூட்டிக் கொண்டு வந்தவர்களையும் காணேமே? என் அவசரத்தால் இவன் இக்கதிக்குள்ளானுன்! இனி யாது செய்வேன்?" என்று மனங் கலங்கினுன். பின்னர், சற்றுத் தெளிவடைந்து அவன், வேலைக்காரியின் உதவியுடன் அந்நடுநிசியில் அவனைத் தூக்கிக் கொண்டு சென்ருன்; அங்கே தெருக் கோடியிலுள்ள ஒரு கடை வீட்டின் சுவரோடு சுவராய் நிற்கும்படி நிறுத்திவிட்டு, ஒருவரும் அறியாதபடி மிகவும் விரைவாய்த் தன் வீடு வந்து சேர்ந்தான்.

பொழுது புலருந் தருணத்தில் அயல் நாட்டு வர்த்தகனெருவன் இரவு மது உண்ட மயக்கத்தால் தள்ளாடிக் கொண்டே சென்ருன்; தன் நிலையைக் கண்டு ஜனங்கள் நகைப்பார்கள் என்று வேகமாக நடந்து வந்தான். அவன் வேகமாக மூலை திரும்புகையில், அவன் சென்ற விசையால் அம்மூலையில் நிறுத்தப்பட்டிருந்த சவம் அவன் முதுகின்மேல் திடீரெனச் சாய்ந்தது. அவன் அதைப் பிணமென்று ஓராது வழிப் பறிக்கும் கள்வனென்று நினைந்து, திரும்பி விரைவில் பிணத்தைப் பிடித்து முகத்தில் ஓங்கி ஒரு குத்துக் குத்திஞன். அக்குத்திஞல் பிணம் கீழே விழ, அதன்மேல் அவன் வீழ்ந்து "திருடன்! திருடன்!" என்று கூக்குரலிட்டுக் கொண்டே நன்ருய்ப் புடைத்தான்.

வர்த்தகனது கூச்சலைக் கேட்டு வழிப் போக்கர்கள் அங்கு வந்து கூடினர். நகரக் காவலர்களும் அங்கு வந்தனர். காவலர்கள் நடந்ததை விசாரித்து அறிந்து கொண்டு வர்த்தகனை நோக்கி, "ஐயா! அடித்தது போதும், நிறுத்தும்" என்று தடுத்துக் கள்வனைத் தூக்க முயன்றனர்; கள்வன் எழுந்திராது அசைவின்றிப் பிணமாயிருக்கக் கண்டு வர்த்தகனைப் பிடித்துக் கொண்டு போய் காவற் கூடஞ் சேர்த்தனர். வர்த்தகன் மது மயக்கம் நீங்கித் தெளிந்தபின், தான் முன்பின் ஆராயாது செய்த செய்கைக்காக வருந்திக் கொண்டிருந்தான். காவலர்கள் வியாபாரியை நீதிபதியின்முன் கொண்டு போய் நிறுத்திஞர்கள். நீதிபதி காவலர்களது முறையீட்டைக் கேட்டார்; கைதியுடன் கொண்டு வரப்பட்ட பிணத்தைப் பார்வையிட்ட பின்னர்,

வியாபாரியை நோக்கி, "நீ செய்ததாக உறுதி செய்யப்படுகிற இக்கொடிய செய்கைக்கு யாது கூறுகின்ருய்?" என்று கேட்டார். வர்த்தகன், "ஐயா! இவன் எனது கைகளாலேயே கொலையுண்டான்; ஆதலின், நானே குற்றவாளி" என்ருன்.

நீதிபதி வர்த்தகனைக் கழுவிலேற்றும்படி தீர்ப்பளித்துக் கொலைக் களத்திற்குக் கொண்டு போகும்படி கட்டளையிட்டார். கொலையாளிகள் கழுமரத்தடியில் வணிகனை நிறுத்தித் தூக்கிலிடத் தொடங்குகையில் வேடிக்கை பார்க்க வந்து அங்குக் குழுமிய கூட்டத்தினின்று, "அவனைக் கழுவேற்ருதீர்கள்! கழுவேற்ருதீர்கள்! கூனனைக் கொன்றவன் நானே" என்று உரத்துக் கூவிக்கொண்டே மருத்துவன் வெகு வேகமாக ஓடி வந்தான். அவன் நீதிபதியிடம் சென்று, "ஐயா! இக்கொலைக்குக் காரணம் இவ்வர்த்தகன் அல்லன்; நான் சொல்வதைச் சற்றுக் கவனமாய்க் கேளுங்கள்," என்று கூறித் தன் வீட்டில் நடந்த செய்திகளையெல்லாம் விவரமாய்ச் சொல்லி, கொன்றவன் நானே; வர்த்தகன் குற்றவாளி அல்லன் என்ருன்.

அதைக் கேட்ட நீதிபதி, "இஃதென்ன புதுமை! முற்றுஞ் சோதித்தறிவோம்" என்று எண்ணி "நல்லது, வர்த்தகனை விட்டு விட்டு வைத்தியனைக் கழுவிலேற்றுங்கள்" எனக் கட்டளையிட்டார். அப்பொழுது கூட்டத்திலிருந்த சுந்தரம் என்னும் தையற்காரன் "நான்தான் கூனனைக் கொன்றேன்; வைத்தியனைக் கழுவிலேற்ருதேயுங்கள்" என்று கூவிக் கொண்டே நீதிபதிமுன் ஓடி வந்தான். அவன் அக்கூனனைக் கடையில் கண்டு வீட்டிற்கு அழைத்துச் சென்றது முதல், வைத்தியன் வீட்டு மேல் மாடிப்படியில் விட்டு வந்தது வரையில் எல்லாச் செய்திகளையும் விளங்கக் கூறி, 'நானே கழுவேற வேண்டியவனுகின்றேன்' என்று பிடிவாதம் செய்தான்.

நீதிபதி இவ்விருவர் செய்தியைக் கேட்டு மேலே செய்ய வேண்டியதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், ஆங்கு நிகழ்ந்தவைகளை எல்லாம் கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த இரண வைத்தியன் ஒருவன் நீதிபதி முன் வந்து நின்று, "ஐயா! இந்தக் கூனன் இன்னும் சாகவில்லை; உத்தரவானுல் சிறிது நேரத்திற்குள் இவனை உயிர்ப்பிக்கிறேன்" என்று சொன்னுன். நீதிபதியும் சரியென்று கூறவே, இரண வைத்தி

யன் கூனனருகே சென்று, அவன் தலையைப் பிடித்துப் பலமாக அசைத்துத் தன்னிடமிருந்த ஓர் ஆயுதத்தால் அக்கூனன் தொண்டையில் அடைத்துக் கொண்டிருந்த மாமிசத் துண்டத்தை எடுத்து யாவருக்கும் காட்டினன். கூனன் நித்திரையினின்று எழுந்திருப்பவன் போல எழுந்து ஆடிப்பாடி ஆங்கிருந்தோர் அனைவரையும் மகிழ்வித்தான்.

## வினக்கள்

1. சுந்தர ராவ் எங்கு வசித்து வந்தான்?
2. அவன் கூனனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்லக் காரணமென்ன?
3. தையற்காரன் தன் மனையாளிடம் கூறியதென்ன?
4. அவர்கள் கூனனை எவ்விதம் உபசரித்தனர்?
5. கூனன் உண்ணும்போது நேர்ந்ததென்ன?
6. தையற்காரன் கூனனைக் கொன்றதாகப் பழி ஏற்படாதிருக்கும் பொருட்டு என்ன செய்தான்?
7. வைத்தியன் தன்மீது பழி ஏற்படாதிருக்க என்ன செய்தான்?
8. அயல் நாட்டு வர்த்தகன் நடந்து செல்லும்போது நேர்ந்ததென்ன?
9. அவன் ஏன் காவற்கூடத்தில் அடைபட்டான்?
10. வர்த்தகனைக் கழுவிலேற்ற முயலுந் தருணத்தில் நடந்ததென்ன?
11. கூனன் எவ்விதம் உயிர் பெற்றான்?
12. சந்தர்ப்பங் கூறுக:—
    ‘ஐயோ தெய்வமே! இஃது என்ன விபரீதம்!’
    ‘ஐயா! அடித்தது போதும் நிறுத்து நிறுத்து.’

## பயிற்சி

1. இருபொருள் கூறுக:—அன்னம், சதி, சந்து, பணி, நகை.
2. சேர்த்தெழுதுக:—தெரு+கோடி. நோய்+ஆளி.
3. ‘கூனனுக்கு நேர்ந்த விபத்து’ என்பது பற்றிப் பதினைந்து வரிகளில் எழுதுக.

# 10. பாலை வாசிகள்

பண்டைத் தமிழ் மக்கள் இயற்கை வாழ்வுடையோராய் இலங்கி இவ்வியற்கை நிலத்தை ஐந்திணைகளாகப் பகுத்துள்ளனர். இந்த ஐவகைத் திணைகளுள்ளும் சிறப்பாகக் கூறுமிடத்து நானிலமெனக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகியவற்றையே குறிப்பர். காரணமென்னவெனின், இந்நால்வகை நிலமும் வளங்குன்றியக்கால் ஐந்தாவதான பாலையின் பண்பை அடையுமென்பது அவர்தம் கொள்கை. ஆனால், அவ்வகை



பெதோவியரின் தலைவர்

வேறுபாடின்றி எக்காலும் பாலையின் பான்மையுடன் விளங்கும் நாடுகளும் உலகில் உள. அவற்றிலொன்றாக மகம்மதியர், கிறிஸ்தவர், யூதராகிய மூவகுப்பாரும் புண்ணியநாடெனக் கருதும் **பலஸ்தீன** நாட்டைச் சார்ந்த **யோர்தான்** நதிப்பிரதேசத்தைக் கூறலாம். அஃது மழை வளங்குன்றி, மணல் மிக்க எக்கரே எங்கணும் காணப்பெறும் தகைமையுடைத்து. இதன்

மேற்குப் பாகத்தில்தான் சாக்கடலுளது. யோர்தான் நதியின் அருகிலுள்ள நிலமும், சாக்கடலைச் சார்ந்த பிரதேசமும் நீங்க லாக, எஞ்சிய நிலப்பரப்பு மணற் காடாகவே தோன்றும்.

இந்நிலத்தில் வாழும் மக்கள் 'பெதோவியர்கள்' என் றழைக்கப்படுவர். இவர்கள் ஆடுகள், ஒட்டகங்களாகிய இவற் றுடன் எக்காலும் ஓரிடத்தில் நிலையாக வாழாது திரிந்து கொண்டேயிருப்பர்; சிற்சில சமயத்துப் பாலைத் தொழிலாகிய ஆறலைத்தலையும் மேற்கொள்ளுவர். இவர்களில் ஒரு சாரார் பயிர்த் தொழிலை மேற்கொண்டு, யோர்தான் நதியை அடுத்த கிராமங்களில் வசித்து வருகின்றனர். மற்றொரு சாரார் சிறிது காலம் வேளாண்மைத் தொழில் புரிந்தும் மற்றை நாட்களில் ஆடுகளை மேய்த்தும் தம் காலத்தைக் கழிக்கின்றனர். முதலில் கூறியவர்களே உண்மையான பாலை வாசிகளாவர்.

பெதோவியர்கள் நடுத்தரமான உயரமுடையவர்கள். அவர்களுடைய முகம் சிறிது நீண்டும், மூக்குக் கூரியதாகவும், கண்கள் பெரியனவாயும், உதடுகள் சிறியனவாயும் இருக்கும். கதிரவனின் வெங்கதிர்களால் தாக்கப் படுவோர்களாதலின், அவர்கள் கரிய நிறமுடையவராய் விளங்குவர். ஆடவர் மெலிந்து தோன்றுவது போல், பெண்பாலரும் மெலிந்தேயிருப் பர். அவர்களுள் தடித்த சரீரமுடையவர்களைக் காண்டலரிது. அவர்களுடைய ஆடைகள் உஷ்ணமான அவர்களுடைய தேசத் திற்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. 'டோப்' என்ற நீண்ட வெண்ணிறச் சட்டையொன்றும், அதன்மீது முன் பக்கத்தில் திறந்த மற்றொரு சட்டையும், அதன்மீது கையில்லாத கெட்டி யான சட்டையொன்றும் அவர்கள் அணியும் உடைகளாகும். கடைசியாகக் கூறப்பட்ட 'ஆபா' என்ற கெட்டியான சட்டையே அவர்களுடைய முக்கியமான ஆடை. அது ஒட்டக மயிராலானது. அதுவே, அவர்களுக்கு இரவில் போர்வையாக வும் உபயோகப்படுகிறது. அவர்கள் தலையில் சதுரமான துணி யொன்றை மடித்து ஆட்டுமயிராலாகிய கயிற்றால் இறுகக் கட் டிக்கொள்வர். பெண்களின் ஆடைகளும் ஓரளவு ஆண்களின் ஆடைகளைப் போன்றிருக்கும். ஆனால் உட்சட்டை பலவித வர்ணங்களுடையதாயிருக்கும். வெள்ளியினால் செய்யப்பட்ட அணிகலன்களைக் கைகளிலும் கழுத்திலும் விரல்களிலும் அவர் கள் அணிந்துகொள்வர்.

இப்பாலே வாசிகளான பெதோவியர்கள் கூடாரங்களிலே வசிக்கின்றனர். இக்கூடாரங்கள் ஆட்டு மயிரினுல் நெய்யப்பட்ட துணிகளாலானவை. மனிதர்களின் உயர்வு தாழ்வுக்கேற்ப இக்கூடாரங்கள் பெரியனவும் சிறியனவுமாய் அமைக்கப்படும்; தோற்றத்தில் நடுவிலுயர்ந்தும் பக்கங்களில் சரிவாகவும் காணப்படும்; நடுவில் திரையிடப்பட்டு, பின்பகுதி பெண்கள் வசிப்பதற்கு உபயோகப்படும். அப்பகுதி **மகாரம்** என்றழைக்கப்படும். அப்பகுதியில்தான் படுக்கைகளும், சமையற் பாத்திரங்களும் சேமித்து வைக்கப்படும். இப்பகுதி நாற்பக்கங்களிலும் துணியால் மறைக்கப்பட்டே இருக்கும். முன்பகுதி சிறப்புடையதாய் ஆண்கள் வசிப்பதற்கே உபயோகிக்கப்படும். இப்பகுதி 'ஷிக்' எனப்படும். இக்கூடாரங்கள் இடையிடையே திரைச் சீலைகளால் மறைக்கப்பட்டு, வெவ்வேறு அறைகளாகக் கருதப்படும். அவற்றில் பெதோவியரின் மனைவியர் வசிப்பர். கூடாரங்களுக்கு உபயோகிக்கப்படும் துணி, ஆட்டு மயிரினுல் நெய்யப்படும். இந்நெய்தல் தொழில் பெண்களாலேயே நடைபெறுகிறது. கூடாரத்தின் மேற்றுணியும் ஆட்டுமயிரினுலாகியதே. அவ்வப்போது ஏற்படும் கிழிசல்களைப் பெண்களே புதிய துணிகளால் தைத்துச் செவ்வையுறச் செய்வர். இவ்வாறு கிழிசல்கள் தைக்கப்படுவதால் கூடாரம் பல தையல்களோடு விளங்கும்.

பெதோவியர்கள் சதாகாலமும் அலைந்து திரிபவர்களானுலும், இறந்தவர்களை மிக்க மரியாதையுடன் அடக்கஞ்செய்து அவ்விடத்தில் கல்லறைகள் கட்டுவர்; கல்லறைகளின் பக்கங்களில் காப்பிப் பானைகள், தட்டுக்கள், சிறிய கோப்பைகள், திரிகைகள் ஆகியவற்றின் சித்திரங்களைப் பொறித்து வைப்பர். இச்சித்திரங்கள் இறந்த மனிதனின் ஈகைத் தன்மையைத் தெரிவிப்பனவாகும்.

'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு'

என்ற திருவள்ளுவர் கூற்றிற்கு இலக்காய் வாழ்ந்த தமிழ் மக்களின் அருங்குணங்களுள் ஒன்ருன 'விருந்தோம்பல்' இப்பாலை வாசிகளிடமும் அமைந்திருத்தல் வியக்கத் தக்கதேயாகும். பிரயாணஞ் செய்பவர்கள் தங்குவதற்குத் தரும சாலைகளும், விடுதி

களுமில்லாப் பாலைவனத்தில் இப்பெதோவியர்களே உறு துணையாயமைகின்றனர். விருந்தோம்பல் குணம் இவர்களுக் குத் தொன்று தொட்டே அமைந்த பெருங்குணமாகும். வழிப் போக்கன் இவர்களுடைய கூடாரங்களில் இன்சொல்லுடனும் மரியாதையுடனும் வரவேற்கப்படுவான். அறிமுகமானவனு யிருப்பின், பெதோவியன் பலதரம் குனிந்து வணங்கி வழிப் போக்கனின் இடது தோள்மீது தன் இடது கையை வைத்துத் தலையை இடது தோளிலும் வலது தோளிலும் வைத்து, அவன் முகத்தோடு தன் முகத்தைச் சேர்த்து, முத்தமிடும் பாவனையாக நாக்கை வெளியே நீட்டிப் பின் கூடாரத்தினுள் அழைத்துச் செல்வான்; அறிமுகமில்லாதவனுய் இருப்பின், வெளியே வந்து, கையைப் பிடித்து அன்புடன் கூடாரத்தினுள் கூட்டிச் செல்வான். விருந்தினர்களை உபசரிப்பதில் பெதோவி யர்களுக்குள் சச்சரவேற்படாவண்ணம், விருந்தினர் யாருடைய கூடாரத்திற்குச் செல்ல விரும்புகின்றனரோ அவ்விடத்திற்கே செல்லவேண்டும் என்னும் நியதி ஏற்பட்டுள்ளது. விருந்தினர் கூடாரத்தினுள் சென்றதும், அவர்கள் வீற்றிருப்பதற்காக வீட் டுத் தலைவனே கம்பளிகளை விரிப்பான்.

காப்பிப் பானம் தயார் செய்வது அவர்களுக்குள் மேன்மை யானதாகக் கருதப்படுகின்றது. அது பெண்கள் செய்ய வேண் டிய வேலையன்று; பெதோவியர்களின் தலைவர்களாகிய **ஷெய்க் குக்கள்** விருந்தினருக்குத் தாமே காப்பிப் பானம் தயாரித்துக் கொடுப்பர். முதலில் பெரிய பாத்திரமொன்றில் காப்பித் தூளை யிட்டு, நீரைக் காய்ச்சியபின் அதனினும் சிறிய பாத்திரத்தில் ஊற்றுவர்; அவ்வாறு ஊற்றப்பட்ட நீரைத் திரும்பவும் காய்ச்சுவர். இவ்விதமாக மிகப் பெரிய பாத்திரத்திலிருந்து மிகச் சிறிய பாத்திரம் வரை ஒவ்வொரு பாத்திரத்திலும் ஊற் றிக் காய்ச்சிய பின்னரே விருந்தாளிக்கு அப்பானம் அளிக்கப் படும். இக்காப்பிப் பானமே அவர்களுக்குள் மேன்மையானது எனக் கருதப்படுகின்றது. காப்பிப் பானத்தில் சர்க்கரையிட்டு இனிப்புச் சுவையுடன் அருந்தாது, கசப்பாகவே உட்கொள் ளுவர்.

அவர்கள் விருந்தினருக்கு ஆட்டிறைச்சியுடன் உணவளிப் பர். தன் வீட்டில் ஆடுகளில்லாவிடின் இரண்டு மூன்று மைல்

தூரம் சென்றுவது ஆட்டைக் கொணர்ந்து விருந்தினர்க்கு உணவளிக்க வேண்டுமென்ற வழக்கம் ஏற்பட்டுள்ளது. இறைச்சியுடன் ரொட்டிகளும் சோறும் கலந்து, பெரிய பாத்திரங்களிலிடப்படும். விருந்தினர்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு இப்பாத்திரங்கள் மிகப் பெரியனவாகவும் சிறியனவாகவும் இருக்கும். சில சமயங்களில் இப்பாத்திரங்கள் இருபது மனிதர்கள் சேர்ந்தே தூக்கிச் செல்லுமளவிற்குப் பெரியனவாகவும் இருக்கும். முதலில் விருந்தினர்கள் அப்பாத்திரத்தைச் சுற்றிலுமிருந்து தங்களுக்கு வேண்டுமளவு உணவருந்துவர். விருந்தினரெல்லோரும் சாப்பிட்ட பின்னரே பெதோவியர்கள் உணவருந்துவர். வீட்டுத் தலைவன்

'' விருந்து புறத் ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.''

என்ற குறளின் உண்மையை அறிந்தவன்போல் விருந்தினர் உண்ணுமளவும் தான் உண்ணாது அவர்களுக்கு வேண்டுவனவற்றை அளித்தலிலேயே ஈடுபட்டுப் பரிசாரகனாயமைவான். இவ்வித உயர்ந்த குணம் பாலை வாசிகளிடம் அமைந்திருத்தல் வியப்பேயன்றோ ?

பெதோவியர்களும், பண்டைத் தமிழ் மக்களைப்போல் இயற்கை அழகைப் போற்றி வாழ்கின்றனர்; இயற்கையை ஆய்ந்தே விருந்தினரை மகிழ்விக்குமாறு பலவித வர்ணங்களோடு செறிந்த போர்வைகளையும், திரைச் சீலைகளையும் நெய்கின்றனர். அவர்களுக்கு அழகுமிக்க மலர்களின்மீது விருப்பம் அதிகம். அவர்கள் தமக்குள் ஏற்படுத்திக்கொள்ளும் ஒழுங்குகளையும் சட்டங்களையும் திறம்பாது கைக்கொள்ளுவர். நாகரிகம் மிக்க இக்காலத்தும், பரம்பரை வழக்கங்களை விடாது, தொன்றுதொட்டே வரும் விருந்தோம்பல், வாக்கு மீறாதிருத்தல், இயற்கை வாழ்வு நடத்துதல் முதலிய உயரிய குணங்களுடன் விளங்கும் பெதோவியர்கள் பண்டைக்கால மக்கட்கோர் சான்றாய் அமைந்துள்ளனர்.

## வினாக்கள்

1. மக்கள் நிலத்தைச் சிறப்பாக நானிலமெனக்கூறக் காரணமென்ன ?

2. பலஸ்தீனு நாடு யார் யாருக்குப் புண்ணிய நாடாக விளங்குகிறது?

3. யோர்தான் நதிப் பிரதேசம் எத்தகையது?

4. உண்மையான பாலை வாசிகள் யார்? அவர்களது தொழில்கள் யாவை?

5. பெதோவியரில் ஆண்கள் எவ்வாறு உடையணிந்திருப்பர்?

6. பெதோவியர்கள் எவ்விதம் கூடாரம் அமைக்கின்றனர்?

7. பெதோவியரின் கல்லறையில் காணப்படும் விநோதம் யாது?

8. அவர்கள் விருந்தினரை எவ்விதம் வரவேற்கின்றனர்?

9. அவர்கள் விருந்தினரை எவ்விதம் உண்பிப்பர்?

## பயிற்சி

1. இருபொருள் கூறுக:—அணி, வெள்ளி, நெய், தையல், திரை.

2. எதிர்ச் சொல் தருக:—உயர்வு, இனிப்பு.

3. சேர்த்தெழுதுக:—நான்கு+நிலம். வெண்மை + நிறம். உள்+சட்டை. நெய்தல்+தொழில். மேல்+துணி.

4. பொருள் வேறுபாடென்ன?

பிரதேசம், பிறதேசம்; கூரிய, கூறிய; திரை, திறை.

5. 'பெதோவியர்களின் குணதிசயங்கள்' என்ற தலைப்பில் ஒரு சிறு கட்டுரை வரைக.

6. 'விருந்து புறத்ததா' என்று தொடங்கும் குறளை விளக்கிப் பதினைந்து வரிகள் எழுதுக.

# 11. காகிதம் செய்தல்

ஒரு நாட்டின் மேம்பாட்டிற்குக் கல்வியும் கைத்தொழிலும் இன்றியமையாதன. கல்வி உயிர்க்கு உரம் செய்கிறது. கைத்தொழில் உடலுக்கு உரம் செய்கிறது. இவ்விரண்டினாலுமே மக்களின் வாழ்க்கைச் சிறப்பும் நாகரிக மேம்பாடும் ஏற்படுகின்றன. இதனை உணர்ந்தே அரசியலார் பள்ளிகளில் கைத்தொழில்களையும் கட்டாயப் பாடமாக அமைத்துள்ளார்கள். ஒவ்வொருவரும் யாதேனும் ஒரு கைத்தொழிலைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவ்வகையில் காகிதம் செய்யும் தொழிலைப்பற்றிக் கவனிப்போம்:

தற்காலத்தில் நாம் எழுதுவதற்குக் காகிதத்தை உபயோகிக்கிறோம். முற்காலத்தில் காகிதம் கிடையாது. அதைச் செய்யும் முறையும் மனிதர்களுக்குத் தெரியாது. ஆகவே, நமது முன்னோர்கள் முதன்முதல் எலும்புகளிலும் பாறைகளிலும் எழுதி வந்தனர்; அதன் பின்னர்ப் பதஞ்செய்த தோல்களின்மீதும், மரப் பலகைகளிலும், செப்புத் தகடுகளிலும் எழுதலானார்கள். எகிப்தியர் **பப்பிரஸ்** என்னும் செடியின் தண்டிலுள்ள உட்பாகத்தை உபயோகித்துக் காகிதம் செய்து அநேக நூல்களை எழுதி வைத்தனர். நமது நாட்டில் நமது முன்னோர்கள் பனையோலைகளையே எழுதுவதற்குப் பயன்படுத்தி வந்தார்கள்; நன்றாக விளைந்த பனங் குருத்துக்களைக் கொண்டு வந்து கத்தியால் சீவி ஓரளவாக நறுக்கிக்கொண்டு எழுத்தாணி கொண்டு எழுதுவார்கள். நம் மூதாதைகள் யாவரும் இவ்விதமான பனையேடுகளில் எழுதித்தான் படித்து வந்தார்கள்.

முதன்முதலில் காகிதம் செய்தவர்கள் சீனரேயாவர். சுமார் கி. மு. 125ல் அவர்கள் காகிதம் செய்ய ஆரம்பித்தனர். அராபியர் அவர்களிடமிருந்து காகிதம் செய்யும் முறையைக் கற்று, மேனாடுகளில் இத்தொழில் பரவும்படி செய்தனர். ஐரோப்பாக் கண்டத்தில் முதன் முதலாகக் காகிதம் செய்யப்பட்ட இடம் ஸ்பெயின் தேசமாகும்.

மொகலாயர் ஆட்சியின்போது இத்தொழில் நம் நாட்டுக்கு வந்தது. அக்கால முதல் காகிதம் செய்யும் தொழில் நம் நாட்டில் செழித்து வளர்ந்து வந்ததாகத் தெரியவில்லை.

நாளடைவில் அத்தொழில் நசித்துவிட்டது. எனினும், இப்பொழுது நம் நாட்டில் சில இடங்களில் காகிதத் தொழில் குடிசைத் தொழிலாகவும் இயந்திரத் தொழிலாகவும் நடைபெற்று வருகிறது. ஆயினும், இந்தியாவின் தேவைக்கு இக்காகித உற்பத்தி போதுமானதாயில்லை. ஆகவே, மேனுட்டிலிருந்தும் நமக்கு வேண்டிய காகிதங்கள் வரவழைக்கின்றேம்.

காகித உற்பத்திக்குரிய மூலப்பொருள்கள் கந்தல் துணிகள், மூங்கில், புல், வைக்கோல், நாணல், வாழைப்பட்டை முதலியனவாகும். இவைகள் யாவும் நம் நாட்டில் ஏராளமாகக் கிடைக்கின்றன. இவைகளை எல்லாம் சிறு சிறு துண்டுகளாக்கி ஒரு பெரிய கொப்பரையிலிட்டுத் தண்ணீர் ஊற்றுவார்கள்; அதைச் சுத்தி செய்வதற்குச் சோடா உப்பையும், சுண்ணங்களையும் அதில் போட்டு நன்ருக வேக வைப்பார்கள். அவைகளிலுள்ள அழுக்குகளும் சாயமும் நுரையாகப் பொங்கி மேலே வரும். அந்நுரையை நீக்கிவிட்டால் கொப்பரையிலுள்ளவை நல்ல வெண்ணிறமாயிருக்கும். இதைப் பன்முறையும் இப்படியே சுத்தி செய்வார்கள்.

பின்னர் இதைப் பெட்டி போன்றுள்ள ஓர் இயந்திரத்தில் கொட்டுவார்கள். அந்த இயந்திரத்தின் அடிப்பாகத்தில் பல உருளைகள் இருக்கும். அந்த உருளைகளைச் சுற்றிலும் பல சிறிய கத்திகள் வரிசையாக இருக்கும். அந்த இயந்திரம் இயங்குவதனுல் உருளைகள் சுற்றும்; அந்தக் கந்தைத் தொகுதிகளெல்லாம் அரைபட்டுக் கூழாகி விடும். அப்பால் அந்தக் கூழை அடியிலுள்ள சிறிய துவாரங்களின் வழியாக வேருெரு தொட்டியிலிட்டு வடி கட்டுவார்கள்.

இப்படி வடி கட்டிய கூழ் மிருதுவாகவும் சற்று இறுகியுமிருக்கும். இதை ஒருவகைக் கம்பிகளாலாகிய சல்லடைத் தகட்டிலிட்டு அழுத்தி எடுப்பார்கள். அப்பொழுது அக்கூழ் பசையைப்போலிருக்கும். அப்பசையிலுள்ள நீர் வடிந்த பிறகு அதை ஒரு கம்பளியில் கவிழ்த்து மற்ருெரு கம்பளித் துண்டால் ஒற்றுவார்கள். சிறிது நேரத்தில் அது உலர்ந்து மை ஒற்றும் தாள்போல் இருக்கும்.

பிறகு, அதை ஒரு வகையான மருந்துகள் கலந்த நீரில் நனைத்தெடுத்து வழுவழுப்பான பல உருளைகளினிடையே கொடுத்தெடுப்பார்கள். அப்பொழுதுதான் அது நாம் எழுதுகிறதாளாகிறது. பிற்பாடு அக்காகிதத்தைச் செய்யும் வியாபாரிகள் தமது பெயரை நீரெழுத்துக்களின் மூலமாக ஒவ்வொரு தாளிலும் அமைப்பார்கள். தாள்களைக் கையில் எடுத்துப் பார்த்தால் இந்த எழுத்துக்கள் நன்ருய்த் தெரியும். இப்படியாகச் செய்யப்படும் காகிதம் மிகப் பெரியதாக இருக்கும். அவைகளை இயந்திரங்களில் கொடுத்து வேண்டிய அளவுக்கு வெட்டி, எண்ணி மடித்துக் கட்டி வியாபாரத்துக்கு அனுப்புவர்.

வைக்கோல் புற்களையும், மரத் தூள்களையும் சேர்த்துச் செய்யப்படும் காகிதமும் உண்டு. அது அவ்வளவாக நன்ருயிராது. காகிதக் கூழோடு பல நிறச் சாயங்களைச் சேர்த்துப் பல நிறமான காகிதங்கள் செய்வார்கள்.

ஜப்பானியர் இக்காகிதத்தைப் பல வகையிலும் பயன்படுத்திக் கொள்கின்றனர். அவர்கள் அட்டைகளைக் கொண்டே வீடுகள் அமைத்துக் கொள்வார்கள். வெயிலாலும், மழையாலும் அழியாதபடி அட்டைகளின் மேல் ஒருவகையான பொருள்கள் பூசி அவைகளைச் சுவர்களாகவும், கூரைகளாகவும் உபயோகப் படுத்துவார்கள். காகிதத்தினுல் குடைகளும் செய்து கொள்ளுவார்கள். சித்திரப் பூக்கள் முதலிய விளையாட்டுப் பொருள்கள் செய்வார்கள்.

இக்காலத்தில் காகிதம் செய்யப்படுகிற தொழிற்சாலைகள் பல இடங்களிலும் ஏற்பட்டு, நாள் தோறும் பேல் கணக்கில் காகிதம் உற்பத்தி செய்யப்படுகிறது. உலகத்தில் செய்யப்படும் காகிதத்தில் முக்காற் பங்கு ஏறக்குறைய அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள இயந்திரத் தொழிற்சாலைகளில் செய்யப்படுவதேயாகும்.

நமது தேசத்தில் கல்கத்தா, பம்பாய் முதலிய நகரங்களிலும் காகிதத் தொழிற்சாலைகள் ஏற்பட்டு நடந்துவருகின்றன. காகிதம் செய்யும் தொழிலைக் குடிசைத் தொழிலாக மேற்கொண்டு நாம் நடத்தி வந்தால் காகிதத்திற்காக அயல் நாடுகளை எதிர் நோக்கி நிற்க வேண்டிய நிலைமை ஏற்படாது.

## வினுக்கள்

1. மக்களின் வாழ்க்கை எவற்ருல் மேம்பாடு அடைகின்றது?

2. நமது முன்னேர்கள் எவற்றில் எழுதி வந்தனர் ?

3. எகிப்தியர் முதன்முதல் எதில் தங்கள் நூல்களை எழுதி வைத்தனர் ?

4. நமது நாட்டில் ஆதியில் மக்கள் எதில் எழுதிப் படித்தார்கள் ?

5. முதன்முதல் காகிதம் செய்தவர்கள் யார் ?

6. காகிதம் செய்யும் முறை மேனுடுகளில் எவ்விதம் பரவியது ?

7. காகிதம் செய்யும் முறை யாது?

8. ஜப்பானியர் காகிதத்தை எப்படிப் பயன்படுத்துகிருர்கள் ?

9. உலகத்தில் செய்யப்படும் காகிதத்தில் பெரும்பகுதி எங்குச் செய்யப்படுகிறது ?

10. நமது நாட்டில் எந்தெந்த நகரங்களில் காகிதத் தொழிற்சாலைகள் இருக்கின்றன ?

## பயிற்சி

1. இருபொருள் தருக :—உரம், கொப்பரை, வரிசை, மடி.

2. எதிர்ச்சொல் கூறுக :—தண்ணீர், முற்காலம், எளிது, புதிது, சுத்தம், நனை.

3. பிரித்துக் காட்டுக :—நீரெழுத்து, வெண்ணிறம், பன்முறை, பனையோலை, எழுத்தாணி, மரப்பலகை, செப்புத் தகடு.

4. முற்காலத்தில் மக்கள் எழுதி வந்த முறைகளைப் பற்றிச் சுருக்கி வரைக.

5. கையால் காகிதம் செய்யும் முறையை விளக்கி ஒரு சிறு கட்டுரை வரைக.

# 12. உண்டி கொடுத்த உதியன்

"வண் புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" என்று தொல்காப்பியர் கூறியபடி, சேர சோழ பாண்டியர் மூவரும் தொன்று தொட்டுத் தென்னாடுகளை ஆண்டு வந்த தமிழ் வேந்தர்கள் என்பதும், தமிழகத்தின் பண்டைப் பெருமையைச் சிறப்பித்து வந்தவர்களென்பதும் யாவரும் அறிந்தனவே. அவர்களில் முன்னே வைத்துச் சொல்லப்படும் பெருமை வாய்ந்தவர் சேர ரேயாவர். பழந்தமிழ் நூல்களாகிய பதிற்றுப் பத்து, சிலப்பதிகாரம், புறநானூறு முதலிய சங்க நூல்கள் சேரர்களுடைய வீரம், நியாயம், தியாகம், ஈகை; வல்லமை, பொறுமை, தண்ணளி, தெய்வ பக்தி முதலியவற்றினை விளங்கக் கூறுகின்றன. சேர வமிசம் மிகப் புராதனமானதென்பது வான்மீகி முனிவர் கேரள தேசத்தையும் அதன் துறைமுகப் பட்டினமான முசிரியையும் பற்றித் தம் இதிகாசத்தில் குறிப்பிடுவதால் தெரிகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சேர அரசர்களில் **உதியன் சேரலாதன்** என்பவன் ஒருவன். இவன் சேர மன்னர்களில் மிகப் பழமையானவன் ; சிந்தனை மிக்கவன் ; அறிவு ஆற்றல்களில் மேம்பட்டவன்; தன்னுயிர்போல் மன்னுயிரை மதித்து ஆட்சி புரிந்தவன். இவன் இல்லை என்று இரப்போர்க்கு இல்லையென்று உரையாது அவர்கள் வேண்டுமளவும் கொடுத்து உதவியவன் ; பகைவருக்கும் அருள் செய்யும் பண்பினன் ; தன்னைப் போற்றுதாரைப் பொறுக்கும் திறத்தில் பூமிக்குச் சமானம் ஆனவன். இவன் காலத்தில் அவன் புலவர் பாடும் புகழமைந்தவனாய், அறவோர் போற்றும் அறநெறி வழுவாதவனாய், ஆன்றோர் புகழும் அன்பு வாய்ந்தவனாய் விளங்கினான்.

இத்தகைய சிறந்த வீரன், பசித்தோர்க்குச் சோறிடுதலையே சிறந்த அறமெனக் கருதினான் ; ஆகையால், தன் நாட்டின் பல விடங்களிலும் சோறிடும் அறச் சாலைகளை ஏற்படுத்தினான். **குழுமூர்** என்னும் ஊரில் இவன் ஏற்படுத்திய அறச் சாலை பிரசித்தி பெற்று விளங்கியது. அது பல்லாயிரக் கணக்கான ஏழை மக்களின் வயிற்றுப் பசியைத் தணித்துக்கொண்டிருந்தது. யார் எந்நேரத்தில் வந்து உணவு கேட்டாலும் அவ்வறச் சாலையிலுள்ள சமையற்காரர்கள் இல்லையென்னாமல் உணவளித்து

வந்தனர். ஆகவே, பல நாட்டிலிருந்து ஏழை மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து வயிமுர உண்டு உதியன் சேரலாதனே வாயார வாழ்த்திச் சென்றனர்.

அக்காலத்தில் தமிழ் நாட்டிலமைந்த **முரஞ்சியூர்** என்னும் சிற்றூரில் **நாகராயர்** என்னும் பெயர் பெற்ற ஒரு புலவர் சிறப்புற்று விளங்கினர். புலவர்களிலே சிறந்தவர்களுக்கு அரசர்கள் முடியணியும் சிறப்பை வழங்குவார்கள். உதியன் சேரலாதன் நாகராயருக்கு அத்தகைய சிறப்பை வழங்கினன். ஆதலின் அவரை முரஞ்சியூர் முடிநாகராயர் என்று தமிழ் நாட்டு மக்கள் அழைத்து வந்தனர். புலவரும் வேந்தனும் உயிரும் உடலும் போல் வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வாறு உதியன்சேரன் அறச் செயலில் ஈடுபட்டு வருங் காலத்தில் வடநாட்டை ஆண்ட அரசர்கள் பலர். அவர்களில் சிறந்தோர் பாண்டவர்களும் கௌரவர்களும் ஆவர். பாண்டவர்கள் இந்திரப் பிரத்தத்திலும், கௌரவர்கள் அத்தினபுரியிலும் வீற்றிருந்து அரசாட்சி புரிந்தனர். பாண்டவர்கள் புகழைக் கண்டு கௌரவர் பொருமை கொண்டனர். அதன் பயனுகப் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் குருக்ஷேத்திரம் என்னும் இடத்தில் போர் ஏற்பட்டது. போர் அறப்போராகச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடைபெற்றது. எல்லா நாட்டு மக்களும் இரு கட்சிகளிலும் சேர்ந்து போரிட்டனர். தமிழ் நாட்டு வீரர்கள் பலரும் இப்போரில் ஈடுபட்டிருந்தனர். போர் நிகழ்ச்சியினுல் வேளாண்மை முதலிய முயற்சிகள் சுருங்கின. போர் பதினெட்டு நாள் நடந்த போதிலும், அதற்கு முன்னே பல பல ஏற்பாடுகள் நடந்தமையால் இந்நிலை வந்துவிட்டது.

பாரதப் போரில் ஈடுபட்ட வீரர்களுக்கு உணவு போதாது என்ற செய்தியைத் தமிழ் நாட்டு மன்னன் உதியன் சேரலாதன் அறிந்தான். தமிழ் நாடு நெல்லும் கரும்பும் விளையும் நாடு. ஆகவே, சேர மன்னன் பாரதப் போர் வீரர்களுக்குச் சோறூட்டும் அறத் தொண்டை மேற்கொண்டான். பசித்தவன் பகைவனுக இருப்பினும், அவனது பசியைப் போக்குவது அறமென்பது ஆன்றோர் கொள்கை. சேரலாதன் இத்தகைய சீரிய உள்ளம் உள்ளவன். ஆதலின், அவன் ஒரு கட்சியினருக்குத் தான் உணவு தருவேன் என்று கூறுது இரு திறத்தார் சேனைக்

கும் போதிய உணவு அளிப்பதே தன் கடமை என்று உணர்ந்து போர் முடியும் வரைக்கும் அவ்விதமே செய்து வந்தான்.

இவ்வரும்பெரும் செயலால் பாரத நாடு முழுவதும் அவன் புகழ் பரவியது. ஆதலின், அவனுக்குப் 'பெருஞ் சோற்று உதியன் சேரலாதன்' என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது. மக்கள், அனைவரும் அப்பெயராலேயே அவனை அழைப்பா ராயினர். இதனை,

"ஓரைவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றுது தானளித்த...சேரன்"

என்ற அடிகளையுடைய சிலப்பதிகாரத்திலுள்ள வாழ்த்துக் காதை வலியுறுத்தும்.

பாரதப் போர் முடிந்தது. பாண்டவர் வெற்றியடைந்தனர். துரியோதனாதியர் நூற்றுவரும் அழிந்தொழிந்தார்கள். தர்மம் வெற்றி பெற்றது ; அதர்மம் தோற்றது. போர் முடியும்வரை இரு திறத்துப் படைகளுக்கும் கணக்கின்றிச் சோறு வழங் கினான்.

பாரதப்போர் முடிந்து நாட்டில் அமைதி ஏற்பட்டது. முரஞ்சியூர் முடிநாகராயர் வடநாட்டுக்கு யாத்திரை சென்றார். அங்கு அவர் வடநாட்டுப் பெருமையை உணர்ந்ததோடு அங் குள்ளார் தமிழ் மன்னன் உதியனது வண்மையைப் போற்றக் கேட்டு அம்மன்னனது பெருமையையும் நன்குணர்ந்தார். பின்னர், அவர் பாரத நாட்டின் வட பேரெல்லையாக வானை நோக்கி நிமிர்ந்து நிற்கும் இமய மலையைப் பார்க்கப் பேரவாக் கொண்டு அங்குச் சென்று மலைச் சாரலில் புகுந்தார் ; பல முனி வர்களின் ஆசிரமங்களை அடைந்து முனிவர்களைத் தரிசித்தார். இமய வரையைக் கண்ட புலவருக்குத் தமிழ் நாட்டு நினைவு தோன்றியது. இமயத்தையும் பொதிய மலையையும் இணைத்துப் பார்த்தார். உருவத்தால் சிறியவராயினும் புலமையாற் பெரிய அகத்தியர் உருவத்தால் சிறியதாயினும் புகழினாற் பெரிய பொதிய மலையில் இருந்தனரன்றோ ! இமயமும் பொதியமும் பெருமையால் ஒத்தனவே என்ற எண்ணம் உண்டாயிற்று. உள்ளத்தில் உவகை பூத்தது. ஆகவே, அவர் வட நாட்டு யாத் திரையை விரைவில் முடித்துக் கொண்டு தமிழ் நாட்டுக்கு மீண்டு வந்தார் ; நேரே அரண்மனைக்குச் சென்று உதியன் சேர லாதனை அணுகினார்.

அவரைக் கண்டதும் மனமகிழ்ந்து, "புலவரே, வடநாட்டு யாத்திரை எவ்விதமிருந்தது ? ஆங்கு என்னென்ன அதிசயங்கள் கண்டீர்கள் ?" என்று அன்பு ததும்புங் குரலில் கேட்டான். அது கேட்ட புலவர் உணர்ச்சி மிகுதியால் 'பஞ்ச பூதங்களது இயல்பைப் போல் பகைவரிடத்து நடந்து கொள்ளும் தன்மை உடையவனே! பரந்த எல்லையையும், புதிய புதிய விளைவுகளையுமுடைய ஊர்களைக்கொண்ட நல்ல நாட்டு மன்னா! பஞ்சபாண்டவர்களுக்கும் துரியோதனாதிகளுக்கும் போர் நடக்குங்கால் இருதிறத்தாருக்கும் சோறாகிய மிக்க உணவைக் கணக்கின்றி வழங்கினவனே ! பால் புளித்துப் போனாலும், சூரியன் இருண்டுபோனாலும், நான்கு வேதங்களின் வழியே நடைபெறும் ஒழுக்கம் வேறுபட்டாலும், வேறுபாடில்லாத ஆலோசனையைப் பெற்ற மந்திரிகளோடு நெடுங்காலம் விளங்கி, மலைச் சாரலில் குட்டிகளோடு பெண் மான்கள் அந்திக் காலத்தில் அந்தணர்கள் செய்யும் கடனாகிய யாகத்தைச் செய்யும் முத்தீயாகிய விளக்கிற்கு அருகில் துயிலும் பொற்சிகரங்களையுடைய இமய மலையையும் பொதிய மலையையும் போல நடுக்கமின்றி நெடுங்காலம் வாழ்வாயாக!' என்ற கருத்தையுடைய ஓர் இனிய பாடலைப் பாடினார்.

புலவரின் புகழுரையைக் கேட்ட மன்னனும் மனமகிழ்ச்சி கொண்டான். புலவரும் புரவலனும் அந்நியோந்நியமாகப் பழகி வந்தனர்.

## வினாக்கள்

1. தமிழ் வேந்தரின் சிறப்பு யாது ?
2. சேரரது சிறந்த குணங்கள் எந்நூல்களில் கூறப்படுகின்றன ?
3. சேர வமிசம் புராதனமானது என்பது எதனால் தெரிய வருகிறது ?
4. உதியன் சேரலாதனது சிறப்பு யாது ?
5. முரஞ்சியூர் முடிநாகராயருக்கு அப்பெயர் ஏற்படக் காரணமென்ன ?
6. பாரதப்போரில் சேரமன்னன் செய்த தொண்டு யாது ?
7. சேரன் பாரதப் போரில் வீரர்களுக்குச் சோறு அளித்தான் என்பதற்கு ஒரு சான்று தருக.
8. முடிநாகராயர் வடநாட்டில் கண்ட அதிசயங்கள் யாவை?
9. புலவர் சேரனை எவ்விதம் புகழ்ந்து கூறினார் ?

**பயிற்சி**

1. இருபொருள் தருக :—பொழில், போர், முடி, சாரல், வரை.

2. எதிர்ச் சொற்கள் தருக :—தர்மம், அமைதி, புகழ், வெற்றி.

3. பிரித்து எழுதுக :—தென்னுடு, சிற்றூர், சிலப்பதிகாரம், நாட்டிலமைந்த.

4. வாக்கியங்களில் அமைக்க :—புராதனம், அறநெறி, உயிரும் உடம்பும்போல், வலியுறுத்தும்.

5. 'சேரரது பெருமை' என்பது பற்றி ஐந்து நிமிடப் பேச்சுக்குக் குறிப்புக்கள் வரைக.

6. 'நாகராயர்' என்பவரைப்பற்றி மூன்று பத்திகள் கொண்ட ஒரு கட்டுரை எழுதுக.

## 13. கிள்ளி வளவனும் நாகனுரும்

### (உரையாடல்)

[சோழ நாட்டை ஆண்ட மன்னர்களில் கிள்ளி வளவன் என்ற சோழனும் ஒருவன். இவன் வீரரில் சிறந்த வீரனுவான். இவன் புவி அரசாயிருந்ததுமன்றிக் கவிவாணர் போற்றும் கவியரசாகவும் விளங்கினுன். இவன் நாற்கவியும் பாட வல்ல பண்ணன் என்னும் புலவரோடு அளவளாவிப் பொழுதுபோக்குவானுயினுன். ஆதலின், நாட்டின் சிறப்புக்குரிய உழவு, வாணிபம் முதலியவற்றைப் பற்றிக் கவனிக்க அரசனுக்கு அவகாசம் சிறிதும் இல்லாமல் போயிற்று. அதனுல், உழுநர் முதலியோர் பெரிதும் வருந்துவாராயினர். இந்நிலேயை அறிந்த வெள்ளைக்குடி என்னும் ஊரில் பிறந்த நாகனுர் என்னும் புலவர், இவனது நாடு அடைந்துவரும் நிலேயைத் தெரிவிக்க எண்ணங் கொண்டு, தாம் பயிரிடும் நிலங்களுக்கு வரி செலுத்தாது இருந்து விட்டார். இதன் காரணமாக அரசன் புலவரைத் தம்மிடத்திற்கு அழைத்துவரத் தூதுவன் ஒருவனே அனுப்பினுன். அரசனது அழைப்பிற்கிணங்கிப் புலவரும் கிள்ளி வள்வனது அரசவை சென்றுர்.]

**நாகனுர் :**—(வணங்கி) அரசர் பெருமான் வாழ்க! தீங்கள் அழைத்ததாகத் தூதுவன் கூறினுன்.

**கிள்ளி வளவன் :**—இருக்கையில் அமரும். உம்மை இங்கு அழைத்த காரணத்தை அறிவீரா ?

**நாகனார் :**—(அறிவேன்) நான் வரி செலுத்தாத காரணத்தை அறிய வரவழைத்துள்ளீர்கள்.

**வளவன் :**—நாகனாரே! நீர் ஏன் வரி செலுத்தவில்லை? அரசன் கடமையையும் குடிகள் கடமையையும் நன்குணர்ந்த நீரே இவ்வாறு செய்யலாமா? நீர் நில வரி கொடாததற்கு யாதேனும் ஒரு காரணம் இருத்தல் வேண்டும். உம்முடைய நிலம் விளையவில்லையா?

**நாகனார் :**—வளவ! உமது நாடு காவிரியினால் புரக்கப்படுதலால், சூரியன் நான்கு திசைகளிலும் நின்று எரித்தாலும், கொடிய பஞ்சக் குறியான தூமகேது முதலியன தோன்றினாலும் விளைவு குன்றுவதில்லை.

**வளவன் :**—பின் நீர் வரி செலுத்தாத காரணம் யாது?

**நாகனார் :**—அரசே! நீர் குடிகளைப்பற்றிச் சிறிதும் கவனிக்கிறதில்லை. அதனை உமக்கு எடுத்துரைக்கும் பொருட்டே நான் வரி செலுத்தவில்லை.

**வளவன் :**—புலவரே, நான் குடிகளைக் கவனிக்கவில்லை என்று கூறுவது பிழை.

**நாகனார் :**—நீர் அறிந்து புறக்கணிக்க மாட்டீர் என்பதை நான் அறிவேன். நீர் காட்சிக்கு எளியராய் இராததால் குறையுற்றோராகிய உழுது வாழும் குடிகளின் குறைகளைக் கேட்க முடிவதில்லை. எந்த அரசன் அவ்வாறு கேட்பானோ அவ்வரசனுக்கே மேகம் ஏவல் கேட்கும்.

**வளவன் :**—அதனால் நான் காட்சிக்கு எளியனாய் விளங்க வேண்டுமென்பது உம் விருப்பம்.

**நாகனார் :**—ஆம். நீர் இருப்பது அரண்மனை. அந்த அரணைக் காக்கும் காவலர்கள் குறைகூற வரும் குடிகளை உள்ளே அனுமதிப்பதில்லை. முறை வேண்டி வரும் மக்களைத் தடுப்பது பால் வேண்டி வரும் குழவிகளை அன்னையிடம் சேரவொட்டாமல் இடையில் தடுப்பது போலாகுமன்றோ?

**வளவன் :**—இந்நிலையை யான் அறியேன்; காவலர்களைக் கண்டிக்கிறேன். குடிகளுக்கு நேர்ந்த குறை யாது?

**நாகனார் :**—நீவிர் போர் மீது கொண்ட விருப்பால் உழவு, வாணிபம் முதலியவற்றைச் சிறிதும் கவனிக்கவில்லை. அதனால், அத்தொழில்கள் அபிவிருத்தி அடையாமல் வந்து

கொண்டிருக்கின்றன. உழுநர் முதலியோர் வருந்துகின்றனர்.

**வளவன் :**—(சிந்தனையுடன்) உழவுத் தொழில் தாழ் நிலைக்கு வந்து கொண்டிருக்கிறதா ?

**நாகனர் :**—போர்க் களத்தில் உமது வீரர்கள் வீராவேசத்துடன் உயிருக்குத் துணிந்து போராடுகின்றனர் ; வலிய பகைவரையும் வாட்டி வதைக்கின்றனர். இறுதியில் நீர் வெற்றி மாலை சூடுகின்றீர். வெற்றிக் களிப்பில் நீர் மிதக்கின்றீர் எனினும்..........

**வளவன் :**—எனினும் என்ன ? தயங்காது உம் மனத்திலுள்ளதைக் கூறும்.

**நாகனர் :**—உமது படை மாற்றரசர் படையினை வென்று ஓட்டுவது எதன் வலிமையாலென்று நினைக்கிறீர் ? உழவர்கள் நிலத்தைப் பண்படுத்தி, விதைத்துக் காத்து வளர்த்து விளைத்த தானிய பலத்தினாலே என்று அறிவீராக. அவ்விதம் தானியத்தை உமக்கும் உமது படைக்கும் அளிக்கும் உழவரின்றேல் உமக்குச் செங்கோல் ஏது !

**வளவன் :**—புலவரே, நீர் கூறுவது முற்றிலும் உண்மையே.

**நாகனர் :**—அரசே ! இன்னுங் கேளும். காலங்களில் மழை பெய்யாமற்போனாலும், நிலத்து வரும்படி குறைந்தாலும், மக்களிடத்து இயற்கைக்கு மாறுயினவை காணப்பட்டாலும் உலகம் அரசனையே பழிக்கும். புலவராகிய நீர் பழிப்புறுதலை என் மனம் ஒப்பவில்லை.

**வளவன் :**—புலவரே, உழவரின்றேல் உலகம் இல்லை என்பதை உணர்ந்தேன். நான் செய்ய வேண்டுவது யாது என்பதைச் சற்று விளக்கிக் கூறும்.

**நாகனர் :**—நீர் ஏரைப் பாதுகாப்பாரது குடியைப் பாதுகாத்து, அதன் பிறகு உமது மற்றக் குடிகளையும் பாதுகாப்பீராயின், பகைவர் நீர் படை திரட்டிச் செல்ல வேண்டாமலே பணிவர்.

**வளவன் :**—(நாகனரைத் தழுவிக் கொண்டு) புலவரே, உண்மையை முழுதும் உணர்ந்தேன். நீவிர் எடுத்துக் கூறிய நன் மொழிகளுக்கு மிக்க நன்றியுடையவனாயிருக்கின்றேன். நீரும் பிறரும் கொடுக்க வேண்டிய நில வரிப் பழம் பாக்கியைத் தள்ளி விடுகிறேன்.

**நாகனார்** :—அரசே, 'குடி வளமே கோல் வளம்' சென்று வருகிறேன்.

**வளவன்** :—(எழுந்து கை குவித்து) சென்று வருக. அடிக்கடி தாங்கள் இங்கு வந்து எனக்கு அறிவுச் சுடர் தருவீர்களாக.

**நாகனார்** :—(கை குவித்து) எவ்வகையிலும் சிறந்த வேந்தரன்றோ நீர்! நீர் விரும்பியபோது நான் வருகிறேன்.

(செல்கிறார்.)

## வினாக்கள்

1. கிள்ளி வளவன் எப்படிப்பட்ட புலமையுடையவன்?
2. அவன் காலத்தில் சோழ நாடு தாழ்நிலை உற்ற காரணமென்ன?
3. நாட்டின் நிலையை அரசனுக்குத் தெரிவிக்க விரும்பினவர் யார்?
4. அவர் மேற்கொண்ட வழியென்ன?
5. சோழ நாட்டின் சிறப்பு யாது?
6. நாகனார் அரசன் குடிகளைக் கவனிக்கவில்லை என்று கூறக் காரணமென்ன?
7. அரசன் ஏன் காட்சிக்கு எளினாய் விளங்க முடியவில்லை?
8. அரசன் தன் பகைவனது படையினை வென்று ஓட்டுவது எதன் வலிமையினால்?
9. உலகம் அரசனை எப்போது பழிக்கும்?
10. நாகனாரது அறிவுரையைக் கேட்ட அரசன் செய்தது என்ன?

## பயிற்சி

1. இருபொருள் கூறுக :—கவி, வரி, நாடு, முறை, காவலன்.
2. எதிர்ச்சொல் தருக :—புவியரசர், இயற்கை, குறை, பகைவர், வெற்றி, எளியன்.
3. பிரித்துக் காட்டுக :—நாற்கவி, நிலவளம், எவ்வகை.
4. 'உழவுத் தொழிலின் சிறப்பு' என்பது பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.
5. 'சோழ நாடு' என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தக் குறிப்புக்கள் தயார் செய்க.
6. 'நாகனார்' என்னும் புலவரைப்பற்றி எட்டு வாக்கியங்கள் எழுதுக.

# 14. கருணுகரத் தொண்டைமான்

சோழ சாம்ராஜ்யத்தை உயர்நிலைப் படுத்திய மன்னர் பலருள் **முதல் குலோத்துங்கன்** ஒருவனுவான். அவன் சோணுட்டைக் கி. பி. 1070 முதல் 1120 வரை ஆண்டுவந்தான். அவன் கீழைச் சாளுக்கிய மன்னனுன இராஜராஜனது மைந்தன். ஆதலின், அந்நாடும் அவனது ஆட்சிக்குட்பட்டுக் கோதாவரி நதிவரை அவனது செல்வாக்குப் பரவியிருந்தது. பல மன்னர்கள் அவனது ஆட்சிக்குட்பட்டுத் திறை செலுத்தி வந்தனர். கலிங்க நாட்டு மன்னனுன அநந்த பத்மனும் சோழ மன்னருக்குத் திறை செலுத்தி வந்தான்.

குலோத்துங்கன் அஞ்சாமை, ஈகை, அறிவு ஊக்கங்களில் எஞ்சாது பல நற்குணங்களும், நல்லொழுக்கமும் உடையவனுய் குடிகளின் நன்மையையே பெரிதெனக் கொண்டு ஆண்டு வந்தான். அவன் சிறந்த அரசியல் அறிஞனுயிருந்ததோடு வீர தீரத்திலும் சிறந்து விளங்கினுன். அவனது அளப்பரும் வீர தீரச் செயல்களையும், போர் வெற்றிகளையும் கவிஞர் பலர் சிறப்பித்துக் கூறியிருக்கின்றனர். இவனது வெற்றிகளைப் பற்றிக் கல் வெட்டுக்களும் எடுத்துக் கூறுகின்றன. இவனுக்கு அபயன், விஜயதரன் என்னும் வேறு பெயர்களுமுண்டு. இவனது வெற்றிக்கும் கீர்த்திக்கும் காரணமானவன் இவனது படைத் தலைவனுயிருந்த **கருணுகரன்** என்னும் ஒரு குறு நில மன்னனேயாவன்.

கருணுகரன் கும்பகோணத்திற்கு அடுத்த **வண்டாழஞ்சேரி** என்னும் வண்டுவாஞ்சேரி என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்தான். இவன் பல்லவ மரபிலே தோன்றியவன் ; பல்லவர் குலமேயானுலும் தொண்டை நாட்டின் ஒரு சிறு பகுதியை ஆண்டு வந்ததால் கருணுகரத் தொண்டைமான் என்று அழைக்கப்பட்டான். மத்திய காலத்துச் சோழரது ஆட்சியில் பல்லவர் வலிகுன்றிச் சோழர்களுக்கு அடங்கிச் சிறு சிறு பகுதிகளை ஆண்டு வந்தனர். அவர்களில் கருணுகரனும் ஒருவன். இவன் குலோத்துங்கனது அமைச்சனுகவும், தானைத் தலைவனுகவும் விளங்கினுன். இவனது மனைவி **அழகிய மணவாளனி** என்பவள். அம்மாது நல்லாள் தெய்வ பக்தி நிரம்பியவள்.

ஒரு நாள் குலோத்துங்கன் காஞ்சிபுரத்திலிருந்த தனது அழகிய அரண்மனையின் அத்தாணி மண்டபத்தில் அமைச்சர், புரோகிதர், தானைத் தலைவர் முதலியோர் சூழ்ந்திருக்கக் கொலு வீற்றிருந்தான். அவ்வமயம் குறு நில மன்னர்கள் பலர் ஒருவர் பின் ஒருவராக மண்டபத்துக்குள் வந்து, குலோத்துங்கனை வணங்கித் தாம் கொண்டு வந்த திறைப் பொருளைச் செலுத்திச் சென்றனர். சிற்றரசர்கள் சென்ற பின் குலோத்துங்கன் தனது கணக்கனை நோக்கி, "நமக்கு இன்னும் திறை செலுத்ாதவர்கள் யாரேனும் உளரோ?" என்று வினவினான். அதற்குக் கணக்கன், "அரசே, கலிங்க நாட்டுக் காவலன் அநந்த பத்மன் இரண்டு தடவையாகக் கப்பம் செலுத்தவில்லை" எனக் கூறினான்.

அதனைக் கேட்டதும் குலோத்துங்கன் கண்கள் கோபத்தால் சிவந்தன. அவன் கருணாகரத் தொண்டைமானை நோக்கினான். அங்கிருந்தார் அனைவரும் அரசனது சினங் கண்டு யாது நிகழுமோவென அஞ்சி நின்றனர். கருணாகரன் உடனே எழுந்து பணிந்து, "சோணாட்டுக் கோமானே, அடியேனுக்குக் கட்டளையிடின், யானே படையெடுத்துச் சென்று அக்கலிங்க நாட்டுக் காவலனைச் சிறை பிடித்துக் கொண்டு வருகிறேன்," என வீராவேசத்துடன் கூறினான். குலோத்துங்கன் "அவ்வாறே செய்க" என் ஆணை அளித்துவிட்டு, அத்தாணி மண்டபத்தை விட்டு அகன்றான்.

மறுநாள் அதிகாலையில் தொண்டைமான் போர்க்கோலம் பூண்டு நால்வகைப் படைகளோடும் போருக்கெழுந்தான். முடிகொண்ட சோழன், கோவரையன், பல்லவர்க்கரசு என்னும் துணைத் தானைத் தலைவரும் போருக்கெழுந்தனர். கடலென்ன படைகளோடு அவர்கள் பாலாறு, குசைத்தலை, சுவர்ணமுகி, கொல்லியாறு, பெண்ணையாறு, கிருஷ்ணை, கோதாவரி, பம்பை முதலிய நதிகளைக் கடந்து சென்றனர். கடலெனப் பரந்த படைகள் சென்ற பான்மையைக் கண்டாரனைவரும் அஞ்சினர். கருணாகரன் இரை தேடச் செல்லும் புலிபோல் சென்றான்.

சேனைகள் கலிங்க நாட்டை அடைந்தன. அவை வழியிலுள்ள ஊர்களில் புகுந்து நெருப்பிட்டுக் கொளுத்தியும், சூறையாடியும் நாசமாக்கின. கலிங்க மக்கள் அனைவரும் படைகளின் அட்டூழியங்களைக் கண்டு வாடிய முகமும், ஓடிய கண்ணீருமாக

ஓடிவந்து அமைச்சர் சூழக் கொலுவீற்றிருந்த அநந்த பத்மனிடம் போய் முறையிட்டனர்.

அதைக் கேட்ட அநந்த பத்மன் சீற்றமடைந்து எழுந்தான். அவனது கண்கள் சிவந்தன. "அவனுக்கு யான் இளைத்தவனோ? சேனைத் தலைவர்களே, போருக்குப் புறப்படுங்கள்" எனக்கட்டளையிட்டான். அதைக் கேட்ட அவனது அமைச்சரான **எங்கராயர்** என்பவர் எழுந்து வணங்கி, "அரசே! நாம் எதையும் எண்ணித் துணிதல் முறையாம். பிழை நமதே. நாம் ஈராண்டுகளாகத் திறை செலுத்தவில்லை. அதனால் சினங்கொண்ட சோழன் போருக்கெழுந்திருக்கிறான். அவனது சேனையை வெல்வது எளிதன்று. ஆதலின், திறையைச் செலுத்திப் போரை நிறுத்துவதே தக்க முறையாகும். தாங்கள் எளியேனது புல்லுரையைச் சிறிது உளங்கொண்டு உன்ன வேண்டும்," என்று கூறினான். அநந்த பத்மன் எங்கராயரின் நல்லுரைகளையெல்லாம் செவியேற்க மறுத்துப் போருக்கு ஆயத்தமாயினான்.

அநந்த பத்மனின் படையும், கருணாகரத் தொண்டைமானின் படையும் எதிர்த்துப் போரிட்டன. நாற்றிசையிலும் 'விடு தொடு' என்பாரும், 'வெட்டு, குத்து' என்பாரும், 'அடி, பிடி' என்பாருமாகத் தோன்றினர். பரியுடன் பரி தாக்கியது; கரியுடன் கரி தாக்கியது; தேருடன் தேர் முட்டியது; வீரருடன் வீரர் பொருதனர். நொடிப்பொழுதில் பல தலைகள் உருண்டன. கருணாகரன் சிறந்த போர் வீரன். அவனது படை வீரர் உயிருக்குத் துணிந்து போராடினர்; வலிய பகைவரை வாட்டி வதைத்தனர். கலிங்கர் படை முற்றிலும் முறியடிக்கப்பட்டது. போர்க்களத்தில் எங்கும் பிணக் குவியல்கள் நிறைந்தன. இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தது. அநந்த பத்மனும் கருணாகரனால் சிறை பிடிக்கப்பட்டான்.

கருணாகரன் கலிங்கத்தில் கைப்பற்றிய இருநிதிக் குவியலோடு குலோத்துங்கன் முன்னர்ச் சென்று கலிங்க நாட்டுக் காவலன் அநந்த பத்மனை விடுத்தனன். குலோத்துங்கன் கருணாகரனைப் பலவாறு புகழ்ந்து, விருதுகள் பல அளித்து **மகாசாமந்தன் கருணாகரன்** எனப் பட்டமும் சூட்டிப் பெருமைப் படுத்தினான். குலோத்துங்கன் தனது வெற்றிக்கு அறிகுறியாகக் கலிங்க நாட்டில் சயத்தம்பம் ஒன்று நாட்டினான்; பின் அநந்த பத்ம

னுக்கு நல்லுரைகள் பல கூறித் தனக்கு அடங்கியிருக்குமாறு செய்து கலிங்கநாட்டுக்கு அனுப்பினுன்.

கலிங்கப் போரில் ஏற்பட்ட உயிர்ச் சேதங்களும், பொருள் நாசங்களும் அளவிற்கு மீறியவைதான். ஆனுலும் அந்தக் கெடுதலிலிருந்து **கலிங்கத்துப்பரணி** என்னும் அரியதமிழ்க் காவிய நூல் தோன்றியது. அதை இயற்றியவர் **ஜெயங்கொண்டார்** என்னும் புலவர். இவர் சோழ நாட்டில் **தீபங்குடி** என்னும் ஊரில் பிறந்தவர். இவரது காலம் பதினென்ரும் நூற்ருண்டு. தமிழ்ப் புலவர்களிடையே முதன்முதலாகக் கவிச் சக்கரவர்த்தி என்ற பட்டத்தைப் பெற்றவர் இவரே.

## வினுக்கள்

1. குலோத்துங்கன் தன் நாட்டை எவ்விதம் ஆண்டு வந்தான் ?
2. அவனுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?
3. கருணுகரத் தொண்டைமான் என்பவன் யாவன் ?
4. குலோத்துங்கன் காஞ்சிபுரத்திலிருந்தபோது நிகழ்ந்த தென்ன ?
5. சோழப்படையுடன் சென்ற தானைத் தலைவர்கள் யாவர்?
6. எங்கராயர் என்பவர் யார்? அவர் தம் மன்னனிடம் கூறிய நல்லுரை யாது ?
7. கலிங்கப் போர் நடந்த விதமென்ன ?
8. சோழன் அநந்த பத்மனை எவ்வாறு நடத்தினுன் ?
9. கலிங்கப் போர் நிகழ்ச்சி கூறப்பட்டுள்ள நூல் யாது? அதனை இயற்றியவர் யார் ?

## பயிற்சி

1. இருபொருள் தருக :—தொண்டை, பூண்டு, பிழை, சேனை.
2. எதிர்ச்சொல் கூறுக:—வெற்றி, கீர்த்தி, எளிது, பெருமை.
3. பிரித்து எழுதுக :—நாற்றிசை, நல்லுரை, சோணுடு, சிற்றரசு.
4. அரசனைக் குறிக்கும் வேறு நான்கு சொற்கள் தருக.
5. குலோத்துங்க சோழனைப்பற்றி எட்டு வரிகள் எழுதுக.

6. கருணாகரத் தொண்டைமானது போர்த் திறமையைப் பற்றி மூன்று பத்திகள் கொண்ட ஒரு கட்டுரை வரைக.

7. கலிங்கத்துப்பரணி என்னும் நூலைப்பற்றி எட்டு வரிகள் கொண்ட ஒரு பத்தி வரைக.

8. முற்காலப் போர் முறைக்கும் தற்காலப் போர் முறைக்கும் உள்ள வேற்றுமை என்ன ?

9. முற்காலத்திய போர் ஆயுதங்கள் யாவை? தற்காலப் போர்க் கருவிகள் யாவை ?

10. போரினல் ஏற்படும் நன்மை தீமைகளைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

## 15. நடனக் கலை

'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு' என்றபடி நாம் கற்றறிய வேண்டியவைகள் அளவிடக் கூடாதன. இவைகளைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவையும் கலை என வழங்குவர். கணித நூல், பூமி நூல், வான நூல், பிராணி நூல், தாவர நூல் முதலியவை நமது அறிவை வளர்ப்பதால் அறிவுக் கலைகள் எனப்படும். சங்கீதம், சித்திரம், சிற்பம், நாடகம், நாட்டியம் என்னும் இவைகள் நமக்கு இன்பத்தை அளிப்பதால் அழகுக் கலைகள் எனப்படும். இவைகள் யாவும் மனிதனது கற்பனையின் பெருவெள்ளமாகப் பெருகி உலகத்தையே இன்பத்தில் ஆழ்த்துகின்றன. இவ்விதக் கலைகளுக்குள் சிறந்த கலையாக மிளிர்வது நடனக்கலை. இக்கலையைப் பற்றிச் சிறிது ஆராய்வோம் :

ஒன்பது சுவைகளான வீரம், அச்சம், இழிவு, வியப்பு, இன்பம், துன்பம், நகை, நடுநிலை, வெகுளி ஆகியவைகள் புலப்படும்படி கைகளாலும், கண்களாலும், முகக் குறிப்புக்களாலும் அபிநயங்களுடனே நாட்டிய மேடையில் நடித்துக் காட்டுவதே நடனம் எனப்படும். நடனம், ஆட்டம், ஆடல், அபிநயம், கூத்து, தாண்டவம் என்று கூறப்படுபவை எல்லாம் நடனத்தையே உணர்த்தும். நடனத்துக்குத் தாளமும் இசைப்பாடலும் இனிய இசைக் கருவிகளும் இன்றியமையாதவை.

உலகின்கண் மரங்கள், ஊர்வன, பறப்பன, நீர்வாழ்வன ஈருகச் சகல உயிர்ப் பிராணிகளிடத்தும் ஒவ்வொரு விதமான அசைவு, நெளிவு முதலிய அழகு நிலேகளேக் காண்கிருேம். மொழிகள் ஏற்படுவதற்கு முன்னர் மக்கள் தம் மனக் கருத்துக் களே அசைவு, நெளிவுகள் மூலமே தெரிவித்துக் கொண்டனர். மொழிகள் ஏற்பட்ட பின்னர் மக்கள் தம் மகிழ்ச்சியைத் தெரி விக்கக் கூச்சலிட்டுக் குதித்துக் கூத்தாடினர்; ஆடிய கூத்துக் கேற்ற வண்ணம் கைகளேக் கொட்டினர். அவ்வித உள்ளப் பூரிப்பின் மிகுதியால் குதித்ததே கூத்தாகவும், கூச்சலிட்டதே இசையாகவும், கைகளேக் கொட்டியதே தாளமாகவும் மாறின. கூத்து, இசை, தாளம் ஆகிய இம்மூன்றையும் மக்கள் தம்மை அறியாமலே புதுப்பித்து விட்டனர். இந்தக் கூத்துத்தான் நாளடைவில் பண்பாடடைந்து நடனக்கலே என வழங்குகிறது. நாட்டியக் கலே எல்லா நாட்டினராலும் பயிலப்பட்டு வரு கின்றது.

உலகத்தில் பல்வேறு பகுதியிலுள்ள மக்கள் நடனமாடும் முறைகள் பலவாருகக் காணப்படுகின்றன. வட ஐரோப்பாவி லுள்ளவர்கள் நடனமாடுவதற்குக் கால்களேயே மிகுதியும் உபயோகப்படுத்துகின்றனர். ஜப்பான், ஜாவா, மடகாஸ்கர் முதலிய இடங்களில் கைகளேயும் புஜங்களேயும் பெரிதும் உபயோகப்படுத்துகின்றனர், இன்னும் தெற்குத் தீவிலுள்ள வர்கள் கைகளேயும் விரல்களேயுமே அதிகமாக உபயோகிக்கின் றனர். பிஜி முதலிய தீவுகளில் உட்கார்ந்த நிலேயிலேயே நடனம் நிகழ்த்தப் பெறுகிறது. இவ்வாறு நடைபெறும் நடனங்களில் ஸ்பெயின் தேசத்தில் நடைபெறும் நடனத்தையே ஐரோப் பியர்கள் வியந்து பாராட்டுகின்றனர். எகிப்தியர்கள் நடனத் தில் மிகவும் தேர்ந்தவர்கள்.

நம் நாட்டில் இந்நடனக் கலே பல்வேறு விதமாய்த் தொன்று தொட்டுக் கையாளப்பட்டு வருகிறது. கழைக் கூத்தாடிகள் மூங்கில் மேலிருந்துகொண்டு ஒற்றைக் காலால் ஆடுவர். இதற்குக் **கழைக்கூத்து** என்று பெயர். பண்டிகைக் காலங்களில் குதிரைமேலிருப்பது போன்று பொய்க் குதிரை யைக் கொண்டும், மரக் கால்களேக் கொண்டும் ஆடுவது **மரக்கால் கூத்து** எனப்படும். சிலர் குடங்களே ஒன்றின்மேலொன்ருக

அடுக்கி வைத்துக்கொண்டு ஆடுவர். இதனைக் **குடக் கூத்து** என்பர். மக்கள் மனத்தை ஈர்க்கும் வண்ணம் பன்னிற ஆடைகளைப் புதுமையான முறையில் உடுத்திக்கொண்டு, நகைச்சுவை ததும்பப் பேசி ஆடும் கூத்துக்கு **விகடக் கூத்து** என்று பெயர். இவ்விதக் கூத்துக்கள் யாவும் அவ்வவற்றிற்குப் பொருத்தமான தாளங்களுடனும் இசைக் கருவிகளுடனும் கூடி நடைபெறுகின்றன. இக்கூத்துக்கள் யாவும் நாட்டியக் கலையின்பால் சேர்ந்தனவேயாகும். இவை போன்றன பல இன்னும் உண்டு.



மணிபுரி

நம் நாட்டுக் கோவில்களிலும், தேர்களிலும், கற்றூண்களிலும் நாட்டியக் கலையைச் சித்திரிக்கும் முறையில் பல சிலைகளும், ஓவியங்களும் காணப்படுகின்றன. நமது தென்னாட்டிலுள்ள மலையாளப் பகுதியில் **கதைகளி** என்ற நடனம் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. வட இந்தியாவில் **மணிபுரி, கதக்காபா, காத்திவார்** என்ற பலவித நடனங்கள் சிறப்பான முறைகளில் நடைபெற்று வருகின்றன. தமிழ் நாட்டில் **பரத நாட்டியம்** என்னும் நடனம் உலகம் போற்றும் முறையில் வளர்ந்து வந்திருக்கிறது. இன்று பரத நாட்டியமே இந்தியாவிலும் மற்ற நாடுகளிலுமுள்ள பிற நடன வகைகளுக்கு விலக்காய்த் தனிச் சிறப்புடன் விளங்குகின்றது. அதற்கு முக்கிய காரணம் அது உயரிய உண்மைக் கலைத் தத்துவத்தைக் கொண்டு பண்டைய நூலாசிரியர்கள் வகுத்த இலக்கண விதிகளை முற்றிலும் தழுவி வந்திருப்பதுதான்.

அக்காலத்துத் தமிழர்களின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கின், அவர்கள் நடனத்தை எவ்வளவு உயர்வாக மதித்

திருக்கின்றனர் என்பது தெரியவரும். அவர்கள் மணம், மரணம், விதை விதைக்கும் காலம், அறுவடைக் காலம், போர், வெற்றி, சமாதானம் ஆகிய சகல சந்தர்ப்பங்களிலும் நடனத்தை மேற்கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் நடிப்பதற்கென்றே ஒரு தனி இனத்தினர் இருந்தனர். அவர்களுள் நடிப்பவர்கள் **கூத்தர்** எனவும், கோலம் புனைபவர் **பொருநர்** எனவும் கூறப் படுவர். மகளிரிலும் நடிப்பவர்கள் இருந்தனர். அவர்களை **விறலியர்** என அழைப்பர். 'விறல்' என்பது உள்ள கருத்தைப் புறத்தே வெளிப்படுத்தும் திறமை எனப்படும். இவர்களை அந்தக் காலத்து அரசர்களும் வள்ளல்களும் அருமை காட்டி ஆதரித்துள்ளனர்.



கதைகளி



பரத நாட்டியம்

தமிழ் நாட்டில் நடனக்கலை சுமார் 1800 வருடங்களுக்கு முன்னரே செழித்தோங்கி வந்தது என்பது இளங்கோவடி களின் சிலப்பதிகாரத்திலிருந்து நன்கு தெரிகிறது. இதில் அக் காலத்தில் மேன்மையாய் விளங்கிய இசை, நாட்டியம் முதலிய கலைகளைப்பற்றிய விவரங்களும் காணப்படுகின்றன. தமிழ்மக் கள் இந்த அற்புதமான கலையைப் பாதுகாத்தனர். தமிழ் மன் னர்கள் பரத நாட்டியத்தை அன்புடன் ஆதரித்தனர். கி. பி. முதல் நூற்றுண்டில் காவிரிப்பூம் பட்டினத்தைத் தலை நகராகக்

கொண்ட சோழ நாட்டை ஆண்ட கரிகாற் சோழனும், மதுரையைத் தலை நகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆண்ட நெடுஞ்செழியனும் நடனக் கலைக்குப் பேராதரவு கொடுத்து வந்தார்கள்; கோவில்கள், தேர்கள், கற்றூண்கள் முதலியவைகளில் நடனக் கலையைச் சித்திரிக்கும் முறையில் பல சிலைகளையும், சித்திரங்களையும் அமைத்தனர்.

கி. பி. நான்காம் நூற்றுண்டில் பிரபுலமடைந்த குப்த மன்னர்கள் நடனக் கலையை வெகுவாய் ஆதரித்தார்கள். ஆகவே, நடனக் கலை வளர்ச்சியடைந்தது. தென்னுட்டில் காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட **பல்லவ மன்னர்களின்** ஆட்சியில் நடனக் கலை செழித்திருந்தது. பல்லவ மன்னரான **நரசிம்ம வர்மன்** நடனக் கலையை நன்கு வளர்த்தார்.

அந்தக் காலத்தில் நடன அரங்கின்மீது மலர்களைப் பரப்பியிருப்பர். நடனமாடும் பெண் அந்த மலர்ப் பரப்பின் மீது நடனமாடுவாள். ஆடி முடிந்ததும் அதன்மீது யானை, மயில், அன்னம் ஆகிய இவற்றுள் ஏதேனும் ஒன்றன் உருவம் செவ்வியதாக அமையப் பெற்றிருக்கும். இவ்விதம் அமையும் வடிவம் நன்ருக **அமையவேண்டுமாயின்**, அதற்குரிய நடனத்தைத் தாளப் பிசகின்றி மேற்கொள்ள வேண்டும். இவ்வரிய செயலாற்றுவோர் பல கலைகளையும் கற்றுணர்ந்தவராய் இருத்தல் வேண்டும். இவைகளெல்லாம் மிக நுட்பமாகவும் விரிவாகவும் ஆராயப்பட்டு வந்தது என அறிகின்ரேம்.

நடனம் ஒரு வகைப் பயிற்சி. அது பார்ப்போரின் மனத்தில் மட்டற்ற மகிழ்ச்சியை உண்டாக்குகின்றது. நடனமாடுபவரின் மனேபாவத்தைப் பேசாமல் பேசியுணர்த்தும் சைகைகளைக் கண்டு களியாதவர் யாவருமிலர். பரத நாட்டியத்தால் உடலுறுதியும், முகமலர்ச்சியும், சுறுசுறுப்பும் ஏற்படுகின்றன. நரம்புகளை வலிவுறச் செய்யவும், மனத்திடம் பெறவும் நடனம் பெருந்துணை செய்கின்றது.

அறிவும் ஆராய்ச்சியும் பெருகவே நடனக் கலை பழுதொன்றுமின்றி வளர்ச்சி பெற்று மக்கள் பாதுகாப்பில் பெருகி வந்துள்ளது. அதன் காரணமாக நடனக் கலையைப் பற்றிய சிறந்த நூல்கள் தோன்றியுள்ளன. நடனக் கலை மறுமலர்ச்சி பெற்று உலக மக்கள் யாவராலும் போற்றப்படுகிறது. தற்

காலத்தில் பெருஞ் செல்வர்கள் தமது செல்விகளுக்கு இந்நடனக் கலையைப் பயிற்றுவிக்கின்றனர். ஆடவரும், பெண்டிரும் ஒருங்கே இக்கலையைப் பயின்று வருகின்றனர். இக்கலை மனித சமூகத்தில் நிலைத்திருக்க வேண்டுமானால் நாமும் கூடிய வரையில் பல கலைகளையும் கற்று உலகத்திற்கு இன்பம் விளைத்தற்குரிய முயற்சியில் ஈடுபடுவோமாக.

## வினாக்கள்

1. அறிவுக் கலைகள் எனப்படுவன யாவை?
2. அழகுக் கலைகள் எனப்படுவன யாவை?
3. நடனத்துக்கு இன்றியமையாதவை யாவை?
4. நடனக் கலை எவ்விதம் ஏற்பட்டது?
5. நம் நாட்டில் தொன்றுதொட்டுக் கையாளப்பட்டு வரும் நடனக் கலையைச் சேர்ந்த கூத்துக்கள் யாவை?
6. பரத நாட்டியம் தனிச் சிறப்புடன் விளங்கக் காரணமென்ன?
7. பண்டைத் தமிழ் நாட்டில் நடனக் கலையை எவ்வாறு மதித்து வந்தனர்?
8. கி. பி. நான்காம் நூற்றுண்டில் நடனக் கலை எவ்விதம் வளர்ச்சி பெற்றது?
9. அக்காலத்தில் நடனக்கலை எவ்விதம் கையாளப்பட்டது?
10. நடனக் கலையால் ஏற்படும் நன்மைகள் யாவை?

## பயிற்சி

1. இருபொருள் கூறுக :—மரக்கால், விதி, மணம், போர், கோலம்.
2. எதிர்ச்சொல் தருக :—இழிவு, மிகுதி, போற்று, புதுமை, புறம், பெருகி.
3. பிரித்து எழுதுக:—உலகளவு, நூலாசிரியர், நடனக் கலை, மட்டற்ற, உடலுறுதி, பழுதொன்றுமின்றி.
4. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—

   தொன்றுதொட்டு, கையாளப்பட்டு, மனத்தை ஈர்க்கும், உள்ளப் பூரிப்பு.
5. உலகில் தோன்றிய கலை வகைகளைப்பற்றிப் பத்து வரிகள் எழுதுக.
6. 'நடனக் கலையின் மேன்மை' — என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

# 16. சுவாமி விவேகானந்தர் கடிதம்

(மொழி பெயர்ப்பு)

யோகஹாமா,
10உ, ஜூலை, 1893ஸு.

பிரியமுள்ள—,

நான் எங்கெங்கே செல்லுகிறேன் என்பதைத் தங்களுக்கு அடிக்கடி தெரிவியாததற்கு மன்னிக்கவும். எவனும் சாதாரணமாகவே சுறு சுறுப்பாயிருக்கிறான். அதிலும் முக்கியமாக,



சுவாமி விவேகானந்தர்

சாமான்களை ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ளும் வாழ்க்கைக்குப் புதியவனான எனக்கு அதிக வேலை இருக்கிறது. அதைப் பற்றிக் கவலைப்படுவதே எனக்குப் பெருந்தொந்தரவாய் இருக்கிறது.

நாங்கள் **கொழும்புத்** துறைமுகம் போய்ச் சேர்ந்தோம். நாங்கள் ஏறிச் சென்ற கப்பல் அங்கு ஒரு நாள் தங்கிற்று. ஊரைப் போய்ப் பார்ப்பதற்கு வாய்த்த சமயத்தை நாங்கள் வீணுக்கவில்லை ; வீதிகள் வழியே சவாரி செய்தோம். சாய்ந்த படியே நிர்வாண தசையிலிருந்த ஸ்ரீ புத்த தேவரின் திருவடிவுள்ள ஓர் ஆலயந்தான் நான் பார்த்தவற்றுள் என் மனத்தில் நன்ருய்ப் பதிந்திருக்கிறது.

பிறகு மலேயாத் தீபகற்பத்தில் கடலோரத்திலுள்ள **பினங்**கில் நாங்கள் தங்கினேம். மலேயா ஜனங்கள் அனைவரும் மகமதியர்கள். அவர்கள் முற்காலத்தில் பெயர் பெற்ற கடற்கொள்ளைக்காரர்களாயும், கடலின் மூலமாய்ச் செல்லும் வியாபாரிகளைப் பயப்படும்படி செய்பவர்களாயும் இருந்தார்கள். ஆனல், பல அடுக்குக்களுள்ள தற்காலத்திய யுத்தக் கப்பலின் பீரங்கிகள் மேற்கூறிய மலேயர்களைச் சாத்விகத் தொழிலைக் கைப்பற்றச் செய்தன. பினங்கு, சிங்கப்பூர் போகும் பொழுது சுமத்திராத் தீவு கொஞ்சம் புலப்பட்டது. போகும் வழியில் முற்காலங்களில் கடற் கொள்ளைக்காரர்கள் பிரியமுடன் தங்கின பல இடங்களைக் கப்பற்றலைவன் எனக்குக் காட்டினன். ஜல சந்திக் குடியேற்ற நாடுகளு (Straits Settlements)க்குச் **சிங்கப்பூர்** தலை நகரம். பலவிதப் பனைமரங்களுள்ள தாவரக் காட்சிச் சாலை ஒன்று இங்கு இருக்கிறது. விசிறி வாழை இங்குச் செழுமையாக வளர்கின்றது. பலா மரம் எங்கும் இருக்கின்றது. சென்னையில் மாமரங்கள் இருப்பது போலவே இங்கும் பெயர் பெற்ற **மங்குஸ்தான்** என்னும் மரம் அபரிமிதமாய்க் காணப்படுகிறது. ஆனலும் நமது மாமரத்திற்கு ஈடாக ஒன்றும் கிடையாது. இப் பிரதேசம் மத்திய ரேகைக்கு அருகே இருந்த போதிலும், ஜனங்கள் சென்னையிலுள்ளவரைப் போல் அவ்வளவு கறுப்பல்ல. சிங்கப்பூரில் நல்ல காட்சிச் சாலையும் இருக்கிறது.

அடுத்தது **ஹாங்காங்கு**. இங்குச் சீனர்கள் அதிகமாகக் காணப்படுவதாலேயே நாம் சீனதேசம் வந்து சேர்ந்தோம் என்பது தெரிய வரும். எல்லாத் தொழில்களும், வியாபாரமும் அவர்களிடமே இருக்கின்றன. ஹாங்காங்கே ஒரு சிறு சீனத் தேசமெனலாம். கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சின. உடனே நூற்றுக்கணக்கான சீனப் படகுகள் ஜனங்களைக் கரையில் சேர்க்கச்

சூழ்கின்றன. இரண்டு சுக்கான்களுள்ள இப்படகுகள் விசித்திர மானவை. படகின் சொந்தக்காரன் அதிலேயே வசிக்கிறான். அவன் மனைவி அநேகமாய்ச் சுக்கான்களிடம் இருந்து கொண்டு, ஒன்றைக் கைகளாலும், மற்றொன்றைக் கால்களாலும் திருப்புகின்றாள். அநேகமாய் அவளுடைய குழந்தை, கால்களையும் கைகளையும் வெளியே தொங்கவிட்டபடி, அவள் முதுகில் ஒரு துணியில் கட்டப்பட்டிருக்கும். குழந்தை வெகு சாந்தமாகத் தூங்கும்போது அவள் முழுப் பலத்தோடு படகைத் திருப்புவதையும், மூட்டைகளைத் தள்ளுவதையும், அல்லது வெகு சாமர்த்தியமாய்ப் படகுக்குப் படகு தாண்டுவதையும் பார்த்தால், அதை ஓர் அதிசயமான காட்சி என்றே சொல்ல வேண்டும். இதனோடு சாதாரணப் படகுகளும், நீராவிப் படகுகளும் வெகு வேகமாக வருவதும் போவதுமாயிருக்கின்றன. இந்தத் தடபுடலில் பின்னிய கூந்தலுடைய சீனக் குழந்தையின் சிறு தலை பொடியாய் விடுமோ என நாம் பயந்தாலும், அந்தக் குழந்தை கொஞ்சமேனும் இலட்சியம் செய்வதில்லை. இவ்வித வாழ்வு அதற்குச் சந்தோஷமாகத் தோன்றுகிறது போலும்! பித்துப் பிடித்தவர் போல அங்குமிங்கும் அலைந்து வேலை செய்கிற அக்குழந்தையின் தாயார், கொஞ்ச நேரத்திற்கு ஒரு தரம் கொடுக்கும் இட்டிலி என்னவென்று அறிவதிலேயே அக்குழந்தை திருப்தி அடைகின்றது. சீனக் குழந்தை ஒரு பெரிய ஞானி. நம் இந்தியச் சிறுவன் தவழுவதற்கு முன்னே சீனச் சிறுவன் சாவதானமாய் வேலை செய்ய ஆரம்பிக்கிறான். தன் நிலைமைக்கேற்ற தத்துவ விசாரம் அவனுக்கிருக்கிறது. சீனர்களும் இந்தியர்களும் உயிரற்ற நாகரிகத்தில் அமிழ்ந்து கிடப்பதற்குக் காரணம், ஏழ்மைத் தனமே என்று சொல்லலாம். அன்றன்றைக்கு வேண்டியவற்றைத் தேடுவதே ஓர் இந்தியனுக்கும் சீனனுக்கும் நித்திய கண்டமாயிருப்பதால், வேறொன்றைப் பற்றியும் நினைக்க முடிவதில்லை.

ஹாங்காங்கு ஓர் அழகிய பட்டணம். அடிவாரத்தைவிடக் குளிர்ச்சியான ஒரு மலையின் உச்சியிலும் அதன் சாரல்களிலும் நகரம் கட்டப்பட்டிருக்கிறது. இருப்புக் கயிறுகளினாலும் நீராவியினாலும் இழுக்கப்படும் ஒரு டிராம் வண்டி செங்குத்தாய் மலையின் சிகரத்திற்குச் செல்லுகின்றது. நாங்கள் மூன்று நாள் ஹாங்காங்கில் தங்கிப் பிறகு நதி வழியாய் எண்பது மைல் மேலே

யுள்ள **காண்டன்** நகரத்தைப் பார்க்கப் போனேம். என்ன சந்தடி! என்ன ஜனங்களின் கூட்டம்! ஆற்றின் ஜலத்தை மறைக்கும்படியான கணக்கற்ற படகுகள்! வியாபாரம் செய்யும் படகுகள் நீங்கலாகக் குடியிருக்கும் இடங்களாக உபயோகப் படும் படகுகள் நூற்றுக் கணக்கானவை. அவைகளில் பல, பெரியனவாயும் நன்ருயுமிருக்கின்றன. சில இரண்டு மூன்று மாடிகள் உயரமும், சுற்றிலும் தாழ்வாரங்களும், நடுவில் வீதி களும்கொண்டு மிதந்தபடியே இருக்கின்றன.

அயல் தேசத்தார் வசிப்பதற்காகச் சீனக் கவர்ன்மெண்டார் பிரித்துக் கொடுத்திருக்கும் இடத்தில் நாங்கள் தங்கினேம். ஆற்றின் இரு கரைகளிலும் மைல் கணக்காயிருக்கும் அப்பெரு நகரத்தில் ஜன சமூகம் என்னும் மானிட வனம் ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டும் மோதிக்கொண்டும் கஷ்டப்பட்டுக் கொண்டும் கூச்சலிட்டுக் கொண்டும் இருக்கின்றது. இத்தனை ஜனங்கள் இவ்வாறு சுறு சுறுப்புடன் இருந்த போதிலும், நான் பார்த்த நகரங்களில் அந்நகரம் மிகவும் அசுத்தமானது என்றே சொல்ல வேண்டும். நம் தேசத்தில் ஓர் ஊர் அசுத்தமானது என்று சொல்லுகிருேமே, அப்படியல்ல இவ்வசுத்தம். அசுத்த மான வெகு சிறுசிறு துண்டுகூடச் சீனர்களால் வீணுக்கப்படு வதில்லை. ஆனல், ஒவ்வொரு வீடும் ஒரு கடை. கடையின் சொந்தக்காரர்கள் மாடியில் வசிக்கிருர்கள்: தெருக்களோ வெகு நெருக்கம். வழியே போகும் ஒருவன் கடைகளைத் தொடும் படியாக அவ்வளவு நெருக்கமாயிருக்கின்றன. பத்தடிக்கு ஒரு கசாப்புக் கடை. சிற்சில இடங்களில் பூனை, நாய் இவைகளின் மாமிசத்தை விற்கும் கடைகளும் காணப்படுகின்றன. ஆனல், பரம ஏழைகளான சீனர்கள் தாம் நாய், பூனை இவைகளுடைய மாமிசத்தைப் புசிக்கிருர்கள்.

சீன தேசத்து ஸ்திரீயை நாம் எப்பொழுதும் பார்க்க முடியாது. வட இந்தியாவிலுள்ள இந்து ஸ்திரீகளைப் போல் இங்கும் ஸ்திரீகள் ஜாக்கிரதையாக அந்தப்புரங்களில் வைக்கப் பட்டிருக்கிருர்கள். கூலி வேலை செய்து பிழைக்கும் ஸ்திரீகளைத் தான் வெளியில் பார்க்கலாம். இந்த ஸ்திரீகளில்கூட நம் (தேசத்துச்) சின்னஞ் சிறு குழந்தையின் பாதங்களைவிடச் சிறிய பாதங்களையுடைய சிலரை இங்குக் காணலாம்.

பல சீன ஆலயங்களை நான் போய்ப் பார்த்தேன். இத் தேசத்தில் முதன்முதலில் புத்த மதத்தைத் தழுவின அரசர், அவருடைய ஐந்நூறு சீடர்கள் ஆகிய இவர்கள் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டிருக்கும் ஆலயமே எல்லாவற்றிலும் பெரியது. நடுவில் புத்தரது திவ்விய விக்கிரகமும் அதன்கீழ்ச் சக்கரவர்த்தியின் உருவமும், இரு பக்கங்களிலும் சீடர்களின் பிரதிமைகளும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

காண்டனிலிருந்து ஹாங்காங்குக்கும், அங்கிருந்து ஜப்பானுக்கும் போனோம்; முதலில் **நாகஸாகி** துறைமுகத்தை அடைந்ததும் கீழிறங்கிக் கொஞ்ச நேரம் பட்டினத்திற்குள் சென்றோம். சீனாவுக்கும் ஜப்பானுக்கும் என்ன வேற்றுமை! இவ்வுலகிலுள்ள ஜனங்களில் ஜப்பானியர் ஒருவர் என்று சொல்லும்படி எல்லாம் சுத்தமாயிருக்கின்றன. அநேகமாய் வீதிகள் மிகவும் விசாலமாய், நேராய் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிறிய வீடுகள் கூண்டுகளைப்போல் இருக்கின்றன. இங்குள்ள ஒவ்வொரு நகரத்திற்கும் கிராமத்திற்கும் பின்னால் மரங்களடர்ந்த சிறு குன்றுகள் இருக்கின்றன. விசித்திர உடைகள் தரித்த அழகிய ஜப்பானியர்களும், அவர்கள் வேலை செய்வதும், நடப்பதும், நிற்பதும்—எல்லாம் அதிசயமாயிருக்கின்றன! ஜப்பான் ஒரு விசித்திர தேசமென்றே சொல்லலாம். சிறு செடிகளும், புற்றரைகளும், சிறு செயற்கை நீர் வீழ்ச்சிகளும், கற்பாலங்களும், ஜப்பானிய முறைப்படி ஏற்பட்ட தோட்டங்களும் ஒவ்வொரு வீட்டின் பின்புறத்திலும் இருக்கின்றன.

நாகஸாகியிலிருந்து **கோப்** போனோம். ஜப்பானின் உட்பிரதேசத்தைப் பார்க்க விரும்பி, நான் கப்பலிலிருந்து இறங்கித் தரை வழியாக யோக ஹாமாவிற்குப் போனேன்.

ஜப்பானின் நடுவில் பல தொழிற்சாலைகளுள்ள **ஓஸாகா** என்னும் பெரிய பட்டணத்தையும் நான் கண்டேன். டோக்கியோ, கல்கத்தாவைவிட விஸ்தீரணத்திலும் ஜனத் தொகையிலும் இரு மடங்கு பெரியது என்று சொல்லலாம். உத்தரவுச் சீட்டு இன்றி அயல் தேசத்தானொருவனும், இங்கே உள் நாட்டில் பிரயாணஞ் செய்ய விடப்படுவதில்லை.

இங்கு அநேக கோவில்களை நான் பார்த்தேன். ஒவ்வொரு கோவிலிலும், பழைய வங்காள எழுத்துக்களில் சம்ஸ்கிருத மந்

திரங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சில அர்ச்சகர்களுக்குச் சம்ஸ்கிருதம் தெரியும். அவர்கள் எல்லோரும் புத்திசாலிகள். முன்னுக்கு வரவேண்டுமென்னும் பேராவல் இவ்வர்ச்சகர்களுக்கும் பரவிவிட்டது. இந்த ஜப்பானியர்களைப் பற்றிய என் கருத்தை ஒரு சிறு கடிதத்தில் எழுத முடியாது.

உங்கள்

**விவேகானந்தர்**

## வினுக்கள்

1. முற்காலத்தில் மலேயா நாட்டார் எங்ஙனம் பிழைத்து வந்தனர் ?

2. ஹாங்காங்கில் பெண்கள் படகு ஓட்டுவது அதிசயமான காட்சியாக இருக்கக் காரணமென்ன ?

3. சீனர்களுக்கும் இந்தியர்களுக்குமுள்ள ஒற்றுமை என்ன?

4. விவேகானந்தர் 'குடியிருக்கும் படகுகளை' எங்கே கண்டார்? அவை எவ்வாறிருந்தன ?

5. சீனுவிலுள்ள பெரிய ஆலயத்தில் விவேகானந்தர் கண்டதென்ன ?

6. ஜப்பான் நாட்டைப் பற்றி அவர் யாது கூறுகின்றார் ?

## பயிற்சி

1. இருபொருள் கூறுக :—வீதி, மூட்டை, சாரல், மாடி.

2. எதிர்மொழி கூறுக :—சுறுசுறுப்பு, ஞானி, விசாலம், செயற்கை, திருப்தி.

3. சேர்த்து எழுதுக:—கடல்+ஓரம்; அங்கும்+இங்கும்; கப்பல்+தலைவன் ; நூறு+கணக்கு ; இரும்பு+கயிறு ; புல்+தரை.

4. வாக்கியங்களில் அமைக்க :—அபரிமிதமாய், இலட்சியம், சாவதானமாய், ஜனசமூகம், பிரதிக்ஞை.

5. சீனப் பெண்களின் வீர உழைப்பைப் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

6. கொழும்புத் துறைமுகத்தில் தங்கிய விவேகானந்தர் அந்நகரில் கண்டு களித்த விசேஷங்களைத் தொகுத்து எழுதுக.

7. சீனர்களைப் பற்றியும், அவர்களது பழக்க வழக்கங்களைப் பற்றியும் ஒரு சிறு கட்டுரை எழுதுக.

# 17. கோவூர் கிழார்

சோழவள நாட்டில் கோவூர் என்பது ஒரு சிறு கிராமம். அக்கிராமத்தில் சற்றேறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டு கட்கு முன்னர் வேளாண் மரபில் தோன்றிய சான்ருேர் ஒரு வருக்குக் கோவூர் கிழார் அருந்தவப் புதல்வராகப் பிறந்தார். கிழாரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து பள்ளிக்குச் செல்லும் பருவத்தை அடைந்தார். 'தந்தை மகற்கு ஆற்றும் உதவி, அவையத்து முந்தியிருப்பச் செயல்' அல்லவா? ஆகவே, அவரது தந்தையாரும் தமது அருமந்த மைந்தரை நல்லாசிரியர் ஒருவரிடம் ஒப்புவித்து இலக்கண இலக் கியங் கற்குமாறு ஏவினர். கிழார் மிக அடக்க வொடுக்கத்துட னும் பரிவுடனும் ஆர்வத்துடனும் ஆசிரியர்பால் கற்பன கற்று, கேட்பன கேட்டு வந்தனர். வித்தைகள் அவருள்ளத்தில் வேரூன்றி முளைத்துக் கிளைத்திருந்தன. நாளடைவில் அவர் சிறந்த புலவராய் விளங்கலானுர். அக்காலத்தில் கோவூரில் அவர் ஒருவரே சிறந்த புலவராய் விளங்கினமையால், தாம் பிறந்த ஊர்ப் பெயரையும், வேளாளரின் சிறப்புப் பெயரையும் தாங்கிக் **கோவூர் கிழார்** என அழைக்கப்பட்டார்.

அக்காலத்தில் சோழ நாட்டை நலங்கிள்ளி என்னும் அர சன் ஆண்டு வந்தான். அவன் சிறந்த வீரன்; தன்னை எதிர்த்து வந்தவர்கட்கு என்றும் பணியாதவன்; ஆனல் தன்னை விரும்பி வருபவர்கட்கு வணக்கம் செலுத்தி வேண்டியன செய்பவன். இவன் பாடல்கள் இயற்றக்கூடிய சிறந்த புலவனுயுமிருந்தான். அவன் கோவூர் கிழாரது அரிய புலமைத் திறனைக் கேள்வி யுற்று அவரைத் தன் அவைக்களத்துக்கு அழைத்தான். புல வரும் அவன் அழைப்பிற்கிணங்கி அவனது அவைக் களத்தை அடைந்தார். அன்றுமுதல் இருவரும் கலந்த அன்பும் நண்பு முடையவராயினர். நலங்கிள்ளி ஒரு சிறிதும் கவலையின்றித் தம்மையொத்த புலவராகிய கோவூர் கிழாரோடு அளவளாவிப் பொழுது போக்குவானுயினன். கிழார் அவனது வீரம், நியாயம், தியாகம் முதலியவற்றை இனிய பாக்களால் பாடி அவனை மகிழ் வித்து வந்தார்.

இங்ஙனம் புலவர் நலங்கிள்ளியோடிருக்குங்கால் சோழ பரம்பரையில் தோன்றிய **நெடுங்கிள்ளி** என்பவன் மன்னனுக

முயன்று கொண்டிருந்தான். அதனால் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் பகை மூண்டது. நலங்கிள்ளி படையெடுத்துச் சென்று நெடுங்கிள்ளியிருந்த ஆவூரை முற்றுகையிட்டான். நெடுங்கிள்ளி பெரிதும் பயந்து தனது கோட்டை வாயில்களை யெல்லாம் மூடி அரண்மனைக்குள் இருந்து வந்தான். இம் முற்றுகை பலநாள் நீடித்தது. அதனால் அரணுக்குள்ளிருந்த போர் வீரர்களும் மக்களும் நீரும் உணவுமின்றிப் பெரிதும் வருந்தினர்.

அதனைக் கேட்ட கோவூர் கிழார் ஆவூர்க் கோட்டைக்குள் சென்றார்; உள்ளேயிருந்த நெடுங்கிள்ளியைக் கண்டு, "அரசே! யானைகள் எல்லாம் குளத்தில் குளியாமல் இருக்கின்றன; நெற் கவளங்களைக் கொள்ளாமல் இருக்கின்றன; கம்பங்களைச் சாய்த்து நிலத்தின்மீது புரளும் கையுடன் பெருமூச்சுவிட்டுப் பேரிடிபோல முழங்குகின்றன. குழந்தைகள் பாலில்லாமல் அழுகின்றன. மகளிர் தம் கூந்தலை மலர்கொண்டு அலங்கரியாமல் இருக்கின்றனர். குடிகள் அனைவரும் தண்ணீர் இன்றி வீடுகளிலிருந்து வருந்திக் கூவுகின்றனர். இவற்றிற்கெல்லாம் நாணமலும் இரங்காமலும் நீ இவ்விடத்தில் இனிதாக இருத்தல் மிகக் கொடிது. வலிமை மிக்க படையை உடையவனே, நீ உண்மையில் அறத்தை உடையவனாயின், உனது குலத்தவனாகிய பகைவனிடம் செல்; 'இக்கோட்டை உன்னுடையது' என்று கூறி, கோட்டைக் கதவைத் திறப்பாயாக; இன்றேல் உன் வீரம் விளங்க வெளி வந்து விரைவில் போர் செய். இவை இரண்டுமின்றித் திறவாமல் அடைக்கப்பட்ட கதவினையுடைய பெரிய மதிலினுள் ஒரு புறத்தில் ஒதுங்கியிருத்தல் வெட்கும் தன்மையுடைய செயலாகும்" என்ற அரிய கருத்துக்கொண்ட ஒரு பாட்டைப் பாடினார். இதனைக் கேட்டதும் நெடுங்கிள்ளி அடைமதிலைத் திறந்துவிட்டு, உறையூர் சென்று அரண் செய்து உள்ளிருந்தான். நலங்கிள்ளி விரைவில் வந்து ஆவூரைக் கைப்பற்றிக்கொண்டான்.

இங்ஙனமிருக்கச் சோழ நாட்டில் **இளந்தத்தனர்** என்னும பெயர் வாய்ந்த புலவர் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த புரவலர்களிடத்துச் சென்று பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்து வந்தார். அவர் தம் வறுமையின் கொடுமையால் ஆவூர்க் கோட்

டையை முற்றுகை செய்து கைப்பற்றியிருந்த சோழன் நலங் கிள்ளியிடத்துச் சென்றார். நலங்கிள்ளி அவர் மனங்களிக்கு மாறு பொருள் கொடுத்தான். புலவர் அதைப் பெற்றுக் கொண்டு உறையூர்போய் நெடுங்கிள்ளியை அடைந்து பரிசில் வேண்டினர். நெடுங்கிள்ளி அப்புலவரை, 'இவன் உண்மைப் புலவன் அல்லன்; நமது இரகசியங்களை அறிய நலங்கிள்ளியிட மிருந்து வந்த ஒற்றனேயாவன்' எனத் தவறாகக் கருதி அவ ரைக் கொல்லத் துணிந்தான்.



கோவூர் கிழார் இக்கொடுஞ் செயலைக் கேள்வியுற்றார். அவர் மனம் கொதித்தது. உடனே அவர் உறையூரை நோக் கிச் சென்றார்; உறையூரையடைந்து அரசனை அணுகி, 'அரசே! நான் சொல்வதைக் கேட்பாயாக. பழுத்த மரங்களை நாடிச் செல்லும் பறவைகளைப்போல் புலவர்கள் வரையாது அளிக்கும் வள்ளல்களை நாடிச் செல்லும் இயல்புடையவர்கள். அவர்கள் செல்லுதற்கரிய வழிகளையும் கடந்து செல்வர். வள்ளல்களின் சிறப்புக்களை உள்ளங்குளிரப் பாடிப் பரிசில் பெற்று மகிழ்வர்; தாம் பெற்ற பரிசில் பொருளால் தாமும் சுற்றத்தாரும் உண்டு மகிழ்வதோடு உள்ள மகிழ்ச்சியோடு ஏழைகளுக்கும் அளிப்பர். அவர்கள் எவ்வுயிருக்கும் தீங்கு நினைக்கமாட்டார்கள். புலவரது வாழ்க்கை வஞ்சகலவாப் புனிதமுடையது. இத்தகைய புலவர்

களுள் இவர் ஒருவர். வீணே இப்புலவரை ஒற்றரெனக் கருதிக் கொல்லத் துணிந்தாய். இது உனக்கு அறமாகுமோ?'' என்று, அரசனது உள்ளத்தில் நன்கு பதியும்படி எடுத்துக் கூறினர். புலவரின் நன்மொழியால் நெடுங்கிள்ளி மனந்தெளிந்து இளந் தத்தரைக் கொல்லாது விடுத்தான். இவ்விதம் கிழார் அப்புல வரை உய்வித்தார்.

இவ்விதமிருக்க, ஆவூரைக் கைப்பற்றியிருந்த சோழன் நலங்கிள்ளி உரையூரை முற்றுகையிட்டுப் பெரும் போர் தொடங்கலானுன். இதனை அறிந்த கோவூர் கிழார் எவ்விதத் திலும் இருவருடைய பகைமையும் ஒழித்து ஒற்றுமைப்படுத்த வேண்டும் எனக் கருதினர்; அதனுல் விரைந்து சென்று அவ் விருவரையும் அழைத்து, "அரசர்களே, பகைத்து நிற்கும் உம் மிருவருள் ஒருவனும் பனம்பூ மாலையணிந்த சேரனுமல்லன்; வேப்ப மாலையை அணிந்த பாண்டியனும் அல்லன்; உன் னுடைய கண்ணியும் ஆத்தியால் ஆனது; உன்னுடன் பொரு வானும் ஆத்திமாலையுடையவனே. ஆகவே, நீங்கள் இருவரும் சோழரே; யார் தோற்ருலும் தோற்பது உங்கள் குடியே. இரு வரும் வெல்லுதல் இயலாததாகும். இச்செய்கை உங்கள் குடி யின் பெருமைக்குத் தக்கதன்று; மற்றையரசர் பழிக்க இஃது ஏதுவாகும். ஆதலால் போரை நிறுத்தி நட்புக் கொள்ளுங்கள். இதுவே உமக்குத் தக்கதாகும்,'' என்று பசுமரத்தாணிபோல் இருவருள்ளத்தும் பதியும்படி கூறினர். புலவர் பொருளுரை கேட்ட புரவலர் இருவரும் பகைமை நீங்கி ஒற்றுமையுற்றனர்.

பின்பு நலங்கிள்ளி புலவரது அரும் பெருங்குணத்தினைக் கண்டு அவரோடு முன்னிலும் பெரு நட்புக் கொண்டு அள வளாவி வந்தான். அவன் புவியரசராயிருந்ததுமன்றி, கவி வாணர் போற்றும் கவியரசராகவும் விளங்கினன். புலவரும் அவன்பால் அன்புமிகக் கொண்டு அவனது சிறப்பினைப் பாராட்டிப் பல பாக்கள் பாடினர்.

## வினக்கள்

1. கோவூர் கிழாருக்கு அப்பெயர் ஏற்பட்ட காரணமென்ன?
2. அவர் எவ்விதம் கல்வி கற்ருர்?
3. நலங்கிள்ளியின் நற்குணங்கள் யாவை?

4. கோட்டைக்குள்ளிருந்த நெடுங்கிள்ளிக்குக் கிழார் கூறிய நல்லுரை யாது ?

5. இளந்தத்தனர் என்பவர் யார் ? அவருக்கு நேர்ந்த துன்பம் யாது ?

6. கோவூர் கிழார் இளந்தத்தனரை எவ்வாறு காப்பாற்றி னர் ?

7. உறையூர் முற்றுகையின்போது கிழார் யாது கூறிச் சோழர் இருவரையும் ஒற்றுமைப்படுத்தினர் ?

### பயிற்சி

1. இருபொருள் தருக :—அவை, பணி, கவலை, பிடி, மேனி.

2. எதிர்ச் சொற்கள் தருக :—பகைமை, ஒற்றுமை, நியா யம், வலிமை, அறம், பெருமை.

3. பிரித்துக் காட்டுக :—பேரிடி, பாலில்லாமல், வேரூன்றி, பசுமரத்தாணி.

4. கீழ்வரும் சொற்களை வாக்கியங்களில் அமைத்தெழுதுக : முற்றுகை, வரையாது, தியாகம், பசுமரத்தாணி.

5. கோவூர் கிழார் கோட்டைக்குள்ளிருந்த நெடுங்கிள்ளிக்குக் கூறியவற்றை ஒரு பத்திக்குள் வரைக.

6. 'கோவூர் கிழாரின் சிறந்த குணங்கள்' என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

## 18. பண்டைத் தமிழர் மாண்பு

தமிழர்கள் மிகவும் தொன்மை வாய்ந்தவர்கள் ; பெருமை பெற்றவர்கள் ; சரித்திர காலத்துக்கும் அப்பாற்பட்டவர்கள். அக்காலத்தில் வாழ்ந்த தமிழர்களின் பண்பு மிக மிக உயர் வுடையது. தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். தமிழர் மிகவும் இனியர் ; அவர்களுடைய அறிவு பிறரால் அறிய முடியாத விரிவுடையது ; அறிவிற் சிறந் தமை போன்றே அன்பிலும் அருளிலும் பெரியராக விளங் கினர்.

மண்வெட்டி முதலிய கருவிகளால் தோண்டுவதைத் தாங்கும் நிலத்தைப் போல பொறுமை உடையவர் ; பகை வரை வெல்லும் ஆராய்ச்சியில் வான வெளியினைக் காட்டி லும் மிக்க அகன்ற ஆராய்ச்சி உடையவர் ; காற்றினும் மிக்க வலிமையுடையவர் ; தீயவரை அழிக்குஞ் செயலில் தீயைப்

போன்ற ஆற்றல் உடையவர் ; அவர் நல்லவராய் வணங்கின் அவருக்கு அருள் செய்யும் முறையில் தண்ணீரைப் போன்ற அருள் உள்ளவர்.

பண்டைத் தமிழர் பாத்தூண் புரிவதில் ஏற்றம் பெற்றவர்; தேவரும் விரும்பும் தேன் அமுது எனினும், அதனை இனிதென்று கருதித் தாமே உண்ணுதல் செய்யார் ; பிறருக்கு ஈந்தே உண்பர். அதியமான் தான் அரிதிற் பெற்ற நெல்லிக் கனியை ஔவையாருக்கு அளித்த தன்மை இதற்குப் போதிய சான்று. பிறர் அஞ்சும் துன்பத்திற்கு அஞ்சார். அத்துன்பத்தைப் பிறர் துணைக் கொண்டு நீக்குதல் வேண்டுமென்று கருதிச் சோம்பல் செய்யாது தாமே முயன்று துன்பத்தினைத் தொலைப்பர். புகழ்பெறத் தம் உயிரையும் பொருட்படுத்தார். குமண வள்ளல் நல்லிசைப் புலவருக்குத் தம் தலையைக் கொடுக்க இசைந்த செய்தியை நீவிர் உணர்வீர்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உயர்ந்த நோக்கம் உடையவர் ; பெரு வாழ்க்கை வந்த காலத்தில் மகிழ்தலும், வறுமை வந்த காலத்தில் வருந்துதலும் அவர்பால் இல்லை. தம்மிடம் ஏதேனும் பொருள் கேட்போருக்கு இல்லையென்று மறுத்து உரைக்குஞ் சிறுமைப் பண்பு பண்டைத் தமிழரிடம் இல்லை. அவர்கள் "செல்வத்துப் பயனே ஈதல்" என்ற நோக்கினர். கதிர் விளைந்த காலத்தில் அவற்றைக் கொய்து கொண்டு சென்று தம் இருப்பிடத்தில் செறித்து வைக்கும் எலியைப் போன்று பிறர் பொருளைக் கவர்ந்து வைத்துக் கொண்டு ஈயாமலும் உண்ணுமலும் வாழ்நாள் கழிக்கும் தன்மையுள்ளவரது நட்பினைத் தமிழர் ஒதுக்கி வைத்தனர். அவர்கள் பெரியோரை வியந்து பேசுதலும், சிறியோரை இகழ்ந்து பேசுதலும் செய்யார்.

"தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர். யான் பெற்ற இன்பம்பெறுக இவ்வையகம்" என்ற உயர்பெருஞ் சீரிய நோக்கு உள்ளவர். பெற்றோர் தம் குழந்தைகளைப் பேணி வளர்த்தல் போன்று அவர்கள் உலக மக்களைப்பேணி வளர்த்தனர். அறிவில்லாதவருடைய செல்வத்தைத் தமிழர் நினைத்தலுஞ் செய்யார்; நல்லறிவுடையோர் நல்குரவைப் பெரிதும் நினைத்துப் பேணுவர்; ஒருவனிடத்துச் சென்று 'ஈ' என்று இரந்து கேட்பதனை

மிகவும் இழிந்ததாகக் கருதினர்; அவ்வாறு கேட்பவனுக்கு "ஈயேன்" என்று கூறுதலை அவ்விரத்தலினும் இழிவாகக் கருதினர்; குறிப்பறிந்து "இதனைப் பெற்றுக்கொள்" என்று ஒருவருக்குக் கொடுத்தல் உயர்வு என்று கருதினர்; 'அவ்வாறு கொடுப்பதனைப் பெற்றுக் கொள்ளேன்' என்று மறுத்து உரைத்தலை அதனினும் உயர்வாகக் கருதினர்.

தம் சுற்றத்தார் செய்த பிழைகளைப் பொறுத்தலும், பிறர் வறுமைக்குத் தாம் நாணுதலும், போரில் பின்னிடாத ஆண்மையாளராதலும், மன்னர் கூடிய அவைகளில் மேம்பட்டு நடத்தலும் தமிழ் மக்களின் பண்பாகும். வீணாக மனக் கவலை கொள்ளார்; தமக்கென்று முயற்சி செய்யாது பிறருக்காக முயன்று துணை செய்வார். உலகம் முழுவதுமே பரிசாகக் கிடைப்பினும் பழிச்செயல் செய்யார்; சிறுமைச் செயல்களும் தமிழர் பால் இல்லை. 'காட்டில் ஓடும் முயலை எய்து கொல்வதனைப் பார்க்கிலும் வெளியான இடத்தில் நிற்கும் யானையை எறிந்து குறி தவறி விழுந்த வேலை ஏந்துதல் உயர்வு' என்ற கொள்கையினர் தமிழர்.

தமிழ்ப் பெண்கள் உயிரினும் மேலானது நாணம் என்று கருதினர்; அந்த நாணத்திலும் கற்பு மேலானது என்று நினைத்துக் கற்பு நெறி வழுவாமல் வாழ்ந்தனர். விருந்தினரைப் பேணுதலில் தமிழ்நாட்டுத் தாய்மார் மிகவும் மேம்பாடு அடைந்தவர். ஆடவர், பெண்டிர் ஆகிய இருபாலரும் தக்க கல்வியும், மிக்க ஒழுக்கமும் எக்காலத்தினுஞ் சிதையாதபடி இலங்கினர். இவர்தம் உயர்வுப் பண்புகளை உலகப் பெரு நாவலராகிய திருவள்ளுவ நாயனுரும், புறநானூறு முதலிய பழந் தமிழ்ச் செய்யுட்கள் இயற்றிய நல்லிசைப் புலவர்களும் நமக்கு வழங்கியுள்ளனர்.

தமிழ் வீரர்கள் மாற்றூர் மீது போர் தொடங்குவதற்கு முன் ஆன், அந்தணர், குழந்தை, பெண், நோயுற்றவர்கள் அனைவரையும் தக்க காவல் உள்ள இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தி, அன்னூர் அவ்விடத்தைவிட்டு விலகிய பின்னரே, அம்பு சொரிவர்; புறமுதுகிட்டவர்மேல் அம்பு எய்யார். ஒரு தமிழ் வீரன் "யான் இரண்டு கையுடையேன்; ஒரு கையுடைய யானையைக் கொல்வது குற்றம். அதுவுமன்றி அது

அறிவில்லாத விலங்கு'' என்று சொல்லி, அதனை எய்யாது விடுத்தான்; தன்னோடு ஒத்த ஆண்மையாளர் பிறரால் அம்பு எய்யப்பட்டிருந்தமையால், அவரைப் பிறர் எச்சில் என்று கருதி விடுத்தான். ஆகவே, வீரர்கள் தம்மைப்போன்ற ஆண்மையாளருடன் பொருது வெல்வதே சிறப்பு என்று கருதினர் என்பது இவற்றால் விளங்குகின்றதன்றோ?

அரசன் உலகத்துக்கு உயிராக இருந்து ஆட்சி செய்தான். பிறர் பழிகளைத் தூற்றும் அறிவில்லாதவர் சொற்களுக்குச் செவி சாய்க்கும் வழக்கம் தமிழரசரிடம் இல்லை. அறிவுரை கூறும் புலவர் கடினமாக இடித்துக் கூறினாலும், அவ்வுரைகளுக்குச் செவி சாய்த்துக் கேட்டு நன்மை செய்வர். அறிந்து பாடுபடும் பெரும்புலவருடைய அறிவின் எல்லையைக் கடந்த மிக்க புகழ் உடையவராகத் தமிழ் அரசர் இலங்கினர். அறிவுடையோர் செல்லும் நெறியிலேயே அரசரும் செல்வராயினர்.

பண்டைத் தமிழ் மக்கள் 'எல்லாவற்றிற்கும் மேலாகக் கடவுள் ஒருவரே: அவர்க்கு இன்ன உரு, இன்ன நிறம், என்பது கிடையாது; உலகம் அவரால்தான் இயங்குகின்றது' என்ற கொள்கையுடையவர். அவர்கள் இறைவனை,

> ''யாம் இரப்பவை
> பொருளும் பொன்னும் போகமும் அல்ல
> அருளும் அன்பும் அறனும் மூன்றும்''

என்று வேண்டி வழிபட்டனர். தமிழர்களாகிய நாம் தமிழின் பெருமையையும் தமிழ் மக்களின் பண்பினையும் நன்குணர்ந்து, அந்நெறியில் வழுவாது நடந்து நற்பயன் பெறுவோமாக.

> வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
> வாழிய பாரத மணித்திரு நாடு! —பாரதியார்

## வினாக்கள்

1. தமிழ் என்னும் சொல்லுக்குப் பொருள் யாது?
2. பண்டைத் தமிழ் மக்களின் சிறந்த குணங்களில் சில கூறுக.
3. பண்டைத் தமிழர் பாத்தூண் புரிவதில் ஏற்றம் பெற்றவர் என்பதற்கு உதாரணம் தருக.
4. தமிழர் புகழ்பெறத் தம் உயிரையும் பொருட்படுத்தார் என்பதற்குத் தக்க சான்று தருக.

5. தமிழர் எத்தகைய நட்பை ஒதுக்கி வைத்தனர்?

6. தமிழர் இழிந்தனவாகவும் உயர்ந்தனவாகவும் கருதிய குணங்கள் யாவை?

7. சிறுமைச் செயல்கள் தமிழர்களிடத்தில் இல்லை என்பதற்கு ஒரு சான்று தருக.

8. பண்டைத் தமிழ்ப் பெண்களிடம் பொருந்திய சிறப்பியல்புகள் யாவை?

9. தமிழ் வீரர்கள் போர் செய்யுமுன் கூறும் அறவுரைகள் யாவை?

10. தமிழ் வீரர்கள் தம்மைப் போன்ற ஆண்மையாளருடன் போர் செய்து வெல்வதே சிறப்பு எனக் கருதினர் என்பதற்குச் சான்றுகள் யாவை?

11. பிறர் கூற்றைக் கேட்பதில் தமிழரசர்கள் கொண்ட கொள்கைகள் யாவை?

12. பண்டைத் தமிழர் இறைவனை எவ்விதம் வழிபட்டனர்?

## பயிற்சி

1. இருபொருள் தருக :—நெறி, வையகம், கதிர், ஈ, குன்று.

2. எதிர்ச்சொல் கூறுக :—பழிச்சொல், அறம், தூற்றும், தொகுப்பு, சிறுமை.

3. பிரித்தெழுதுக :—பைந்தமிழ், பெருவாழ்க்கை, நல்லறிவு, பழந்தமிழ்.

4.

| | | | |
|---|---|---|---|
| அழி | உரை | கழி | இரத்தல் |
| அளி | உறை | களி | இறத்தல் |

இரண்டிரண்டாகக் காட்டப்பட்ட சொற்களின் பொருள் வேறுபாட்டைக் கூறுக.

5. 'அதியமான் நெல்லிக் கனியை அளித்தான்'—'அளிக்கப்பட்டது' என்று முடியுமாறு இவ்வாக்கியத்தை மாற்றி அமைக்க.

6. கீழ்க் கண்டவைகளின் கருத்தைச் சுருக்கி எழுதுக :—

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
"தமக்கென வாழாப் பிறர்க்குரி யாளர்"
"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்".
"செல்வத்துப் பயனே ஈதல்"

7. "பண்டைத் தமிழரின் மாண்பு" என்பதைப்பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.

# செய்யுட் பாடம்

## I. கடவுள் வணக்கம்

### 1. கலைமகள்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்;
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்;
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத்து இருப்பாள்;
உள்ளதாம் பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்;
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்.

—பாரதியார்

### 2. சிவபெருமான்

அப்பா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்;
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்;
எப்பாரு மெப்பதமு மெங்கணுநான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்;
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்;
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்;
தலைவ! நினைப்பிரியாத நிலைமையும் வேண்டுவனே.

—இராமலிங்க சுவாமிகள்

### 3. இயேசு நாதர்

கார்த்திரள் மறையாக் கடலினுள் மூழ்காக்
கடையிலாது ஒளிர்பரஞ் சுடரே!
நீர்த்திரள் சுருட்டி மாறலை யின்றி
நிலைபெறும் செல்வநற் கடலே!
போர்த்திரள் பொருதக் கதுவிடா அரணே!
பூவனந் தாங்கிய பொறையே!
சூர்த்திரள் பயக்கும் நோய்த்திரள் துடைத்துத்
துகள்துடைத்து உயிர்தரும் அமுதே!

—வீரமாமுனிவர்

## 4. மனத்திற்கு முறையீடு

கதிரவன் கிரணக் கையால்
கடவுளைத் தொழுவான்; புட்கள்
சுதியொடும் ஆடிப் பாடித்
துதிசெயும்; மரங்க ளெல்லாம்
பொதியலர் தூவிப் போற்றும்,
பூதம்தம் தொழில்செய் தேத்தும்;
அதிர்கடல் ஒலியால் வாழ்த்தும்;
அகமே நீவாழ்த்தா தென்னே.

—வேத நாயகம் பிள்ளை

# II. இயற்கைக் காட்சி

## 1. நாஞ்சி நாடு

1. வயலெல் லாம்நல் லறற்புனல் பாயும்;
வரம்பெ லாம்இள வால்வளை மேயும்;
அயலெல் லாஞ்செந்நெல் காய்க்குலை சாயும்;
அருகெல் லாம்இரை அன்னங்கள் ஆயும்;
புயலெல் லாம்மலர்ப் பூம்பொழில் தோயும்;
பொழிலெல் லாங்கனி போகங்கள் ஈயும்;
இயலெல் லாந்தெரி செண்பக ராம
ஏந்தல் வாழ்நாஞ்சி நாடெங்கள் நாடே.

2. பாளைப் பூக மரகதக் காய்செம்
பவளம் போலப் பழுத்துச் சொரியும்;
நாளத் தாமரைச் செம்மலர் நெல்வயல்
நாரி மார்முகம் போல விரியும்;
ஆழப் பாயும் பகட்டிள வாளைகட்கு
அஞ்சி யேமட வன்னம் இரியும்;
வாளுக்கே வீமன் செண்பக ராமன்
வளமை சேர்நாஞ்சி நாடெங்கள் நாடே.

—செண்பகராமன் பள்ளு

## 2. சித்திரா நதி

குற்றாலத் திரிகூட மால்வரை
யுற்றே மேகம் பொழிந்தநீர்
கூடிப் பொருனை நாடித்திருமுக்
கூடற் பதியைவலங் கொண்டே,
வற்று மடுவிற் பரவை குரவை
வாளை கோளை தேளிமீன்
மயிந்தி உழுவை அயிந்திகூனி
மணலி ஆரல் ஒரா மீன்
பற்று அயிரை கெண்டை கெளிறு
பருவ ராலும் அணையிலே
பாயக் காலிற் பாயக் குளத்திற்
பாய வயலிற் பாயவே,
சிற்று றென்பது பெற்றாலும் ஒரு
சிறியவர் மனப்பெருமை போல்
சித்ரா நன்னதி பெருகி வார
சித்திரம் பாரும் பள்ளீரே.

—முக்கூடற் பள்ளு

## 3. வெண்ணிலா

1. மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே—ஒரு
வெள்ளிஓடம் போலவரும் வெண்ணிலாவே.

2. ஆம்பல்களி கூரவரும் வெண்ணிலாவே—உனக்கு
அம்புஜம்செய் தீங்கெதுவோ வெண்ணிலாவே.

3. வளர்ந்து வளர்ந்துவந்த வெண்ணிலாவே—மீண்டும்
வாடி வாடிப் போவதேனோ வெண்ணிலாவே.

4. ஆழியும்நீ வரக்கண்டு வெண்ணிலாவே—குதித்
தாடுவதெக் காரணமோ வெண்ணிலாவே.

5. பானுவெங் கதிர்குளிக்கும் வெண்ணிலாவே—நித்தம்
பாற்கடலும் ஆடுவையோ வெண்ணிலாவே.

—கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை

# III. நீதிப் பகுதி

## 1. அறநெறிச் சாரம்

### நடுநிலை காணும் முறை

1. காய்தல் உவத்தல் அகற்றி, ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே;—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்ருது ஆகும்; உவப்பதன்கண்
குற்றமும் தோன்ருக் கெடும்.

### முற்பகல் செய்வன, பிற்பகல் விளையும்

2. பிறர்க்கின்னு செய்தலிற் பேதைமை யில்லை;
பிறர்க்கின்னுது என்று பேரிட்டுத்—தனக்கின்னு
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலிற்
பித்தும் உளவோ பிற.

### நல்லொழுக்கமே வீட்டிற்கு வித்தாம்

3. இருளே உலகத்து இயற்கை; இருளகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை; கைவிளக்கின்
நெய்யேதன் நெஞ்சத்து அருளுடைமை; நெய்பயந்த
பால்போல் ஒழுக்கத் தவரே பரிவில்லா
மேலுலகம் எய்து பவர்.

### இளமையில் அறஞ்செய்க

4. இன்சொல் விளைநிலமா, ஈதலே வித்தாக,
வன்சொற் களைகட்டு, வாய்மை எருவட்டி,
அன்புநீர் பாய்ச்சி, அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

—முனைப்பாடியார்

## 2. நாலடியார்

### கல்வி

1. கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கிற் பிணிபல;—தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே; நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.

### நல்லினஞ் சேர்தல்

2. ஊரங் கணநீர் உரவுநீர்ச் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம் ;—ஓரும்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

### நட்பாராய்தல்

3. கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை, எஞ்ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே ;—குருத்திற்கு
எதிர்செலத் தின்றன்ன தகைத்தரோ ; என்றும்
மதுரம் இலாளர் தொடர்பு.

—சமண முனிவர்கள்

## 3. ஆசாரக் கோவை

### ஆசாரங்களுக்குக் காரணம்

1. நன்றி அறிதல், பொறையுடைமை, இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை, கல்வியோடு
ஒப்புர வாற்ற அறிதல், அறிவுடைமை,
நல்லினத்தா ரோடு நட்டல் : இவை எட்டும்
சொல்லிய ஆசார வித்து.

### கடமைகள்

2. வைகறை யாமந் துயிலெழுந்து, தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளுஞ் சிந்தித்து, வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை.

—பெருவாயின் முள்ளியார்

## 4. திருக்குறள்

1. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

2. மனத்துக்கண் மாசிலன் ஆதல் ; அனைத்தறன்
ஆகுல நீர பிற.

3. அன்பும் அறனும் உடைத்தாயின், இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது.

4. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார் ;
மறத்திற்கும் அஃதே துணை.

5. மோப்பக் குழையும் அனிச்சம் ; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

6. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

7. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

8. நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

9. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலா தார்.

10. பொறுத்தல் இறப்பினை என்றும் ; அதனை
மறத்தல் அதனினும் நன்று.

11. இலமென்று வெஃகுதல் செய்யார் ; புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

12. கண்நின்று கண்ணறச் சொல்லினும், சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல்.

13. சொல்லுக சொல்லில் பயனுடைய ; சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.

14. தன்னைத்தான் காதலனாயின், எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

15. இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர்.

16. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் ; அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

17. புகழ்பட வாழாதார் தம்நோவார் ; தம்மை
இகழ்வாரை நோவது எவன் ?

18. மழித்தலும் நீட்டலும் வேண்டா ; உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

19. தன்னெஞ்சு அறிவது பொய்யற்க ; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

20. நகையும் உவகையும் கொல்லுஞ் சினத்தின்
பகையும் உளவோ பிற.

21. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.

22. கேடில் விழுச்செல்வம் கல்வி ; ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

23. விலங்கொடு மக்கள் அனையர் ; இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

24. கற்றில னாயினும் கேட்க ; அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை.

25. சென்ற இடத்தால் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

26. நினைத்துணையாம் குற்றம்வரினும், பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

27. இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

28. மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து.

29. உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

30. ஞாலம் கருதினும் கைகூடும் ; காலம்
கருதி இடத்தால் செயின்.

31. அஞ்சாமை யல்லால் துணைவேண்டா ; எஞ்சாமை
எண்ணி இடத்தாற் செயின்.

32. குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

33. அன்பு, அறிவு, தேற்றம், அவாவின்மை : இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

34. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல், செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

35. அச்ச முடையார்க்கு அரணில்லை ; ஆங்கில்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.

36. அல்லல்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

37. கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின், நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும்.

38. சிதைவிடத்து ஒல்கார் உரவோர் ; புதையம்பின்
பட்டுப்பாடு ஊன்றுங் களிறு.

39. மடியிலா மன்னவன் எய்தும் ; அடியளந்தான்
தாயது எல்லாம் ஒருங்கு.

40. இடுக்கண் வருங்கால் நகுக ; அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்.

41. தெரிதலும், தேர்ந்து செயலும், ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு.

42. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.

43. சலத்தான் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்-
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று.

44. துன்பம் உறவரினும் செய்க ; துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.

45. வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்,
தீயெச்சம் போலத் தெறும்.

46. ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.

47. அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக ; சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

48. பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி, இறைவற்கு
இறையொருங்கு நேர்வது நாடு.

49. கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை.

50. விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித் திமைப்பின்
ஓட்டன்றோ வன்கண வர்க்கு.

51. உள்ளற்க உள்ளம் சிறுகுவ ; கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.

52. அழிவந்த செய்யினும் அன்பறார் ; அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

53. அமரகத்து ஆற்றறுக்குங் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை.

54. சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க ; வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்.

55. ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

56. குன்றின் அனையாரும் குன்றுவர் ; குன்றுவ
குன்றி யனைய செயின்.

57. பெருமை யுடையவர் ஆற்றுவார் ; ஆற்றின்
அருமை யுடைய செயல்.

58. ஊழி பெயரினும் தாம்பெயரார் ; சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

59. இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

60. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

—திருவள்ளுவர்

# IV. கதைப் பகுதி

## 1. இரட்சகர்

1. அன்னியர் ஆட்சியிலே — யூதர்
அடைந்த துன்பமெலாம்
பன்ன எளிதோ? அம்மா! — நினைக்கில்
பதைக்குது உள்ளம் அம்மா!

2. நீசர் சண்டாளர் — சற்றும்
நெஞ்சினில் அச்சமில்லார்
ஈசனுக்குரிய — பீடத்தில்
ஏறி யிருந்து கொண்டார்.

3. உண்ண உணவுமின்றி — உழைப்புக்கு
ஒவ்வொரு நாளுமின்றிக்
கண்ணீர் சொரிந்து நின்றூர் — யூதர்
கலங்கித் தட்டழிந்தார்.

4. அல்லும் பகலுமே — துயரில்
ஆழ்ந்து மூழ்கிடினும்,
நல்ல காலம் வரும் — வருமென
நம்பி நாள் கழித்தார்.

5. "இருள் ஒதுங்கிடவே — கதிரோன்
எழுந்து கிளர்வதுபோல்,
அருள் இறைமகனும் — நம்மை
ஆள வந்திடுவான்.

6. உண்மை ஒளிவீசும்; அப்போது
உலகில் நீதியோங்கும்;
அண்மையி லேநாமும் — நன்மை
அடைவோம்" என்றிருந்தார்

7. "அருங்கு ணச்செல்வன் — புவியில்
அவதரித் திடுநாள்
நெருங்கி வந்ததிதோ! மிகவும்
நெருங்கி வந்ததிதோ!

8. வருவீர் வருவீரே — எவரும்
வருவீர் " என்றுநலம்
மருவு காலிலிமா — நகரிலோர்
வார்த்தை கேட்டதம்மா !

9. சின்னுள் சென்றிட ஓர் — அற்புதத்
தீர்க்க தரிசி தோன்றி,
எந்நாடும் அறியச் — சிங்க
ஏறுபோ லேஎழுந்து :

10. " விடுவீர் எப்பொருளும் - விடுவீர்
விட்டுவந் தென்வழியைத்
தொடர்வீர் தொடர்வீரே " — என்று
சொல்மு ழக்கஞ் செய்தான்.

11. பூமியை ஆளுதற்குத் — தேவ
புத்திரன் வந்துதித்தான் ;
க்ஷேமம் பிறக்குமென — யூதர்
சிந்தை களித்திருந்தார்.

12. " ஈசன் நாமத்தை — அனுதினம்
ஏத்திப் புகழவேண்டும் ;
தாச தாசனுய்ப் — பணிந்து
தருமம் காக்க வேண்டும்.

13. உன்னுயி ரைப்போல — இந்த
உலகில் உயிரை யெல்லாம்,
மன்னும் அன்பொடுநீ - என்றும்
மதித்து வாழ வேண்டும்.

14. மேவும் எனதாட்சி — அந்த
விண்ணுல காட்சியேயாம் ;
ஏவல் இடம் பொருளில்—எனக்கிங்கு
ஏதும் மயக்கமில்லை."

15. என்னும்இப் பொன்னுரைகள்—நாட்டில்
எங்கும் எடுத்துரைத்தான் ;
மன்னுயிர் காத்திடவே—மண்ணில்
வந்து பிறந்தமகன்.

16. ஏழை படும்பாட்டை—அவனும்
எண்ணி எண்ணிநைவான் ;
ஏழையொ டேழையாக—உலகில்
எங்கும் அலைந்திடுவான்.

17. கால்முடம் நீக்கிடுவான்—குருட்டுக்
கண்களும் காணவைப்பான் ;
சாலப் பெருநோயும்—கையால்
தடவிப் போக்கிடுவான்.

18. தேச விவகாரம்—அவனும்
செவியிற் கொள்வதில்லை ;
காசு பணத்தைஅவன்—என்றுமே
கைகளால் தொட்டதில்லை.

19. பக்கத்தில் உள்ளவர்கள்—தேச
பக்தர் புரோகிதர்கள்
மிக்க பழிசுமத்தி—அவனுளம்
வெந்திடச் செய்துவிட்டார்.

20. "யூதரின் மன்னவன்யான்—எனவந்து
ஓதுகின்றான் ; இவனை
நீதிசெய்வீர்" எனவே—மன்றத்தில்
நிறுத்தி வழக்காடினர்.

21. ஏசுவினைச் சிலுவை—மரத்தில்
ஏற்றிக் கொல்வதென்றே,
நாசகா லர்கூடி—விதியங்கே
நாட்டி விட்டார்,ஐயோ !

22. "மன்னுயிர் காத்திடவே—இங்கு
வந்து பிறந்தமகன்
தன்னுயிர் காக்கவொண்ணாது—இன்று
தயங்கி நிற்கின்றான் !

23. முழக்கம் செய்துவந்தான்—வழக்கை
முடித்து நிற்கின்றான் ;
ஒழுக்கம் காட்டவந்தான்—இங்கே
உயர்வு பெற்றுவிட்டான் !"

24. என்று பற்பலரும்—அவனை
ஏளனம் செய்துநின்றார் ;
ஒன்றும் உரையாமல்—உரவோன்
உள்ளம் அடங்கி நின்றான்.

25. "யாதும் அறியாதார்—அவர்பிழை
யாவும் பொறுத்திடுவாய் ;
நாதனே !" என்றீசன்—அருளை
நயந்து வேண்டிநின்றான்.

26. விண்ணையே நோக்கி நின்றான்—எதனை
வேண்டி நின்றனனோ ?
எண்ணிய எண்ணமெல்லாம்—இங்கே
யாவர் அறிவர், அம்மா !

27. "உன்னையே நம்பி நின்றேன்—உதவிக்கு
ஒருவரை யுங்காணேன் ;
என்னைக்கை விட்டனையோ ?—ஈசா !"
என்று வருந்தி நின்றான்.

28. தெய்வ உதவியெதும்—அந்நாள்
தெரிய வந்ததில்லை ;
செய்தவின் ணப்பமெல்லாம்—வீணாய்ச்
சிதைந்து போனதையோ !

29. சரணம் நீயென்றே—தலையைத்
தாழ்த்து நின்றதலால்,
மரண வேளையிலும்—ஈசனை
மறந்த தில்லை அவன்.

30. ஆவி பெற்றனனோ ?—இன்றும்
அம்புவி வாழ்பவனோ ?
யாவர் அறிந்திடுவார் ?—அறியினும்
யாவரே கூறவல்லார் ?

**கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை**

## 2. பொரிமாத் தோண்டி

1. காணுமுன் கேட்கு முன்னே
   காரியங் களைநினைந்து
வீணிலே பூமி யின்மேல்
   விழுந்துருண் டழுது நெஞ்சம்
நாணினன் பிரம சாரி
   நாடிலங் கதுபோல் நீயும்
பூணணி மார்ப வீணே
   புகலவொண் ணுதென் றுளே.

2. உரைத்தவக் கதையே தென்ன
   ஓதுமோர் நகரந் தன்னில்
தரித்திரப் பிரம சாரி
   சார்ந்தொரு சிராத்தத் துண்டான் ;
அரைத்திடும் பொரிமாத் தோண்டி
   அவற்கொரு மறையோன் ஈந்தான்;
திருத்தியிற் பருப்புஞ் சோறுந்
   தின்றதோர் மயக்கத் தாலே.

3. மற்றொரு நகர்க்குச் செல்லும்
   வழியிலோர் மணற்ற டத்தில்
சற்றொரு கணப்போ தங்கே
   தரித்தவ னிருந்து, நெஞ்சில்
உற்றகா ரியங்கள் கோடி
   யுன்னினன் ; இந்த மாவை
விற்றுநாம் ஆடு வாங்கி
   மேய்க்கிலோர் இரண்டு குட்டி.

4. போடுமவ் விரண்டி லொன்று
   பொலிகடாத் தன்னை விற்று,
நாடுபெண் ணுடி ரண்டு
   நயவிலை யாகக் கொள்வேம் ;
ஆடொரு நாலாம் ; அந்த
   ஆடுகள் இரண்டி ரண்டாப்
போடுமக் குட்டி யோடே
   பொருந்திய பனிரண் டாமே.

5. பன்னிரண் டாடும்விற்றுப்
பசுக்களோர் இரண்டு கொள்வோம் ;
தன்னிலே பட்டி மேய்ந்து
தருக்கியே இரண்டும் ஈனும்
மன்னுபால் நெய்யும் விற்று
மற்றிரு பசுவுங் கொள்வோம் ;
அன்னவப் பசுக்க ளாறும்
ஆறுசேங் கன்று நல்கும் !

6. மூவணை யேருங் கூட்டி,
முன்னுள நிலங்க ளெல்லாம்
ஓவற வளங்க ளாக
உழுதுநாம் பயிர்க ளிட்டே,
மேவுதா னியங்க ளெல்லாம்
விலைகளைக் குறைய விற்றுக்
காவல னறிக்கை யாலே
கனக்கவோர் வீடு கட்டி.

7. இருந்துநாம் பணமுங் காசும்
ஏரொடு பொருளுந் தேடிப்
பொருந்திய பிரா மணர்க்குப்
போசன மிடுவோம் ; இட்டால்,
வருந்தியே நமக்குப் பெண்ணும்
வலியவே தருவார்; அந்தத்
திருந்திழை யாளும் நாமும்
செருக்கியங் கிருக்கும் நாளில்,

8. மாரனும் இரதி தானும்
மருவிய வாறு நாமும்
சேருவோம் ; சேர்ந்து நல்ல
சேயையும் பெற்றெ டுத்துப்
பேருறு சோம சன்மா
என்றுபே ரிட்டவ் வூரில்
காரகஸ் தனுமாய் வாழ்வு
கனம்பெற இருப்போம் என்றும்.

9. அப்படி யிருக்கு நாளில்
அந்தியிற் பசுக்கள் கட்டக்
கொப்படர் கண்ணுள் செல்லக்
குழந்தையும் அழும்; நாமோடி
இப்படி யடிப்போம் அங்கே
என்ருெரு தடியெ டுத்துச்
செப்பிய பொரிமாத் தோண்டி
சிதறிட அடித்திட் டானே.

10. கலங்கினன் பிரம சாரி
காரகஸ்தங்க ளெல்லாம்
துலங்கிய பொரிமா வைத்த
தோண்டியோ டழிந்த தன்றே!
மலங்குகண் ணீர்கள் சோர
வயிற்றினில் அடித்துக் கொண்டே
நிலந்தனிற் புரண்டு வீழ்ந்து
நெடுந்துயர் அடைந்தா னன்றே.

—வீரமார்த்தாண்ட தேவர்

## 3. நள வெண்பா

### நளனும் அவன் மக்களும்

[தேர்ப்பாகனுக உருமாறி விதர்ப்ப தேசம் வந்திருந்த நளனிடத்திற்குத் தமயந்தி தன் குழந்தைகளைத் தோழி ஒருத்தியுடன் அனுப்பியது.]

1. கோதை நெடுவேற் குமரனையுந் தங்கையையும்
ஆதி யரசன் அருகாகப்—போத
விளையாட விட்டவன்தன் மேற்செயல் நாடென்ருள்
வளையாடுங் கையாள் மதித்து.

### நளன் தன் குழந்தைகளைக் கண்டது

2. மக்களைமுன் காணு மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காள்நீர்
என் மக்கள் போல்கின்றீர், யார்மக்கள்? என்றுரைத்தான்;
வுன்மக் களியானை மன்.

### பிள்ளைகளின் மறுமொழி

3. "மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னை தனைக் கான்விட்டு அவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோம்; எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்" என்றார் அழுது.

### மக்களின் மறுமொழி கேட்ட நளனது நிலை

4. ஆங்கவர் சொன்ன உரைகேட்டு அழிவெய்தி
நீங்கா உயிரோடும் நின்றிட்டான்—பூங்காவின்
வள்ளம்போல் கோங்கு மலருந் திருநாடன்
உள்ளம்போல் கண்ணீர் உகுத்து.

### நளனது வினா

5. "உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிப்போந்து
இங்கண் உறைதல் இழுக்கன்றோ?—செங்கை
வளவரசே" என்றுரைத்தான் மாதவத்தால் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து.

### மக்கள் பகர்ந்த விடை

6. "நெஞ்சாலிம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லாது
அஞ்சாரோ மன்னர், அடுமடையா!—எஞ்சாத
தீமையே கொண்ட சிறுதொழிலாய்! எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி.

7. "எந்தை கழலிணையில் எம்மருங்கும் காணலாம்
கந்து சுளியுங் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
மணிமுடியில் தேய்ந்த வடு."

### நளன் கூறுதல்

8. "மன்னர் பெருமை மடையர் அறிவரோ?
உன்னை அறியாது உரைசெய்த—என்னை
முனிந்தருளல்" என்று முடிசாய்த்து நின்றான்;
கனிந்துருகி நீர்வாரக் கண்.

—புகழேந்திப் புலவர்

88383

# V. பல்சுவைப் பாடல்

## 1. தமிழின் சிறப்பு

1. ஓங்க லிடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி,
ஏங்கொலிநீர் ஞாலத்து இருள்கடியும் ;—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிர் ஒன்று ; ஏனையது
தன்னேர் இலாத தமிழ்.

—தண்டியாசிரியர்

## 2. உழவின் உயர்வு

2. ஏரும் இரண்டுளதாய், இல்லத்தே வித்துளதாய்,
நீரருகே சேர்ந்த நிலமுளதாய் ;—ஊரருகே
சென்று வரற்கெளிதாய், செய்வாரும் சொற்கேட்கில்
என்றும் உழவே இனிது.

—ஔவையார்

## 3. குறளின் பெருமை

3. மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுதும் நயந்தளந்தான் ;—வாலறிவின்
வள்ளுவரும் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தார் ஓர்ந்து.

—பரணர்

## 4. அம்மானை

### சோழன் சிறப்பு

4. கோரத்துக்கு ஒப்போ கனவட்டம் அம்மானை !
கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானை !
ஆருக்கு வேம்புநிகர் ஆகுமோ அம்மானை !
ஆதித் தனுக்குநிகர் அம்புலியோ அம்மானை !
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானை !
வெற்றிப்பு லிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானை !
ஊருக்கு உறந்தைநிகர் கொற்கையோ அம்மானை !
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டி நாடம்மானை !

—ஒட்டக்கூத்தர்

## 5. கோடிப் புண்ணியம்

5. இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்,
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்,
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்,
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்,
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கு ஓர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்.

—பாரதியார்

# செய்யுட் பாடக் குறிப்புரை

## I. கடவுள் வணக்கம்

1. கொள்ளை - மிகுதி ; குலவு - பொருந்திய ; ஓதும் - சொல்லும் ; ஒளிர்வாள் - விளங்குவாள் ; கருணை - அருள்.

2. ஆருயிர் - அருமையான உயிர் ; பார் - உலகம் ; எங்கணும் - எங்கும்.

3. கார் - மேகம் ; அரண் - பாதுகாவல் ; பொறை - பொறுமை ; சூர் - அச்சம் ; துகள் - குற்றம்.

4. கதிரவன் - சூரியன் ; புட்கள் - பறவைகள் ; சுதி-இசை; பொதியலர் - மணம் தங்கியுள்ள பூ ; பூதம் - பஞ்ச பூதங்கள் - நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம்; அதிர் - ஒலிக்கின்றன ; அகமே - மனமே.

## II. இயற்கைக் காட்சி

1. அறல் - கருமணல் ; புனல் - நீர் ; வால்வளை - வெண்சங்கு; புயல் - மேகம் ; பொழில் - சோலை ; இயல் எல்லாம் - இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் ; பூகம் - கமுகு ; மரகதக்காய் - மரகத நிறமான காய் ; மரகதம் போன்ற பச்சை நிறமான பாக்குக்கள் பழுத்ததும் பவள நிறங்கொண்டு உதிர்ந்தன ; நாளத் தாமரை - நீண்ட தண்டையுடைய தாமரை ; இரியும் - தோற்றோடும் ; பகட்டு - பிரகாசமான ; வளமை - செல்வப்பொலிவு.

2. குற்றாலத்து மலைக்குத் திரிகூடமலை என்று பெயர். மால் வரை - பெரியமலை; மடு - பள்ளம்; வாளை, கோளை என்பது முதல்வரால் என்பது வரையில் உள்ளன ஆற்றிலே வரும் மீன் வகைகளின் பெயர்கள். சித்திரம் - அழகு.

3. மீன்கள் - நட்சத்திரங்கள் ; ஆம்பல் - ஆம்பல் பூ ; களி - மகிழ்ச்சி ; அம்புஜம் - தாமரைப்பூ ; ஆழி - சமுத்திரம் ; பானு - சூரியன் ; வெம்மை+கதிர்—வெங்கதிர்—வெம்மையான கிரணம் ; நித்தம் - தினமும்.

## III. நீதிப் பகுதி

### 1. அறநெறிச் சாரம்

இந்நூல் காட்சி, ஒழுக்கம் ஞானம் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டது ; 226 வெண்பாக்களை உடையது. இதன் ஆசிரியர் தென் ஆர்க்காடு ஜில்லாவில் உள்ள முனைப்பாடி என்னும் ஊரினர். ஆதலால், அவர் **முனைப்பாடியார்** என அழைக்கப் பெற்றார். இவரது காலம் கி. பி. சுமார் 12-ஆம் நூற்றாண்டு எனலாம்.

1. காய்வதன்கண் உற்ற-வெறுக்கப்படும் பொருளில் உள்ள; உவப்பதன்கண் - விரும்பப்படும் பொருளிடத்து; காய்தல் - வெறுத்தல்.

2. இன்னு - துன்பம்; பேதைமை - அறியாமை; பித்து - அறியாமை.

3. இருளே - அறியாமை என்னும் இருளே ; எய்துவர் - அடைபவராவர்.

4. ஈதல் - கொடுத்தல்; களைகட்டு - களை பறித்து; வாய்மை - சத்தியம்; அட்டி - இட்டு ; கதிர் - நெற்கதிர்; பைங்கூழ் - பயிர் ; சிறுகாலை - இளமையில்.

## 2. நாலடியார்

இது பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று; நான்கு அடிகளாலாகிய வெண்பாக்களால் ஆக்கப்பட்டமையின் நாலடி என வழங்கப்பட்டது. சிறப்பு நோக்கி 'ஆர்' விகுதி பெற்று நாலடியார் எனப்பட்டது. இதற்கு 'நாலடி நானூறு' என்றும் பெயருமுண்டு. இதனை இயற்றியவர் **சமண முனிவர்கள்** என்பர்.

1. பிணி - நோய்; தெள்ளிதின் - தெளிவாக; குருகு - அன்னப் பறவை.

2. ஊரங்கண நீர் - ஊரிலுள்ள ஜலதாரையினது தண்ணீர்; உரவு - சிறப்புப் பொருந்திய; குன்று - மலை.

3. கேண்மை - நட்பானது; மதுரம் இல் ஆளர் - இனிய தன்மை இல்லாதவர்களுடைய.

## 3. ஆசாரக் கோவை

ஆசாரங்களைக் கோத்த கோவை, ஆசாரக் கோவை எனப்படும். ஆசாரம் - ஒழுக்கம். கோவை - மாலை. இதன் ஆசிரியர் **பெருவாயின் முள்ளியார்**; கி. பி. 7 அல்லது 8-ஆம் நூற்றுண்டினர் எனலாம்.

1. ஒப்புரவு - உபகாரம்; நட்டல் - நட்புக் கொள்ளுதல்.

2. வைகறை - விடியற் காலம்; ஒண்பொருள் - கடவுள்; முந்தையோர் - பெரியோர்.

## 4. திருக்குறள்

திருக்குறள் என்பது சிறந்த குறள் வெண்பாக்களினுல் ஆகிய நூல் என்று பொருள்படும். குறள் என்பது இரண்டடி வெண்பா. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் இதுவரையில் சுமார் முப்பது மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூலை இயற்றியவர் **திருவள்ளுவர்**. இவர் பிறந்த இடம் மயிலாப்பூர். இவர் காலம் இரண்டாம் நூற்றுண்டு என்பர் சிலர்; கி.பி. 5ஆம் நூற்றுண்டு என்று கூறுவாரும் உண்டு.

1. மாண் அடி - சிறப்புப் பொருந்திய அடிகளை; நிலமிசை - உலகத்தில்.

2. மாசு - குற்றம்; அறன் அனைத்து - தருமமானது அவ்வளவே; ஆகுல நீர - ஆரவாரத் தன்மையுடையன.

3. பண்பு - குணம்.

4. மறம் - பகை, தீமை.

5. அனிச்சம் - அனிச்சப்பூ; மோப்ப - மோந்தால்.

6. கவர்ந்து அற்று - பறித்துத் தின்பதனோடு ஒக்கும்.

7. வையகம் - மண்ணுலகம்; வானகம் - விண்ணுலகம்.

8. நடுவு இகந்து - நடுவு நிலைமை நீங்குவதால்; ஆக்கம் - செல்வம்.

9. ஒட்ட - பொருந்த.

11. வெஃகுதல் செய்யார் - விரும்பமாட்டார்; புன்மை இல் காட்சியவர் - குற்றமில்லாத அறிவையுடையவர்; புலம் - ஐம்புலம்: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

14. துன்னற்க - (பிறரிடத்தே) செய்யாதிருக்கக் கடவன்.

15. இடன் இல் பருவத்தும் - செல்வம் சுருங்கிய காலத்தும்; ஒப்புரவிற்கு ஒல்கார் - உபகாரஞ் செய்வதற்குத் தளரார்.

17. எவன் - ஏன்?

18. மழித்தல் - மயிரை மொட்டை அடித்தல்.

21. இறை - கடவுள்.

22. கேடு இல் - கெடுதல் இல்லாத; விழுச் செல்வம் - சிறப்பாகிய செல்வம்; மாடு அல்ல - செல்வம் அல்ல.

23. விலங்கு - மிருகம்; இலங்கு - விளங்கிய.

24. ஒற்கம் - தளர்ச்சி.

25. தீது ஓரீஇ - தீமையிலிருந்து நீக்கி.

27. இடிக்கும் - கோபித்துப் புத்தி சொல்லும்.

28. ஏமாப்பு - வலிமை.

29. இடைக்கண் - நடுவிலே; முரிந்தார் - கெட்டார்.

30. ஞாலம் - பூமி.

31. அஞ்சாமை - தைரியம்; எஞ்சாமை - குறையாமல்.

32. மிகை நாடி - மிகுந்தவைகளை ஆராய்ந்து.

33. தேற்றம் - மனங்கலங்காமை.

35. பொச்சாப்பு - மறதி.

36. அல்லல் - துன்பம்.

38. ஒல்கார் - குறையார்; களிறு - ஆண் யானை.

39. மடி - சோம்பல்.

40. இடுக்கண் - துன்பம்.

1. காய்வதன்கண் உற்ற-வெறுக்கப்படும் பொருளில் உள்ள; உவப்பதன்கண் - விரும்பப்படும் பொருளிடத்து; காய்தல்-வெறுத்தல்.

2. இன்னு - துன்பம்; பேதைமை - அறியாமை; பித்து - அறியாமை.

3. இருளே - அறியாமை என்னும் இருளே ; எய்துவர் - அடைபவராவர்.

4. ஈதல் - கொடுத்தல்; களைகட்டு - களை பறித்து; வாய்மை - சத்தியம்; அட்டி - இட்டு ; கதிர் - நெற்கதிர்; பைங்கூழ் - பயிர் ; சிறுகாலை - இளமையில்.

## 2. நாலடியார்

இது பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று; நான்கு அடிகளாலாகிய வெண்பாக்களால் ஆக்கப்பட்டமையின் நாலடி என வழங்கப்பட்டது. சிறப்பு நோக்கி ‘ஆர்’ விகுதி பெற்று நாலடியார் எனப்பட்டது. இதற்கு ‘நாலடி நானூறு’ என்றும் பெயருமுண்டு. இதனை இயற்றியவர் **சமண முனிவர்கள்** என்பர்.

1. பிணி - நோய்; தெள்ளிதின் - தெளிவாக; குருகு - அன்னப் பறவை.

2. ஊரங்கண நீர் - ஊரிலுள்ள ஜலதாரையினது தண்ணீர்; உரவு - சிறப்புப் பொருந்திய; குன்று - மலை.

3. கேண்மை - நட்பானது; மதுரம் இல் ஆளர் - இனிய தன்மை இல்லாதவர்களுடைய.

## 3. ஆசாரக் கோவை

ஆசாரங்களைக் கோத்த கோவை, ஆசாரக் கோவை எனப்படும். ஆசாரம் - ஒழுக்கம். கோவை - மாலை. இதன் ஆசிரியர் **பெருவாயின் முள்ளியார்** ; கி. பி. 7 அல்லது 8-ஆம் நூற்றுண்டினர் எனலாம்.

1. ஒப்புரவு - உபகாரம்; நட்டல் - நட்புக் கொள்ளுதல்.

2. வைகறை - விடியற் காலம்; ஒண்பொருள் - கடவுள்; முந்தையோர் - பெரியோர்.

## 4. திருக்குறள்

திருக்குறள் என்பது சிறந்த குறள் வெண்பாக்களினுல் ஆகிய நூல் என்று பொருள்படும். குறள் என்பது இரண்டடி வெண்பா. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் இதுவரையில் சுமார் முப்பது மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூலை இயற்றியவர் **திருவள்ளுவர்.** இவர் பிறந்த இடம் மயிலாப்பூர். இவர் காலம் இரண்டாம் நூற்றுண்டு என்பர் சிலர்; கி.பி. 5ஆம் நூற்றுண்டு என்று கூறுவாரும் உண்டு.

1. மாண் அடி - சிறப்புப் பொருந்திய அடிகளை; நிலமிசை - உலகத்தில்.

2. மாசு - குற்றம்; அறன் அனைத்து - தருமமானது அவ்வளவே; ஆகுல நீர - ஆரவாரத் தன்மையுடையன.

3. பண்பு - குணம்.

4. மறம் - பகை, தீமை.

5. அனிச்சம் - அனிச்சப்பூ; மோப்ப - மோந்தால்.

6. கவர்ந்து அற்று - பறித்துத் தின்பதனோடு ஒக்கும்.

7. வையகம் - மண்ணுலகம்; வானகம் - விண்ணுலகம்.

8. நடுவு இகந்து - நடுவு நிலைமை நீங்குவதால்; ஆக்கம் - செல்வம்.

9. ஒட்ட - பொருந்த.

11. வெஃகுதல் செய்யார் - விரும்பமாட்டார்; புன்மை இல் காட்சியவர் - குற்றமில்லாத அறிவையுடையவர்; புலம் - ஐம்புலம்: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

14. துன்னற்க - (பிறரிடத்தே) செய்யாதிருக்கக் கடவன்.

15. இடன் இல் பருவத்தும் - செல்வம் சுருங்கிய காலத்தும்; ஒப்புரவிற்கு ஒல்கார் - உபகாரஞ் செய்வதற்குத் தளரார்.

17. எவன் - ஏன்?

18. மழித்தல் - மயிரை மொட்டை அடித்தல்.

21. இறை - கடவுள்.

22. கேடு இல் - கெடுதல் இல்லாத; விழுச் செல்வம் - சிறப்பாகிய செல்வம்; மாடு அல்ல - செல்வம் அல்ல.

23. விலங்கு - மிருகம்; இலங்கு - விளங்கிய.

24. ஒற்கம் - தளர்ச்சி.

25. தீது ஒரீஇ - தீமையிலிருந்து நீக்கி.

27. இடிக்கும் - கோபித்துப் புத்தி சொல்லும்.

28. ஏமாப்பு - வலிமை.

29. இடைக்கண் - நடுவிலே; முரிந்தார் - கெட்டார்.

30. ஞாலம் - பூமி.

31. அஞ்சாமை - தைரியம்; எஞ்சாமை - குறையாமல்.

32. மிகை நாடி - மிகுந்தவைகளை ஆராய்ந்து.

33. தேற்றம் - மனங்கலங்காமை.

35. பொச்சாப்பு - மறதி.

36. அல்லல் - துன்பம்.

38. ஒல்கார் - குறையார்; களிறு - ஆண் யானை.

39. மடி - சோம்பல்.

40. இடுக்கண் - துன்பம்.

43. சலம் - தீத்தொழில்; ஏமம் ஆர்த்தல் - பாதுகாப்புச் செய்தல்.

46. ஐயம் - சந்தேகம்.

49. கூற்று - யமன்.

50. ஓட்டு - தோல்வி.

52. கேண்மை - நட்பு.

53. அமர் - போர்; தமர் - சுற்றம்.

54. ஒன்னர் - பகைவர்.

55. இழுக்கார் - தவறமாட்டார்.

58. ஊழி - உலகம்; ஆழி - சமுத்திரம்.

59. அசைஇ - சோம்பி.

60. மடிதற்று - ஆடையை இறுகக் கட்டிக்கொண்டு; முந்துறும் - முற்பட்டு நிற்கும்.

# IV. கதைப் பகுதி

## 1. இரட்சகர்

இப்பாடல்கள் **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள்** பாடியவை. 'மலரும் மாலையும்' என்ற கவிதைத் தொகுதியில் 'சரித்திர கவிதை' என்ற பகுதியில் இது தரப்பட்டுள்ளது. ஏசுநாதரின் வாழ்க்கை வரலாறு இதில் உருக்கமாகச் சித்திரிக்கப் படுகிறது.

(1) பன்ன - சொல்ல. (2) பீடம் - இருப்பிடம். (5) கதிரோன் - சூரியன். (7) புவி - பூமி. (8) மருவு - பொருந்திய. (9) சிங்க ஏறு - ஆண் சிங்கம். (13) மன்னும் - நிலைபெற்ற. (14) மேவும் - பொருந்தும். (16) நைவான் - வருந்துவான். (17) முடம் - நொண்டி. (24) ஏளனம் - பரிகாசம்.

## 2. பொரிமாத் தோண்டி

இக்கதை பஞ்சதந்திர நூலில் உள்ளது. இச்செய்யுள் நூலின் ஆசிரியர் **வீரமார்த்தாண்ட தேவர்.**

1. பிரமசாரி - மணமாகாதவன்.

3. தடம் - பாதை.

5. சேங்கன்று - இளங்குட்டி.

7. செருக்கி - கர்வம் கொண்டு.

8. மாரன் - மன்மதன்; இரதி - மன்மதன் மனைவி; சேய் - குழந்தை; காரகஸ்தன் - கிருகஸ்தன்; இல்லறத்தில் வாழ்வோன்.

9. கொப்பு - காதணி; செப்பிய - கூறிய.

10. மலங்கு - ததும்புகிற.

## 3. நள வெண்பா

இந்நூலாசிரியர் **புகழேந்திப் புலவராவர்**. இவர் 'வெண்பாவிற் புகழேந்தி' என்னும் சிறப்புப் பெற்றவர். இவரது காலம் சுமார் 650 ஆண்டுகளுக்கு முன்னாகும். இவரது பாடல்கள் மிக எளிமையும் இனிமையும் அழகும் வாய்ந்தவை.

1. கோதை - மாலை; வளையாடும் - வளையல்கள் அசைந்திருக்கும்; மதித்து - எண்ணி.

2. காணா - கண்டு; நடுங்கா - நடுங்கி; வெய்து உயிரா - பெருமூச்சு விட்டு; வன்மம் - கோபம்; களி - மதம்; மண் - அரசு; கோபத்தையும் மதத்தையும் கொண்டுள்ள யானையையுடைய அரசன்.

3. நிடதத்தார் - நிடத தேசத்து மக்கள்; அன்னை - தாய்; கான் - காடு; ஏக - செல்ல; இந்நகருக்கு - இந்நகரில்.

4. அழிவெய்தி - வருந்தி; நீங்காவுயிர் - மாறாத பெருமூச்சு; உயிர் - உயிர்ப்பு; வள்ளம் - கிண்ணம்; கோங்கு - ஒரு வகை மரம்; உகுத்து - சிந்தி.

5. போந்து - வந்து; அரசு - அரசாட்சி, தேசம்; இழுக்கு - குற்றம்; மாதவம் - பெருந்தவம்.

6. மாற்றம் - சொல், பதிலுரை; மடையன் - சமையல் தொழில் செய்வோன்; நளன் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்ததால், இவ்வாறு குழந்தைகள் கூறினர்; எஞ்சாத - குறையாத; கோமான் - அரசன்; வாய்மை - உண்மை; வலி - வலிமை.

7. எந்தை - எங்கள் தந்தை; கழலிணை - கழல் என்னும் ஆபரணம் அணிந்த இரண்டு பாதங்கள்; எம்மருங்கும் - எல்லாப் பக்கங்களிலும்; கந்து - யானை கட்டும் தூண்; சுளியும் - முறித்துத் தள்ளும்; கடாக் களிறு - மதங் கொண்ட யானை; பணி - பாம்பு, ஆதிசேடன்; பார் - பூமி; மணி முடி - இரத்தின கிரீடம், அழகிய கிரீடம்; தேய்ந்த வடு - அழுந்திய தழும்பு.

8. முனிந்தருளல் - கோபிக்க வேண்டாம்; முடி சாய்த்து - தலை வணங்கி; நீர் வார - நீர் வழிய.

# V. பல்சுவைப் பாடல்

1. **தண்டியாசிரியர்** என்பவர் தண்டியலங்காரம் என்னும் நூலை இயற்றியவர். இவரது இயற்பெயர் தெரியவில்லை.

ஓங்கல் - உதயகிரி, பொதிய மலை. ஞாலத்து - உலகத்து, உலகத்து மக்களின்; இருள் - இருட்டு, அஞ்ஞானம்; கடியும் - நீக்கும், போக்கும்.

2. **ஔவையார்** தமிழில் சிறந்த பெண்பாற் புலவர்; ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நூல்களை யும் பல தனிப் பாடல்களையும் பாடியுள்ளார்.

செய்வார் - பணியாளர். இல்லம் - வீடு.

3. **பரணர்** :—கடைச்சங்க காலத்தில் புகழ் சிறந்து விளங்கிய புலவர். இவர் பாடிய பாடல்கள் பல.

மால் - திருமால்; ஞாலம் - பூமி; மாண் - மாட்சிமைப்பட்ட; வால் - பரிசுத்தம்.

4. **அம்மானை**—இது பெண்கள் அம்மானை ஆடும்போது பாடுவ தாக அமைத்துப் பாடப்படுவது. மூன்று பெண்கள் கூடி இதனை ஆடுவார்கள். ஒருத்தி தலைவன் புகழைக் கூறுவாள். ஒருத்தி அதனை மறுத்து வினவுவாள். மற்றொருத்தி அதற்கு விடை இறுப்பாள். இப்பாட்டு ஒட்டக்கூத்தர் பாடியது.

கோரம் - சோழனது குதிரை; கனவட்டம் - பாண்டியனது குதிரை; ஆர் - ஆத்தி; ஆதித்தன் - சூரியன்.

5. இப்பாடல் பாடியவர் **சி. சுப்பிரமணிய பாரதியார்.** இவர் நமது தமிழ் நாட்டில் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கிய பெருங்கவிஞர்.

ஒளிர - விளங்க.

TB 031(8) N57
தமிழ்நாடு ... கற்பக நூலகம் சென்னை-600 008
88383

RTR
449

# KUDIARASU VASAGAM

**BOOK VIII—FORM III**

By

Vidwan, Rev. Sister EMERENSIA MARY

**PART I** **Price As.**